கி. பி. 9-ம் ... ரைர்க்கின ... ₹ 14614

தொகுதி-கரு.] பிங்கள ஆவணி புரட்டாசி [பகுதி-கக.
l. XV. September—October, 1917. No. 11.

கடைச்சங்ககாலம்.

கடைச்சங்ககாலம் கி. பி. 2-ம் நூற்றாண்டென்றும், 5-ம் நூற்றாண் றும், 8-ம் நூற்றாண்டென்றும் பலர் பலவிதம் கூறுவர். இவ் த்தில் உண்மை யாதெனஆராய்வோம். கடைச்சங்கத்திறுதிக் ்தில் அசோகன்காலத்தில் (கி. மு. 250) தென்இந்தியாவிற்கு புத்தசமயம் தமிழகத்தில் பிரபலமாய்வழங்கிற்றென்று மன லை கூறும்.

உத்தரன்விசித்திரன்உருத்திரன்பைரவன்
சித்திரன்சிங்கன்தனுத்தரன்சிவேதன் (Silap XXVI 182-3)

ஆரியவரசரைச் செங்குட்டுவன்வென்றான். இவர்களில் ஒருவ து கி. பி. 125-க்குமுன் ஆரியநாட்டிலை ஆண்டதாகத்தெரியவில்லை. ல் கி. பி. 127-160ல்ஆண்ட உருத்திரதாமன் என்ற சகவரசன் குட்டுவன்வென்ற உருத்திரனேபோலும். கி. பி. 40-75ல் இயற்றப் ற Periplus (T. R. A. S. 1916 p. p 836-7) உறையூரையே மர்பேருராகக்கூறுகிறதேயன்றிப(T. R. A. S. 1913 p.p. 132-3) ை ஒருசிறிதுங்கூறவில்லையாதலின், அக்காலத்துக்குப்பிறகே ரை, கரிகாலன்கட்டுவித்தானென்க் கருதல்தகும். மேலும் மணி லையிற் சாவகநாடு பலவிடங்களிலும் கூறப்பட்டுளது. அந்நாட்டுக் களுக்குப் பஞ்சகாலத்தில் மணிமேகலைஉணவளித்ததாகவும் சாத்த கூறுவர். சாவகநாடென்பது இக்காலத்தில் ஜாவா என்று கூறப் ங்காடே. அந்நாட்டிற்கு கி. பி. 78-ற்றான் முதன்முதல் இந்தியர்கள் யேறினர். குடியேறின ஆந்திரர்களின்தலைவனை ஆதித்தன்பெய இன்னும் ஜாவாவில் ஒருசகம் வழங்குகின்றது. அங்ஙனம் யேறிச் சிலகாலம்நிகழ்ந்தபின்னரே மணிமேகலை அந்நாட்டிற்குப் ரயிருக்கக்கூடுமாதலின், சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலுங் ப்படும் நிகழ்ச்சிகள் கி. பி. 2-ம் நூற்றாண்டிற்குமுன் நடந்திருக்க யாது.

திருமுறைவகுத்த நம்பி [illegible] ரணர், நக்கீரர் முதலான கடைச்சங்கப்புலவர்களைத் த[illegible] ண்டத்திருவந்தாதியிற் குறிப்பதோடு அவர்கள் பாடல்களை 11-ம் திருமுறையிற் (கி. பி 1025) சேர்த்திருக்கின்றார். மாணிக்கவாசகரியற்றிய திருக்கோவையாரிலும்,

> சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்து மென்சிந்தையுள்ளு
> முறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
> றுறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
> விறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே.

கூடன்மதுரையில் 'ஆய்ந்த' அதாவது முற்காலத்தில் நடைபெற்ற கடைச்சங்கம் இருந்தகாலத்தைக் குறிப்பிடுவதால், மாணிக்கவாசகர் காலத்துக்குப் பலநூற்றாண்டு முன்னமே அச்சங்கம் இருந்திருக்கவேண்டும். கி. பி. 862ற் பட்டமெய்திய (Uttamapalayam inscription of Varaguna) வரகுணனை மாணிக்கவாசகர் "வரகுணனாந் தென்னவனேத்துஞ் சிற்றம்பலத்தான்" எனத் திருக்கோவையாரில் (306) நிகழ்காலத்தாற் குறிப்பதால், அவர் கி. பி 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவராவர். இந்தத் தொண்டத்தொகையிற் சுந்தரமூர்த்திநாயனார் 'பொய்யடிமையில்லாதபுலவர்' எனக் கடைச்சங்கப்புலவர்களைக் கூறினர். ஸ்ரீமான் டி. ஏ. கோபிநாதராயரவர்கள் "செந்தமிழ்" III-ம் தொகுதியில் சுந்தரமூர்த்திகள் வரகுணன் காலத்தவர் எனத் தீர்மானித்திருக்கின்றனர். இதற்கேற்பத் திருவிளையாடற்புராணமும் விறகுவிற்ற படலத்தில் சுந்தரமூர்த்திகள் தோழரான சேரமான்பெருமாளையும் வரகுணன் காலத்தவராகக் கூறும் [illegible] சோபாந்தாதியில் "சங்கத் [illegible] யாக்கொலையானே" என்று அம்பா கூறுவதால், நம்மாழ்வார்காலத்தை [illegible] சரியாய் நிரூபிக்க [illegible] தகும். ஜடிலவர்மபராந்தகனென்னும் பெயர்பெற்ற (கி. பி. 770) ஸ்ரீவரமங்கலத்தையும் (Tiruvaymoli 5.9.19) வரகுணனால் ஏற்படுத்தப்பட்ட [illegible] வரகுணமங்கையையும் (Tiru 897) நம்மாழ்வார் பாடுவதால், ஆதித்தசோழன் (கி. பி. 880-907) காலத்திலேயே நம்மாழ்வார் [illegible] காரணப்பெயரான சடகோபன் என்றது சாதாரணஜனங்களுக்கும் பெயராய்வழங்கிவந்ததாலும், (இச்செய்தி ஒரு சாஸனத்திற் காணப்படுவதாகக் கோபிநாதராயரவர்கள் எனக்கு அன்புடன் தெரிவித்தனர்)

நம்மாழ்வார்காலம் கி. பி. 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியெனவே நிர்ணயிக்கப்படும். நச்சினார்க்கினியர் 'பின்னுள்ளோர்செய்தசிந்தாமணி' யென்றும் 'வஞ்சிப்பொய்யாமொழிபுகழ்மையறுகாட்சித்திருத்தகு முனிவன்' என்றும் எழுதியிருப்பதாலும், பொய்யாமொழிப்புலவர் ஒரு தமிழ்ச்சங்கத்தைக்கூட்டுவிக்கமுயன்றாரென்று தெரிதலாலும், பொய்யாமொழியின்சங்கத்தையே நம்மாழ்வாரழித்தனரென்றும், அச்சங்கத்திலேயே ஜீவகசிந்தாமணி அரங்கேற்றப்பெற்றதென்றும், கடைச்சங்ககாலத்துக்குப்பின்னரே சிந்தாமணி இயற்றப்பெற்றதென்றும் கருதத்தகும். ஸ்ரீமான் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் சிந்தாமணியின்காலத்தைத் தர்க்ககாரணங்களால் சுமார் கி. பி. 814 என்று நிர்ணயித்திருப்பதால், கடைச்சங்கம் கி. பி. 8-ம் நூற்றாண்டில் அல்லது அதற்குமுன்னரே நடைபெற்றிருக்கவேண்டும். திருமங்கையாழ்வாரும் 'சங்கத்தமிழ்' என்றும 'சங்கமுத்தமிழ்' என்றும் சில விடங்களிற்கூறுவதால், கி. பி. 750-க்கு முன்னரே கடைச்சங்கமிருந்ததென்று தெளியலாகும். (Sen Tamil திருமங்கையாழ்வார்காலம் IV p. p. 60-9.)

ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்கள் தமது 'சேரன்செங்குட்டுவன்' என்னுமநூலிற் கடைச்சங்ககாலம் கி. பி. 5-ம நூற்றாண்டென ஸ்தாபிக்கமுயன்றார்கள். இம்முடிபு தவறென்பதை ஸ்ரீமான் K.S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் தெளிவாயும் விரிவாயும் காட்டியிருக்கின்றனர் (Sen Tamil XV p p. 3-24). அவர்களாற் சொல்லப்படாத சில விஷயங்களை மட்டுமே எண்ணெடுத்துக்காட்டுகின்றேன்.

கி. பி. 6-வது, 7-வது நூற்றாண்டுகளிற் பிரபலமாயிருந்த பல்லவர்களைப்பற்றி யாதொன்றுஞ் சங்க நூல்களிற்கேட்கப்படாமையாலே, அவர்களது பிராபல்யத்திற்குமுன்னதாகக் கடைச்சங்கம் நிகழ்ந்திருக்க வேண்டுமென்பது ஐயங்காரவர்களது அபிப்பிராயம். இது யாவருக்கும் உடன்பாடே. ஆனால் கி. பி. 5-ம் நூற்றாண்டிற்றான் அது நிகழ்ந்திருக்கவேண்டுமென்றறிய நியாயமில்லை. அக்காலம் கீழெல்லைமட்டுமே யாகும். கரிகாலனுக்குப்பின் நெடுமுடிக்கிள்ளியும், அவனுக்குப்பின் அவன்றம்பி நலங்கிள்ளியும், நலங்கிள்ளிக்குப்பின் நெடுமுடிக்கிள்ளியின் மகன் தொண்டைமான் இளந்திரையனும் ஆண்டனர். புகாரிலாண்ட கரிகாலன் (பட்டினப்பாலை 285; கலிங்கத்துப்பரணி VIII 20-1:

சிலப் V; மணி I 39-40) மாதவிக்குத் தலைவரிசைகொடுத்தவனாயினும் (சிலப் XV 21-2) அவன் பகைவரை வெல்ல வடதிசைசென்றதைப் பழையசெய்தியாகக்கூறப்படுதலானும் (சிலப் V 89-104; அதற்கு அடியார்க்குநல்லாரது முன்னுரை; மணி I 39-40), வெற்றிவேற்செழியன், கொங்கிளங்கோசர், கயவாகு, பெருங்கிள்ளி முதலான அரசரைக் கூறுமிடத்து, கரிகாலனைப்பற்றி இளங்கோவடிகள் கூறாததாலும் (சிலப் உரைபெறுகட்டுரை), செங்குட்டுவனுக்கு முந்தினதலைமுறையில் அவனிருந்திருக்கவேண்டும். கரிகாலனுக்குப்பின் புகாரையாண்ட (மணி XXIV 25-9) நெடுமுடிக்கிள்ளியும் அவன் தம்பியும் காரியாற்றில் வென்றனர். (மணி XIX 125-7). அப்போரிற் செங்குட்டுவனது அம்மான் நெடுங்கிள்ளி தஞ்சியபிறகு (புறம் 44, 45, 47), செங்குட்டுவன் நேரிவாயில்வெற்றிபெற்றது தான் இரண்டாமுறை வடநாடு செல்வதற்குமுன் தன் மைத்துனன் பெருங்கிள்ளியைப் பட்டத்தில் நிறுவினான் (சிலப் XXVII 118-23; புறம் 16). ஆகையால் அச்செய்திக்கு முன்னமே நெடுமுடிக்கிள்ளி பட்டமெய்தினன். புகாரைக்கடல்கொண்ட பிறகு, நெடுமுடிக்கிள்ளியின் மகன் தொண்டைமான் இளந்திரையன் காஞ்சியில் ஆண்டனன். (மணி XXIV 29-71; XXV 176-204; பெரும்பாணாற்றுப்படை). "இருநிலமருங்கிற் பொருநரைப்பெறாஅச் செருவெங்காதலின் திருமாவளவன்" எனக் கரிகாலனுக்கூறப்படுகிறான். (சிலப் V 89-90). மேலும் மணிமேகலை கச்சிமாநகர்புக்ககாலத்து, ஆங்கு 'தொடுகழற்கிள்ளி துணை இளங்கிள்ளி' கட்டுவித்த புத்தசேதியத்தை மணிமேகலை தரிசித்ததாகக் கூறப்பட்டுளது (மணி XXVIII 172-7). ஆகையாற் கரிகாலனோடு முதல் இளந்திரையன்காலம்வரை சுமார் 100 வருஷகாலம் காஞ்சி சோழரது ஆட்சிக்குட்பட்டிருக்க வேண்டும்.

கி. பி. 437 முதல் 458 வரையாகிலும் சிம்மவர்மன் II என்ற பல்லவன் காஞ்சியிலே அரசபுரிந்தான் (T. R. A. S. 1915 p 482). அவன்றந்தை விஷ்ணுகோபனையே (Ep. Md. VIII p. 160) சமுத்திரகுப்தன் (கி. பி. 340-380) வென்றது. இவன் 85 ஆண்டுகள் உயிர்பெற்றிருந்தனனென்றும், 18 வயதிலேயே பட்டம் எய்தினனென்றுங் கருதியபோதிலும், இவன் பட்டமெய்தியகாலம் கி. பி. 370. இவனுக்கு முன் ஸ்கந்தவர்மன் I, வீரவர்மன், ஸ்கந்தவர்மன் II என்றவர்

காஞ்சியில் ஆண்டனர் (EI VIII 160). தலைமுறை, ஒன்றுக்கு 25 வருஷங்கள் என்ற கணக்கின்படி ஸ்கந்தவர்மன் I கி. பி. 295-ல் பட்டமெய்தியவனாவன். ஆகையால் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலாண்ட சிவஸ்கந்தவர்மன் (Smith's Early History of India p. 471) இவனேயாவன். இவனும் இவனுக்குமுன்னிருந்த பப்பனும் (Circa 270-295 கி. பி.) காஞ்சியிலேயே ஆண்டதாக இவனது தாமிர சாஸனங்களினின்றும் தெரிகின்றது (Venkayya's 'Pallavas'). ஸிம்மவர்மன் IIக்குப் பின் அவன் மகன் ஸ்கந்தவர்மன் III (T.R.A.S. 1915 p. 482), குமாரவிஷ்ணு I, புத்தவர்மன், குமாரவிஷ்ணு II (EI VIII 234), நந்திவர்மன் I, ஸிம்மவர்மன் III, ஸிம்மவிஷ்ணு (T.R.A.S. 1911 p.p. 521-4) இவர்கள் ஆண்டார்கள். ஸிம்மவிஷ்ணு கி.பி. 575-ல் பட்டமெய்தினன் (Smith p. 472). ஸ்கந்தவர்மன் III முதல் ஸிம்மவர்மன் III முடிய 6 அரசர்கள் 575-458=117 வருஷங்கள் ஆண்டது பொருத்தமுடைத்தே. ஸிம்மவிஷ்ணு முதல் நிருபதுங்கவர்மன் (873-899 கி. பி.) முடிய இடைவிடாமற் பல்லவ அரசர்கள் காஞ்சியிலே ஆண்டுவந்தனரென்பது யாவருக்குந்தெரிந்த விஷயமே. ஆகையால் கி. பி. 270 முதல் 900 வரை இடைப்பட்ட காலத்திற் கரிகாலன்முதல் 4 சோழரசரது ஆட்சியிற் காஞ்சியிருப்பது ஏலாதென்பது வெளிப்படை. ஸ்ரீமான் இராகவையங்கார் கடைச்சங்க காலமென்று கூறும் கி. பி. 5-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே, அவர் கூறுவது சிறிதேனும் ஐயமுடைத்தாயினும், விஷ்ணுகோபனுக்கும் அவன்மகன் ஸிம்மவர்மன் IIக்கும் பதில் கரிகாலன்மரபினரன்றோ காஞ்சியிலே இருத்தல்வேண்டும். மேலும், கடப்பாவுக்குஸமீபத்திற் சோழர்கள் குறுநிலமன்னர்களாயிருந்தார்களென்று கி. பி. 640-ல் ஹியூன்த்ஸாங் எழுதியிருப்பதும் கண்டுகவனிக்கத்தக்கது. (Smith p. p. 462-3; Beal ii 227-30; Watters ii 224). ஆகையால், சோழர்கள் காஞ்சியை அரசுபுரிந்திருக்கக்கூடியகாலமும் கடைச்சங்கத் திறுதிக்காலமும் கி. பி. 270-க்கு முன் என்றே பெறப்படும். கி. பி. 3-ம் நூற்றாண்டிற்குப்பின் கடைச்சங்கம்நிகழ்ந்ததென்றால், சங்கநூல்களிற் பல்லவர்களைப்பற்றி ஓரிடத்தேனும் பிரஸ்தாபங்கேட்கப்படாமைக்குத் தக்கசமாதானம்வேண்டும். பல்லவர்கள் காஞ்சியைக் கைப்பற்றி ஆளுதற்குமுன் சோழஅரசர்களை வெற்றிகொண்டிருத்தல்

வேண்டுமென்றே. தங்களது ராஜ்யத்தை வரவரப்பெரிதாக்கி அமைத்துக்கொள்வதெனின் குறுநிலமன்னர்களையும் மற்றை அரசர்களையும் போரிற்புறங்கண்டிருத்தல்வேண்டுமென்றே. மேற்காட்டிய வெற்றித்திறமெல்லாம், குறுநிலமன்னரது சிறுவெற்றியையும் பெரிதாகப் போற்றிப்பாடும் சங்கப்புலவர்களதுகாலத்ததனவெனின், அவைகள் பாடல்பெறுஞ் சிறப்பினவல்ல என அவர்கள் கருதுவதற்குக்காரணந் தான் யாதோ!

கி.பி. 470-ல் வஜ்ரநந்தியால நிறுவப்பெற்ற ஜைனதிராவிடசங்கம் கடைச்சங்கத்தைப் புனருத்தாரணஞ் செய்வதற்கென்றாம், ஆகையால் அக்காலத்துக்குச் சற்றுமுன்புதான் கடைச்சங்கம் இருந்ததென்றுங் குட்டுவ நூலார்கூறுவர். இம்முடிபு எவ்வாறு பெறப்பட்டதெனக் கூறாதுவிடுத்தனர். கடைச்சங்கத்தைப் புனருத்தாரணஞ்செய்வதற்கே வஜ்ரநந்தியின்சங்கம் நிறுவப்பெற்றதென ஆதாரமில்லாமல் ஒப்புக்கொண்டாலும், கி. பி. 470-க்குச் சிறிதுமுன்புதான் கடைச்சங்கமிருந்ததென்று கூறுவதெங்ஙனம்? சங்கம் நிலைகுலைந்ததின்காரணம் இரண்டொரு வருஷங்களுக்குள் மறைந்துவிடுமா? வஜ்ரநந்தியின் சங்கமே கடைச்சங்கமாயிருந்திருக்கலாமோவெனின், அவ்வாறு 'திகம்பரதரிசனம்' கூறவுமில்லை, கடைச்சங்கங்கூட்டுவித்தபெருமை தங்கட்குரியதென ஜைனர்கள் வாதாடவுமில்லை.

அசோகனூற்றிய சில சொற்படங்களை ஆதாரமாகக்கொண்டு அவைகளிற்கூறப்படும் மிக்கசேனையோடு தக்ஷிணத்திற்பிரவேசித்து மோகூரால் அபஜயமடைந்த 'வம்பமோரியர்' குப்தரே என ஐயங்காரவர்கள் கட்டுரைக்கின்றார்கள். ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் இது தவறெனக்காட்டியுள்ளார். வம்பமோரியர் என்னுந் தொடருக்கு ஐயங்காரவர்கள்கூறும்வண்ணம் புதிய மோரியர் என்பதுதான் பொருளாயினும் அத்தொடர் குப்தரைக்குறிக்காது. ஏனெனிற் குப்தருக்கும் மோரியருக்கும் யாதொருஇயைபும் காணப்படவில்லை. மேலும் குப்தர்கள்வருவதற்கு ஒருநூற்றாண்டிற்கு முன்னமே (கி. பி. 227-ல்) அழிவெய்திய ஆந்திரரின்சேனையைத்துணைக்கொண்டு குப்தர்கள் வந்தனரென்பது தகாது. கி. பி. 150-ற் சகவரசன் உருத்திரதாமன் ஆந்திரர்களைவென்றதுமுதற் பின்னோரதுராஜ்யம் அழிவெய்தத் தொடங்கிற்று. இதுதான்றக்கசமயமெனப் பழைய மோரியமரபினர்

ஆந்திரராஜ்யத்தின் புறப்பகுதியான மகதத்தைக்கைக்கொண்டு தோல்வியுற்றவர்களாகச் சேனையாகத்திரட்டித் திக்விஜயஞ்செய்ய வேண்டுமென்று போனவுடன் தக்ஷிணத்தைநோக்கிப் படையெடுத்து வந்து மோகூரால் அபஜயப்பட்டனரெனல் பொருந்தும். இவர்களைப் புதியமோரியரென்றலும் தகும். பின்னர் இவர்களை குப்தர்கள் வென்று கீழ்ப்படுத்தியிருக்கக்கூடும். ஆயினும் இவர்கள் அடியோடு அழிக்கப்படவில்லை. ஏனெனில், ஹ்யூன்த்ஸாங் மகதம்வருவதற்குச் சிறிதுமுன்னர் (கி. பி. 610) அசோகவம்சத்தின் கடைசியான பூர்ணவர்மன் மகதத்தை ஆண்டான (Watters II 115).

சமுத்திரகுப்தன் சோழபாண்டியர்களையடக்கி தான் வென்றதாகக் கூறாததின்காரணம் இவர்களால் அவன் தோல்வியுற்றமையேயென்பர் செங்குட்டுவ நூலாசிரியர். ஜகதேகவீரனான சமுத்திரகுப்தனைச் சோழபாண்டியர்கள் வென்றிருந்தால், அச்செய்தியைச் சங்கப்புலவர்கள் பாடாதுவிடுவரோ? ஆகையால் சமுத்திரகுப்தன்காலத்து, சோழபாண்டியர்கள் பல்லவரது ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களாய் இருந்திருக்கவேண்டும்.

நக்கீரரது களவியலுரை குருசிஷ்யபரம்பரையாய்ப் பத்துத்தலைமுறை வந்து பின்னர் எழுத்தில் நடப்பெற்றனவென்றும், அங்ஙனம் எழுதப்பட்ட உரையின ஆரிகேசரி, பராங்குசன், நெடுமாறன் என்னும் பெயர்பூண்டவனும், சங்கமங்கையில் வென்றவனும் கி. பி. 770-ல் இருந்தவனுமாகிய பாண்டியனைப்பற்றிய செய்யுட்களைக் கொண்டிருத்தலால் நக்கீரர் கி. பி. 770—10×30=470-ல் இருந்தவராதல்வேண்டுமென்றும் ஐயங்காரவர்கள் எழுதுகின்றனர். இக்களவியலுரை ஒன்றே இயக்க ஆதாரமாகாதென்பதைப் பின்னையாராய்ச்சியாளர் [illegible]ன்றார்கள். கி. பி. 470-ல் நக்கீரர் இருந்தாரென்றால், அவர் வஜ்ரநந்தியின்சங்கத்திலன்றோ இருந்திருக்கவேண்டும். மேலும் கி. பி. 770 முதல் அவ்வுரை எழுதப்பட்டதென்றும், வெகுகாலத்திற்குப்பின்னர் எழுதப்படவில்லையென்றும் சொல்வதற்கு நியாயமென்னை? நக்கீரரே அவ்வுரையை எழுதினாரென்றும், அரிகேசரியைப்பற்றியசெய்யுட்கள் பிரக்ஷிப்தங்களென்றும் சொல்லலாகாதோ? 'இங்ஙனம்வருகின்றது உரை' என்றால், குருசிஷ்யக்கிரமத்தைச் சிறிது தூரஞ்சொல்லிப் பின்னுள்ளோரைக்கூறாது

விடுத்து இவ்வாறுவருகின்றதுஉரையெனப் பொருள்கோடல் தவறாமோ? புத்தராதுகாலத்துக்குப்பின் வருஷத்திற்குஒருபுள்ளியாக இட்டுவைத்துப் பின் சிலவருஷமாகப் புள்ளியிடமறந்து பின்னால் மொத்தமாகக்கணக்கிட்டவிபரமும் ஈண்டைக்கு ஒப்புநோக்கத்தக்கது (Smith p. 47; 9 R. A. S. 1905 p. 51).

சமுத்ரகுப்தன்காலத்தில் மாளுவத்தைப் பலசிற்றரசர்கள் ஆண்டுவந்தனரென்றும், 'நூற்றுவர்கன்னர்' இவரேயென்றும் குட்டுவெறுலார் கூறுவர். அவரோ ஒப்புக்கொண்டபடி, கி. பி. 390-ல் சந்திரகுப்தன் II மாளுவத்தைக் குப்த ஏகாதிபத்தியத்திற்குட் சொண்டுவந்தானென்றால், கி. பி. 5-ம் நூற்றாண்டில் அந் நூற்றுவர்கன்னர் செங்குட்டுவனுக்கு எவ்வாறு உதவிசெய்யக்கூடும்? கி. பி. 2-ம் நூற்றாண்டிலும் அக்கன்னர் ஏன் மாளுவத்தை ஆண்டுகொண்டிருக்கக்கூடாது?

சிலர் 'நூற்றுவர்கன்னர்' என்னுந்தொடர் யக்ஞஸ்ரீ சாதகர்ணியைக்குறிக்குமென்று கருதுவாராயினர். 'நூற்றுவர்கன்னர்' (சிலப் XXVI 163), 'இயிருபதின்மர்' (சிலப் XXVII 177), 'ஐம்பத்திருவர்' (XXVI 223), 'மாளுவவேந்தர்' (XXX 159), 'ஈரைஞ்ஞூற்றுவர்' (XXVII 188) என்பனபோன்ற பிரயோகங்களைநோக்கினால் 'கன்னர்' என்பது பன்மையைக்குறிக்கின்றதென விளங்கும். யக்ஞஸ்ரீயென்பவன் ஆந்திரவரசன். கி. பி. 125-ல் டாலமி உஜ்ஜினியில் சகன்சஷ்டனன் ஆண்டதாகக்கூறுவதாலும், அவனுக்குப்பின் கி. பி. 130 முதல் 390 வரை மாளுவத்தை உருத்திரதாமன்முதலான சகவரசர்கள் ஆண்டுவந்ததாலும், மாளுவத்திற்கும் ஆந்திரருக்கும் யாதொருசம்பந்தமும் இல்லை. ஆதலால் ஆந்திரரை மாளுவவேந்தர் என்றுசொல்லுதல் பொருந்தாது. மேலும் 'சாதகர்ணி' என்றால் மட்குடத்தையொத்தகாதினன் எனப் பொருள்படுமேயன்றி நூற்றுவர்கன்னரெனப்பொருள்படாது. புராணங்களிலும் சாமுத்திரத்திலும் (Benares Ed. II 7 p. 149) இரகுவம்சத்திலும் (XIII 38) 'சதகர்ணி' என்றுகாணாது 'சாதகர்ணி'யென்றே காணப்படும். அன்றியும் செங்குட்டுவன் வடதிசையாத்திரைசென்றது கி. பி. 157—160-ல என்று கீழேகாட்டுகிறேன். யக்ஞஸ்ரீ பட்டமெய்தியதூஉமோ கி. பி. 173 (Smith Table facing p. 218). ஆகையால் நூற்றுவர்கன்னர் வேறு, யக்ஞஸ்ரீ வேறு.

"தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் போரிற் றோலையுண்ட திதியன் (அகம்-36) இலங்கையில் 5-ம் நூற்றாண்டில் ஆண்ட ததியனேயென்று ஐயங்காரவர்கள் கூறுவர். முதலில் இவ்விருவருக்கும் பெயர் ஒற்றுமைகூட இல்லை. திதியனென்பவன் பொதிய மலைச்சாரலில் அறந்தையெனுமூரிலிருந்த குறுநிலமன்னனென்று அகநானூற்றுச்செய்யுட்கள் (196, 321) உணர்த்துகின்றன. ததியனோ வெனில் இலங்கையரசன். இந்தத் ததியனும் கி. பி. 6ம் நூற்றாண்டிலிருந்தான். ததியன் பிதியன இருந்து புத்தநிர்வாணத்திற்கு 990 வருஷங்களுக்குப்பின் இருந்ததாக மஹாவம்சங்கூறும். இலங்கைச் சரித்திரசம்பந்தப்பட்டவரை புத்தர் நிர்வாணமடைந்தது கி. மு. 489 என்று நாம் சொல்லவேண்டுமென்று பின்னர் காட்டப்படும். ஆகையால், ததியன்காலம் 990—488=502 கி. பி. என்று தெரியலாகும்.

இதுகாறும் கடைச்சங்ககாலம் 5-வது நூற்றாண்டென்று கூறுவது பொருந்தாதென்றும், ஐயங்காரவர்கள் காட்டப்பட்ட காரணங்களிற் சில அச்சாலும் 2-வது நூற்றாண்டென்பதற்கே பொருந்துகின்றனவென்றுங் காட்டினேன். இனி இம்முடிவிற்கு ஏற்ற சரித்திர ஆதாரங்களைச் சிறிது கூறுவேன்.

பாண்டியவம்சாவளியை அறிவதற்குச் சின்னமனூர்ச்சாஸனங்களும், வேள்விக்குடிச்சாஸனமும், ஆனைமலைச்சிலாலிகிதமும் பெரிதும் உபகாரப்படுகின்றன. அவற்றுட் சின்னமனூர்ச்சாஸனம்பெரியதிற் பின்வரும் வம்சாவளி பெறப்படுகின்றது. சம்ஸ்கிருதப்பகுதி (1) அரிகேசரி. அவன்மகன் (2) ஜடிலன். அவன்மகன் (3) இராஜஸிம்மன் I. அவன்மகன் (4) வரகுணன், தமிழ்ப்பகுதி. இது சாஸனஞ்செய்வித்தோனது முன்னோரின் பெருமைகளைக் கூறுமிடத்து, தலையாலங்கானத்தில் இரண்டு அரசரை வென்றுகொண்டதையும், மகாபாரதத்தைத் தமிழிற்செய்வித்ததையும், மதுரையிற் சங்கங்கூட்டுவித்ததையும் குறிக்கின்றது. (1) பல்லவரைச் சங்கரமங்கையில்வென்ற பராங்குசன். அவனுக்குப்பின் (2) இராஜசிம்மன். அவன்மகன் (3) வரகுணன். சின்னமனூர்ச்சிறியசாஸனம் இரண்டுபாண்டியரையே குறிக்கின்றது. (1) ஜயந்தவர்மன். அவன்மகன் (2) அரிகேசரி, அசமசமன், மாறவர்மன். வேள்விக்குடிச்சாஸனத்தைப்பற்றி ஸ்ரீமான் வெங்கையரவர்கள் எழுதி வெளியிட்டிருப்பதினின்றும் பின்வரும் வம்சாவளி பெறப்படுகின்றன.

சம்ஸ்கிருதப்பகுதி.	தமிழ்ப்பகுதி.
	பலயாகமுதுகுடுமிப்பெருவழுதி முதன்முதற் சாஸனங்கற்பித்தவன் வெகுகாலத்திற்குப்பின
	களப்பிரர் ஆக்கிரமம்
	கடுங்கோன். களப்பிரரையோட்டி அரசவனியைக் கைக்கொண்டவன்
	மாறவர்மன் அவனிசூளாமணி
	செழியன்சேந்தன்
மாறவர்மன	அரிகேசரி. அசமசமன், மாறவர்மன், நெல்வேலிவென்றவன்
ரணதீரன	கோச்சடையன்
மாறவர்மன இராஜசிம்மன பல்லவ மல்லனை வென்றவன	தேர்மாறன
ஜடிலபராந்தகன (வேள்விக்குடிச் சாஸனம் இவனோடு நின்றுவிடாது சாஸனம் புதுக்கியவன் இவனென்பதுமட்டும் புலப்படுத்துகின்றது)	(நெடுஞ்சடையன், பராந்தகன் சாஸனம் புதுக்கியவன்).

இச்சாஸனத்திலுள்ள அரசர்கள், சம்ஸ்கிருதத்தொடர்மாறன்காரி மூவேந்தமங்கலப்பேரரையன் சம்ஸ்கிருதப்பகுதியிலுள்ள ஸ்லோகங்கள் இவனே பாடினான், என்பதை அவற்றின் ஈற்றிலேயே விளக்குகின்றன.

கரவந்தபுரத்து யமானாட்டான மதுரகவியென்னும் வைத்தியர் கி. பி. 770 (கலி 3871) சாதத்தினை நரசிங்கமங்கலத்தில் விஷ்ணுவுக்குக் கற்கோவிலெடுப்பித்தானென்றும், அவன் பராந்தகபாண்டியனது உத்தரமந்திரி என்றும், ஆனைமலைச் சிலாலிகித சம்ஸ்கிருதப்பகுதி தெரிவிக்கின்றது. அதன் தமிழ்ப்பகுதி மாறன்சடையனது உத்தரமந்திரியாகிய மாறன்காரியென்ற வைத்தியன் மூவேந்தமங்கலப்பேரரையனாலே அக்கற்கோவில் கட்டப்பட்டதென அறிவிக்கின்றது.

முதலாவதாக வேள்விக்குடிச்சாஸனத்திலுள்ள ஆக்ஞப்தியும் ஆனைமலைச்சிலாலிகிதத்திற் கூறப்பட்டவரும் ஒருவரேயென்று விளங்குகின்றது. ஏனெனில் இருவரும் காரவந்தபுரத்திலுள்ளவர்கள். மாறன்காரி, ஸ்ரீவைத்தமங்கலப்பேரரையன், மதுரதரன் அல்லது மதுரகவி என்றபெயருடையவர்கள். ஆதலால் இப்பெயருடையார் சேவித்து வந்த அரசனும் ஒருவனேயாதல் வேண்டும். ஆகவே நெடுஞ்சடையன், ஸ்ரீவரன், பராந்தகன் என்பனவெல்லாம் அவனையே குறிப்பனவென்பதும் அவன் கி. பி. 770-ல் அரசுபுரிந்துகொண்டிருந்தானென்பதும் வெளிப்படை. வேள்விக்குடிச்சாஸனம் 2-ம் பகுதியையுங்கற்பித்தது ஒருவனாகவே இருக்கவேண்டும். ஆகையால் ஜடிலன் என்பதும் மாறன்சடையன்பராந்தகனுக்கு ஒருபெயராகவேண்டும். எனவே இந்த ஜடிலனும் சின்னமனூர்ச்சாஸனப்பெரியதிற்காணப்படும் ஜடிலனும் ஒருவனே. ஆகையால் ஜடிலனது தந்தை தேர்மாறன், ராஜஸிம்மன், அரிகேசரியென்ற பெயர்களுடையவனென்பதும் பல்லவமல்லனை ஜயித்தவனென்பதும் தெரிகின்றது. நந்திவர்மபல்லவமல்லனும் அவன் சேனைபதி உதயசந்திரனுங்கொடுக்கப்பட்ட உதயேந்திரசாஸனம் பாண்டியனொடு சங்கரமங்கையிற் போர்செய்ததைக் கூறுகின்றது. இதிலிருந்து பல்லவமல்லனை வென்றதாகச்சொல்லிக்கொள்ளும் ஜடிலன் தந்தையும் சின்னமனூர்ச்சாஸனப்பெரியதில் குறிப்பிடும் பகுதியிற்காணப்படும் பராங்குசனும் ஒருவனென்பதும், பல்லவமல்லன் என்றது நந்திவர்மபல்லவமல்லனை என்பதும் தெளிவுபடும். வேள்விக்குடிச்சாஸனத்திலிருந்து தேர்மாறனது தந்தை கோச்சடையன் ரணதீரனென்றும் இவனது தந்தை நெல்வேலியில் வென்ற மாறவர்மன் அரிகேசரி அசமசமன் என்ற பேர்கள் உடையவனென்றும் அறியலாகும். கடைசியிற்கூறிய இவ்வரசனே சின்னமனூர்ச்சிறுசாஸனத்திற்கூறப்பட்ட அரிகேசரி அசமசமன் மாறவர்மனாகவேண்டும். இவர் ஜடிலனுக்கு (கி. பி. 770) மூன்றுதலைமுறைக்கு முன்னிருந்தவனாயாற் கி. பி. 7-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவனாதல்வேண்டும். சுந்தரமூர்த்திநாயனார் திருத்தொண்டத்தொகையிற்கூறப்பட்ட நெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாறநாயனார் இவரே. பெரியபுராணங்கூறுவதுபோல் இவரே சம்பந்தரால் ஜைனசமயத்தினின்று சைவசமயத்திற்குத் திருத்திப் பணிகொள்ளப்பட்டவராவர். களவியலுரையும் உதயேந்திரசாஸனமுந் தெரிவிக்கின்றபடி சங்கரமங்கையிற்பொருத ஜடிலன்தந்தையும் நெல்வேலியிலும்

அமர் புரிந்திருக்கவேண்டும். ஒரோயிடத்திற் பொருந்த அரசர்களிருவர் பேராற்றலுடையராய் இருக்கின்றமை அவர்களுள் ஒருவரோடொருவரை மயங்கிச் சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுவதற்கு இடந்தருகின்றது. நெல்வேலிவென்ற நெடுமாறனது தந்தை செழியன் சேந்தன்ஜயந்தவர்மன் என்றும் தெரிகின்றது. வேள்விக்குடிச்சாஸனம் செழியன்சேந்தனது தந்தை அவனிசூளாமணியென்றும் இவனது தந்தை கடுங்கோனென்றும் தெரிவிக்கின்றது. ஆகவே கீழ்வரும்வமிசாவளி பெறப்படுகின்றது.

பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதி

|

. . . .

களப்பிரரது ஆக்ரமம்

. . . .

கடுங்கோன் (களப்பிரரை வென்றவன்)

|

மாறவர்மன் அவனிசூளாமணி

|

செழியன் சேந்தன் ஜயந்தவர்மன்

|

அரிகேசரி அசமசமன் மாறவர்மன், நெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாறநாயனார்

|

கோச்சடையன்ரணதீரன்

|

அரிகேசரி, பராங்குசன், தேர்மாறன், இராஜஸிம்மன் சங்கரமங்கையிற் பல்லவமல்லன் நந்திவர்மனை வென்றவன். நெல்வேலியிலும் வென்றவன்

|

ஜடிலவர்மன் நெடுஞ்சடையன் பராந்தகன் இவனது உத்தரமந்திரி மாறன்காரி (கி. பி. 770)

|

இராஜஸிம்மன் I

|

வரகுணமஹாராஜா (கி. பி. 862-ற் பட்டமெய்தியவன்)

இவர்களுள் நெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாறநாயனார் கி.பி. 680 க்குப்பின் பட்டமெய்தினரென்றல் பொருந்தாது. ஏனெனில் கி. பி. 642-ல வாதாபியையழித்தசிறுத்தொண்டரை நேரிற்சந்தித்த 16-வ பிராயத்தினராகிய சம்பந்தர் இந்நெடுமாறனை சைவசமயியாக்கினர்.

ஆகவே இந்நெடுமாறனிடமிருந்து மூன்றுதலைமுறைக்கு 770—680=90 வருஷம் கிடைக்கின்றது. இது ஒவ்வொருதலைமுறைக்கும் சராசரி 30 வருஷந்தருகின்றது. இவ்வாறுகணக்கிடின், கடுங்கோன் கி. பி. 680—3×30=590-ல் இருந்தானாவன். இவனுக்குமுன் களப்பிரராஜ்யாதிக்கமும், அதற்குமுன் நன்மாறனும், நன்மாறனுக்குமுன் உக்கிரப்பெருவழுதியும், உக்கிரப்பெருவழுதிக்குமுன்பு தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனும், இவனுக்குமுன்பு வெற்றிவேற்செழியனும், இவனுக்குமுன்பு ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனும் இருந்தவர்கள். சராசரி 30 வருஷம் இருந்தார்களென்று வைத்துக்கொண்டால், ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் இறந்தகாலம் 590—5×30=440 கி. பி. ஆகும். கி. பி. 590 தொடங்கி 900முடிய உள்ள பாண்டியர்களில் ஒருவரதுபெயராவது சங்கநூல்களிற் காணப்படாமையாலே கி. பி. 450-க்குப்பின் கடைச்சங்கம்நிகழ்ந்ததாக எவரும் சொல்லத்துணியார். மேலும் களப்பிரராஜ்ய ஆட்சி சிலநூற்றாண்டுகளாக இருந்திருக்கலாமென்பதையும், பாண்டியர்களுட் பின்வந்தவர்கள் பிருதியும்வடமொழிப்பெயர்களையும் முன்னோர்கள் தனித்தமிழ்ப்பெயர்களையுங்கொண்டிருந்தார்களென்பதையும், சங்கநூல்களிற்பயின்றுள்ளசோழர்கள் விஜயாலயன்காலமுதற்கொண்டு (கி. பி. 846) 13-ம் நூற்றாண்டு இறுதிவரையுள்ளசோழர்களன்று என்பதையும், விஜயாலயன்காலத்திற்குச் சிலநூற்றாண்டுகட்குமுன்னும் (கி. பி. 640) சோழர்களைக் கடப்பாவிலுள்ள தாழ்ந்தகுடிப்பினராக ஹியூன்த்ஸாங் வரைந்துள்ளாராதலிற் சோழர்களுக்குப் பிராதான்யம் ஏற்படவில்லையென்பதையும், ஆனாற் சங்ககாலத்திற் சோழர்கள் உந்நதநிலையிலிருந்தார்களென்பதையும் உற்றுநோக்கின், கி. பி. 5-ம் நூற்றாண்டிற்கும் வெகுகாலத்திற்குமுன்னமே கடைச்சங்கம் நடைபெற்றிருக்கவேண்டுமென்பது தெளிவாகும்.

சுமார் கி. பி. 600-ல்இருந்த அப்பர், தமதுதேவாரத்தில், திருப்பாசூர்ப்பதிகத்தில், 'விண்ணாகி' என்றுதொடங்குஞ்செய்யுளிற் சங்ககாலத்தரசனாகிய கோச்செங்கட்சோழன் முற்பிறப்பிற் சிலந்தியாயிருந்த வரலாற்றையும், திருப்புத்தூர்ப்பதிகத்தில் 'புரிந்தமரர்' என்னுஞ்செய்யுளில், நக்கீரரோடுசம்பந்தப்பட்ட தருமிக்குப் பொற்கிழியளித்தகதையையுஞ் சுட்டிக்கூறுகின்றார். நக்கீரர்முதலியோர் நாவுக்கரசருக்கு

எத்துணைக்காலத்துக்கு முந்தியிருந்தவராதல்வேண்டும்! செங்கணானைச் சம்பந்தரும், சுந்தரரும், திருமங்கையாழ்வாரும் பாடியிருப்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது.

இங்ஙனமிருக்கவும் ஸ்ரீமான் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் 8-வது நூற்றாண்டுதான் கடைச்சங்ககாலமென்று வெளியிட்டிருப்பது ஆச்சரியம். இம்முடிபு சிலாலிகித ஆதாரத்தோடு முரண்படுகின்றது. சிலப்பதிகாரவிருத்தாந்தம் அவர்கூறும்வண்ணம் கி.பி. 756-ல் நிகழ்ந்ததாயின், அக்காலத்திலிருந்த பாண்டியன் அரிகேசரியாயன்றோ இருத்தல்வேண்டும். நெடுஞ்செழியன் ஆமாறில்லையே. மணிமேகலைச்செய்திகள் கி. பி. 771-ல் நடைபெற்றனவாயின் அக்காலத்துள்ள பாண்டியன் ஜடிலனேயன்றி வெற்றிவேற்செழியனல்லனே. ஆகவே, நெடுஞ்செழியனும் (II) ஜடிலனதுமகனை இராஜஸிம்மனாகவேண்டும். இஃதுண்மையாயின், மேலே ஆராய்ந்த சாஸனங்களுள் ஒன்றேனும் இராஜஸிம்மனைத் தலையாலங்கானத்துச்செருவென்றவனாகச் சொல்லாததுந்தவிர, அவற்றுளொன்று, அவனது முன்னோரிற் பெயர்குறியாத ஒருவனுக்கு அக்கீர்த்தியைக்கொடுத்திருப்பது ஆச்சரியமேயன்றோ.

புத்தசமயம் கடைச்சங்ககாலத்தில் மிகவும் உன்னதநிலையிலிருந்ததென்பது மணிமேகலைநூலால் அறியக்கிடக்கின்றது. கி. பி. 600-க்கு வெகுகாலத்திற்கு முன்னமே அப்புத்தசமயம் தளர்வடைந்து எல்லாராலும் பரிகசிக்கத்தகுந்தநிலைமையில் வந்துவிட்டதென்று யுவான்த்ஸாங் கூறுவதாலும், மகேந்திரவர்மன் (கி. பி. 600—625) எழுதிய மத்தவிலாஸப்ரஹஸனத்தாலும் தெரிகிறது. பாஹியானும் (கி. பி. 399—414) இந்தியாவிற் புத்தசமயங்குன்றிவருவதாக எழுதியிருக்கின்றார். ஆகையாற் கடைச்சங்ககாலம் கி. பி. 400-க்குப்பின் எனல் பொருந்தாது.

சிலப்பதிகாரத்தில் வடநாட்டியாத்திரைசென்ற செங்குட்டுவன் தனிமுடியரசரநேகரை வென்றதாகச் சொல்லியிருக்கிறது. சந்திரகுப்தன் II கி. பி. 390-ற் சகரைவென்றதுமுதல் ஸ்கந்தகுப்தன்வரை (கி. பி. 480) வடஇந்தியாவிற் குப்தர்கள்மட்டுமே ஆண்டனர். ஆதலால் அக்காலத்தில் வடஇந்தியாவிற் பலர் தனிமுடிமன்னர் இருந்தாரென்றல் ஏலாது. கி. பி. 480-க்குப்பின் 550 வரை யசோதர்மனும்

அவன் வழியினரும், குப்தரும், சிலகாலம் ஹூணரும் மட்டுமே ஆண்டனர். செங்குட்டுவன் கி. பி. 5-ம் நூற்றாண்டில் இருந்தானெனின் அவன் குப்தரைமட்டுமே போரில் எதிர்த்திருக்கக்கூடும். கி. பி. 370-ல் சமுத்ரகுப்தன் திக்விஜயஞ்செய்து ஆரியவரசர்பெரும்பாலாரையுந் தனக்குக் கீழ்ப்படுத்தினான். கி. பி. 320-க்குப்பின் சங்ககாலமெனின், அக்காலத்துப் பிரதானமாயிருந்த குப்தவரசரைச் செங்குட்டுவன் வென்றதாகக் கூறாததுவியப்பே.

இனி, சிலப்பதிகாரத்தினும் மணிமேகலையினும் விரித்துரைக்கப்படுஞ்செய்திகள் இன்னகாலத்து நிகழ்ந்தனவென்று புத்தநிர்வாணகாலம் ஒன்றினின்றே உணரக்கூடுமாதலின், அதன்காலம் இன்னதென்று நிச்சயிப்பது ஆவசியகம். தன் அபிஷேகத்துக்குப்பின் 14-வது ஆண்டிற் பிரசுரிக்கப்பட்ட சிலாலிகிதங்களில் அசோகமௌரியன், ஈஜிப்ட் டாலமிபிலடெல்பாஸ் II (கி. மு. 285-247), மாஸிடோனியா அண்டிகோனஸ் கொனடஸ் (277-239), ஸிரீனி மகஸ் (கி. மு. 258-ல் இறந்தவன்), இபைரஸ் அலெக்ஸாண்டர் (கி. மு. 272-ல் பட்டமெய்தியவன்) ஆகிய இவர்களைத் தன் சமகாலத்தரசராகக் கூறினர் (Rapson's Ancient India p. 21; Smith p. p. 196-7). ஆகையால் அசோகனது அபிஷேககாலம் 272 to 258) + 13 = கி. மு. 285 to 271 ஆகும். அலெக்ஸாண்டர் இந்தியாவிற்குப் படையெடுத்துவந்தபோது, சுமாலிய நந்தன் ஆண்டுவந்தான். அதன்பின்பே சந்திரகுப்தன் அரசனாயினன் (கி. மு. 326). ஆகையாற் சந்திரகுப்தனது அபிஷேககாலத்திற்கும் அசோகனது அபிஷேககாலத்திற்கும் இடைப்பட்டகாலம் 326-271 = 55-க்குமேல ஆகாது. புராணங்கள் சந்திரகுப்தனுக்கு 24 ஆண்டுகளும், பிந்துஸாரனுக்கு 25 ஆண்டுகளும் தருகின்றன. மஹாவம்சம் சந்திரகுப்தனுக்கு 24 ஆண்டுகளுடன், பிந்துஸாரனுக்கு 28 ஆண்டுகளும் தருகின்றது. அசோகனுக்குப் பட்டமெய்தி 4வருஷங்கட்குப்பின்னரே அபிஷேகம் ஆயிற்று. ஆகவே, சந்திரகுப்த அசோக அபிஷேகங்களுக்கு இடைப்பட்டகாலமாகப் புராணங்கள் 53 ஆண்டுகளையும், மஹாவம்சம் 56 ஆண்டுகளையும் தருகின்றன. இவைகளுள் மேற்கூறியவற்றால் 56 மிகைப்படுமாகையால் 53-ஐ ஒப்பத்தக்கது. ஆகவே, சந்திரகுப்தனது அபிஷேககாலம் 326-க்கும் 271 + 53 = 324-க்கும் இடைப்பட்டகாலம். அலெக்ஸாண்டர் இந்தியாவைவிட்டுப்போனது 325

ஸெப்டம்பரில் (Smith p. 114). கார்மீனியாவிலிருக்கும்பொழுது (324 பிப்ரவரி Smith p. 114) தன் அதிகாரிகளை இந்தியர்கள்கொன்றதாகக் கேள்வியுற்றான் (Smith 109, 110). தலையாய்நின்று இக்காரியத்தைமுற்றுவித்தவன் சந்திரகுப்தன் (Justin XV 4). இதற்கு முன்பே அவன் அரசனாய்விட்டான் (Smith 43-4, 117-8); ஆகையாற் சந்திரகுப்தனது அபிஷேககாலம் கி. மு. 325. அசோகனது அபிஷேககாலம் கி. மு. 272. அசோகனதுஅபிஷேகம் புத்தர் உலகுநீத்து 218-வது வருஷத்திலென்று இலங்கைச்சரிதங்களெல்லாவுங்கூறும். ஆகையாற் புத்தநிர்வாணகாலம் 272+217=கி. மு. 489 எனப் பெறப்படும். ஆகையால் இலங்கைச்சரிதங்களை ஆதாரமாகக்கொண்டு காலநிர்ணயஞ்செய்யுங்கால், கி. மு. 489யே புத்தநிர்வாணகாலமாகக் கொள்ளவேண்டும்.

இம்முடிவை இரண்டொரு உதாரணங்களாற் சரியெனக்காட்டுகின்றேன். ஸில்வேன்லெவி என்பவர் இலங்கை அரசனான மேகவர்ணன் சமுத்ரகுப்தனது காலத்தவனென்றும் இக்குப்தவரசன் கி. பி. 370-ல் தென்னிந்தியாவிற்குப் படையெடுத்துவந்தபோது இலங்கையினின்றும் அடியுறையாக அரியபொருள்களை அனுப்பினானென்றுங் காட்டியிருக்கின்றார் (Journal Asiatique 1900 Pt. I. p. p. 316 for 401). இவன் புத்தருக்கு 833 வருஷத்திற்குப்பின்வந்து 28 வருஷம் ஆண்டானென்று மஹாவம்சங்கூறும். ஆதலால் மேகவர்ணன்காலம் கி. பி. 345-373 ஆகும். இது பொருத்தமுடையதாகவே இருக்கிறது. மேலும் பாஹியான் கி. பி. 399-ல் சீனத்தைவிட்டுப்புறப்பட்டு கி. பி. 404-ல் இந்தியாவிற்குள்வந்து இவ்விடத்தே கி. பி. 410 வரை இருந்தான். பின்னர் இலங்கைக்குப்போய் அங்கே 411-2-ல் தங்கியிருந்தனன். மேகவர்ணனது 9-ம் ஆண்டில் (கி. பி. 353) இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்தரதுதந்தம் எல்லோரும் தரிசனஞ்செய்யும் பொருட்டு ஓர் பொதுவிடத்தே பிரதிஷ்டைசெய்யப்பட்டமை பாஹியனாற்சொல்லப்படுகின்றது (Wijesingha's mahavamsa p. 154). இன்னும் த-மோ-கியு-டி என்னும் புகழ்பெற்ற சிரமணர் பாஹியானது காலத்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இவர் இம்மஹாவம்சத்திற் புத்ததாஸனதுகாலத்தவராகக்கூறப்படுகிற ‘தம்மகதி’யாயிருக்கவேண்டுமென்றுதோன்றுகிறது. தான் * இலங்கையிற்றங்கியிருக்கும்போது

மஹாவிஹாரம் இலங்கையரசனுற் கட்டப்பெற்றதென்று பாஹியான் தெரிவிக்கின்றார். இவ்விஹாரம் புத்ததாஸனுற் நிர்மாணமாயதென்று மஹாவம்சங் கூறும். இக்காரணங்களாற் புத்ததாஸன் கி. பி. 411-ல் இருந்ததாக ஏற்படுகின்றது. மஹாவம்சத்தின்படி புத்ததாஸன் புத்தருக்குப்பின் 870-899 அரசபுரிந்தான். அதாவது அவன்காலம் 382-411 என்றாகும். இதுவும் பொருத்தமுடையதாகவே காணப்படுகின்றது. ஆகையால் புத்தர்நிர்வாணகாலம் கி. மு. 483 என இலங்கைச்சரிதங்கள்கொண்டமை மேற்காட்டியவற்றுல் நன்கறியக்கிடக்கின்றது. இனிச் சிலப்பதிகாரமணிமேகலைசெய்தோர்கள் நிகழ்ந்தகாலத்தை நிச்சயிப்பதற்கு மேற்கண்டகாலம் எவ்வாறு உதவுகின்றதென்பதனை விவரிக்கின்றேன்.

பத்தினிதேவிக்குக் கோயிலமைப்பித்துச் செங்குட்டுவன் விழவியற்றியகாலத்தே உடனிருந்த இளங்கோவடிகள் ('யானுஞ்சென்றேன்' 171), இவ்விழாவிற்கு "கடல்சூழிலங்கைக் கயவாகுவேந்தனும்" (160) வந்திருந்தனென்றும், அவன் இலங்கைக்குத் திரும்பியவுடன் தனது இராஜ்யத்தில் பத்தினிதேவிக்குப் பிரதிஷ்டைசெய்தனனென்றும் கூறுகின்றார். 2000 வருஷங்கட்கு மேற்பட்ட சரித்திரங்களை இடைவிடின்றிக்கூறுகின்ற இலங்கைச்சரிதங்களிற் 'கயவாகு' என்ற பெயருள்ளார் இருவரே கேட்கப்படுகின்றனர். அவர்கள் கயவாகு II கி. பி. 12-ம் நூற்றாண்டிலிருந்தனனாதலின் அவனைச் செங்குட்டுவன்காலத்தவனாக எவருங்கருதார். கயவாகு I கி. பி. 2-ம் நூற்றாண்டிலிருந்தானென்பது பின்னர்க்காட்டப்படும். 'கயவாகு' என்பது இலங்கையரசர்களின் பட்டப்பெயராயிருக்கவில்லையென்பதனை அங்ஙனமொரு இலங்கைச்சரிதமாவதுகூறாததுமன்றி, இக்குறிப்பெயர் தானென்பதனை அது ஆதரிக்கின்றது. முன்னோர்காலத்திலிருந்த சோழர் படையெடுப்பில் காவேரியில்வேலைசெய்தற்காகச்சிறைபிடிக்கப்பட்டுப்போன இலங்கைக்குடிகளைக் கயவாகுவென்னுமரசன் இந்தியாவிற்குவந்து மீட்டுத்திரும்பியதாக, பூஜாவளி, இராஜரத்நாகரி, இராஜாவளி, ஆகியமூன்று சரிதங்களும் கூறுகின்றன. இக்கயவாகு, புத்தரது பிக்ஷாபாத்திரத்தையும், பத்தினிதேவியின்காலணிகளையும் இந்தியாவினின்றும் இலங்கைக்குக் கொண்டுபோனதாக இராஜாவளிதெரிவிக்கின்றது. இதனால் செங்குட்டுவன்காலத்தவன் கயவாகு I என்பது தெள்ளிதினுணரக்கிடக்கின்றது. காவிரிப்பூம்பட்டினத்தைக்கட்டி மதிலெடுவித்தகரிகாலன்

(பட்டினப்பாலை), இலங்கைக்குச்சென்று வேலையாட்களைக்கொண்டு வந்தனன்போலும். இதனையே 'சோழர்படையெடுப்பு' என்று சரிதங்கள் கூறுவதாயெண்ணுதல் தவறாகாது. இனி, கயவாகு என்னும் பெயருடைய அரசர்கள் பலர் இருந்திருக்கலாமென்றும், பிந்திய அரசர்களது சரித்திரங்கள் கி. பி. 13-வது நூற்றாண்டிற்றான் எழுதப்பெற்றனவாகையாற் பிழைபட்டுப்போதற்கிடமுண்டென்றும் சிலர்கூறுவர். ஆனால், இலங்கைச்சரிதங்களிற்காணப்படும் அரசர்களது பட்டிகையோ இடையீடின்றித் தொடர்ச்சியாயும் பூரணமாயுமிருக்கிறது. இலங்கையிலுள்ள பௌத்தர்கள் தமது வழக்கப்பிரகாரம் எழுதிவைத்திருந்த பலபழயசரித்திரக்குறிப்புகளை ஆதாரமாகக்கொண்டே இவை வரையப்பட்டன. இவைகளிற்கூறப்பட்டனவெல்லாம், சிலாசாஸனங்களாலும் பிறகருவியாலும் இதுகாறும் உண்மையெனத் தேறப்பட்ட விஷயங்களோடு முழுவதும் பொருத்தமுடையனவாகவே இருக்கின்றன. கி. மு. 500 முதல் கி. பி. 13-ம் நூற்றாண்டுவரையுள்ள ஒவ்வொரு அரசன்காலத்தையும் நுட்பமாக எடுத்துக்கூறுவனவாயுள்ளன. இலங்கையிலுள்ள பல பௌத்தமடங்களில் கி. பி. 400-ல் 'அத்தகத மஹாவம்சம்' என்ற புராதனசரித்திரநூலொன்று பல ரூபபேதங்களுடன் இருந்ததாகத்தெரிகின்றது. மஹாவம்சத்தின் உரைகாரருக்கும் அவர்காலத்தவர்க்கும் மேற்குறித்த நூல் கிடைத்ததென்பதிலும், அவ்வுரைகாரரெழுதுவனவெல்லாம் அந்நூலையாதாரமாகக்கொண்டுதானுள்ளனவென்பதிலும், அவையெல்லாம் உண்மைதானென்பதிலும் தமக்குச் சிறிதும் சந்தேகமேயில்லையெனக் கெய்கர் எழுதிச் செல்கின்றார் (Introd p. XI). கடைச்சங்ககாலம் என்று ஐயங்காரவர்கள்கூறும் 5-ம்நூற்றாண்டின் முற்பகுதியில் பாஹியான் இலங்கைக்குவந்தபோது புத்ததாஸன் ஆண்டானென்போமா அல்லது ஐயங்காரவர்கள் ஓரிடத்திற்கூறும்வண்ணம் ஒரு கயவாகுவே ஆண்டனனென்போமா, அல்லது அவர் வேறிடத்திற்சொல்வதுபோலத் தகியன்றான் ஆண்டனனென்போமா ? இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்படுகின்றதை அவர்கள் மறந்தனர்போலும்.

தீபவம்சம், மகாவம்சத்திற்குமுந்தியது. அதன்படி கஜ்பாகுவின் காலம் புத்தருக்குப்பின் 642-664. மகாவம்சத்தின்படி புத்தருக்குப்பின் 653—675. டர்னரதுமஹாவம்சத்தின்படி புததருக்குப்பின்

665 வரை 12 வருஷம் அரசாண்டான். ஆகையால் தீபவம்சத்திற்கொடுத்திருப்பதுதான் சரியாயிருக்கலாம். ஆகவே முதலாவது கஜபாகுவின்காலம் (642 to 664) அல்லது (653 to 675—488= (154 to 176 கி. பி.) அல்லது 165 to 187 கி. பி.யாயிருத்தல்வேண்டும். எங்ஙனமாயினும் கி. பி. 187-க்குப்பின் இருக்கமுடியாது. கடைச்சங்கத்திறுதிக்காலமும் கி. பி. 2-ம் நூற்றாண்டிக்குப்பின்னில்லை. இனிச் சிலப்பதிகாரத்திற்காணப்படும் ஜோதிஷக்குறிப்புக்களையெடுத்தாராய்வோம்.

சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் தாங்குறிப்பிடுங்காலத்துக்கு ஆதாரமாகக்கொண்ட சிலப்பதிகாரநூலுரைப்பகுதிகள் கீழ்வருவன:-

"வான்கண்விழியா வைகறையாமத்து
மீன்றிகழ்விசும்பின் வெண்மதிநீங்கக்
காரிருணின்றகடைநாட்கங்குல்" (சிலப். X 1—3)

"ஆடித்திங்கட்பேரிருட்பக்கத்
தழல்சேர்குட்டத்தட்டமிஞான்று
வெள்ளிவாரத்தொள்ளெரியுண்ண
வுரைசான்மதுரையோடரசுகேடுறுமெனு
முரையுமுண்டே" (சிலப். XXIII 133—7).

"அந்தச்சித்திரைத்திங்கட்புகுதிநாள், சோதி; திதி—மூன்றாம்பக்கம், வாரம்—ஞாயிறு. இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூரணையுங் கூடிய சனிவாரத்திற் கொடியேற்றி, 'நாலேழ்நாளினும்' என்பதனால் இருபத்தெட்டுநாளும் விழாநடந்து கொடியிறங்கி, வைகாசி இருபத்தெட்டினிற் பூருவபக்கத்தின் பதின்மூன்றாம்பக்கமும் சோமவாரமும் பெற்ற அநுடத்தில் நாட்கடவாடியூடுதலின், வைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய்க்கிழமையுங்கேட்டையும்பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம்பக்கத்து வைகறைப்பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத்திருளிலேயென்றவாறு. அது பூருவபக்கமென்றுதோன்றக் 'காரிருணின்றகடைநாட்கங்குல்' என்றார்". (சிலப். X 1—3 உரை பக்கம் 230). மேற்கண்ட ஜோதிஷக்குறிப்புகளை வைத்துக்கொண்டு நான் கணித்ததில் கி. பி. 1 முதல் 1400 வரை ஒருவருஷமாவது முழுவதும் பொருந்தவில்லை. சிலப்பதிகாரப்பதிப்பாசிரியரான மகாமகோபாத்தியாயர் சாமிநாதையரவர்களும் "இவ்விசேடவுரையிலுள்ள

காலவரையறை பொருந்தாததுபோற்றோற்றுகிறது" (சிலப்-பக்கம் 230) என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் கி. பி. 756 எல்லாஜோதிஷக்குறிப்புகளுக்கும் பொருத்தமாக இருக்கிறதென்று எழுதியிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் கொடுக்குங்காரணங்களையும் கொண்டமுடிபுகளையும் நுண்ணிதின் ஆராய்தல் வேண்டும்.

முதலில் அந்தவருஷத்தில் (கி. பி. 756) சித்திரைமாதம் ஞாயிற்றுக்கிழமையன்று தொடங்குகிற்றென்றும், நக்ஷத்திரம் சுவாதியென்றும், இந்தநக்ஷத்திரம் சூரியோதயத்தின்மேல் 38 நாழிகைப்பின்வந்து மறுநாள் உதயாத்பரம் $35\frac{1}{2}$ நாழிகைமுடிய இருந்ததென்றும், அந்நாளைச் சித்திரைநாளென்றுதான் சாதாரணமாய் வழங்குவதென்றும், ஆனால் கண்ணகியுங்கோவலனும் புகாரைவிட்டுச்சென்றது செவ்வாயுங் கேட்டையும்பொருந்தியநாளாதலின் அதிலிருந்து பின்னோக்கணித்துச் சோதிநக்ஷத்திரமென்று அடியார்க்குநல்லார் வரைகின்றாரென்றும் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் சொல்லுகின்றார்கள். ஒருநாளில் சூரியோதயத்தில் என்னதிதி நக்ஷத்திரம் இருக்கிறதோ அதைத்தான் அந்தத்தினத்துத் திதிநக்ஷத்திரமாகச்சொல்லுவது நமதுதேசத்தின் வழக்கம். ஆனால் ஒருதினத்தில் ஒருலக்னத்தைச் சுபகரமானதென்று எடுத்துக்கொள்ளவேண்டியதாயிருந்தால், அந்தலக்னத்திற்குரியதிதியும் நக்ஷத்திரமுங் கூறப்படும். சித்திரைப்புகுதிநாளைச்சொல்லவேண்டிய இந்தஇடத்தில் சுபலக்னமுதலியவைபார்க்கும் ஆவசியகமில்லை. ஆகவே, சித்திரைநக்ஷத்திரத்தைச் சோதியென்று அடியார்க்குநல்லார் கூறினாரென்றுகருதுதற்குத் தக்கசமாதானமிருத்தல்வேண்டும். 29ந் தேதிக் கேட்டையிலிருந்து பின்னோக்கணித்துச் சோதியென்றுகொண்டார் என்று பிள்ளையவர்கள் இதை விவரிக்கின்றார்கள். எந்தஆதாரத்தைக்கொண்டு இவ்வாறுகூறினாரென்பது புலப்படவில்லை. நூல் தோன்றியகாலத்திருந்த ஓர் உரைகாரரால் சோதிடக்குறிப்புகள் கொடுக்கப்பட்டு வரன்முறையாய் அடியார்க்குநல்லார்காலம்வரை வந்ததென்றும் அதனையாதாரமாகக்கொண்டே இவர் இவ்வளவு நுட்பமாய்த் திதி வார நக்ஷத்திரங்களைக் குறித்திருக்கின்றாரென்றும் பிள்ளையவர்களே வேறோரிடத்தில் எழுதுகின்றார்கள். இங்ஙனம் சொல்லுபவர்கள், பின்னோக்கிக்கணித்துப்பார்த்து அடியார்க்குநல்லார் வரைகின்றார்

என்றும் கூறுகிறார். இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணுகின்ற இவ்விரண்டும் பிள்ளையவர்களது கொள்கையைஸ்தாபிப்பதற்கு அத்தியாவசியமாகின்றன. மேலும் பின்னோக்கிக்கணித்தபோதிலும் சோதி பெறப்படாது. ஏனெனில் சித்திரைப்புகுதிநாள் ஞாயிறாகவும் வைகாசி 29 செவ்வாயாகவுமிருத்தலால், அச்சித்திரைமாதம் 30நாளே உடைத்தென்றும், இவ்விரண்டுநாட்களுக்கும் இடைப்பட்டகாலம் 58 நாட்களெனவும் அறிகின்றோம். சராசரி நாளொன்றிற்கு ஒருநக்ஷத்திரமாகச் சித்திரைப்புகுதிநாளன்று, கேட்டைக்கு 58 நக்ஷத்திரங்களுக்குமுந்தின (அதாவது சோதியல்லாது) சித்திரைநக்ஷத்திரமே இருந்திருக்கவேண்டும். இவ்விஷயமொன்றே நமதுமனத்தில் ஐயத்தைவிளைக்கப்போதுமானது. கீழ்வருவன அவ்வையத்தை உறுதிப்படுத்துகின்றன. சித்திரைப்புகுதிநாளிலுள்ள திதி மூன்றாந்திதியென்றிருப்பதை ஒன்றாந்திதியென்று பிள்ளையவர்கள் திருத்துகின்றார்கள். ஏனெனில் 57 நாட்கழித்து வைகாசி 28-ல் திதி 0 13.* 0 3-லிருந்து 0 13 முடிய 55 நாளுக்குமேலாகாது. ஆகையால் மூன்றாந்திதியென்றிருப்பது ஜோதிஷகணிதத்தின்படி அசம்பாவிதமென்கிறார். இதுசரியே. இது ஏடெழுதுவோரால்நேர்ந்த பிழையெனின், அங்ஙனம்நேர்ந்ததென்றுகருதுதற்கு முடியாத அநேகஇடங்களில் அடியார்க்குநல்லார் பிழைபடஎழுதுகின்றார். ஆகையால் சோதிடவிஷயத்தில் உரைகாரரது அறியாமையே இப்பிழைகளுக்கெல்லாம் காரணமேயன்றிப் பிறிதன்று. ஆதலின் பிள்ளையவர்கள் திருத்தியமைத்துக்கொண்ட சோதிடக்குறிப்பைவைத்துக்கணித்தல் சரியன்று. மேலும் அவ்வாறே ஒன்றாந்திதியென்று திருத்திக்கொள்ளினும், சித்திரைப்புகுதிநாளினதுதிதி அதுவன்று; பகல் 11-மணிக்குமேலேதான் இத்திதி ஆரம்பிக்கின்றதாதலின். இவ்விதமாக கி. பி. 756-ல் சித்திரைமாதமுதற்றேதிக்குக்கொடுத்திருக்குங்கணிதம் பொருந்துமாறில்லை.

சித்திரை 28-ல், 0 13-ந்திதியென்றும், 14-ந்திதியும் அன்று வெகுநேரங்கழித்துவந்திருக்கின்றதென்றும், ஆகையால் அத்தினத்தில் பௌர்ணமியேயில்லையென்றும் பிள்ளையவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஒருமாதத்தில, இன்னதேதியில், இன்னவாரத்தில், இன்ன

* 013 என்றெழுதியிருப்பதைச் சுக்கிலபக்ஷத்திரயோதசி என்றும், 03 என்றெழுதியிருப்பதைச் சுக்கிலபக்ஷத்திருதியையென்றும் படித்துக்கொள்க.

திதியில், இன்னநக்ஷத்திரத்தில் நடைபெறுவதென்றேற்படுத்திய விழாவானது முன்பின்னாகத்தான்வருமென்றும், அதனால் நூலிற்குறித்த காலத்துக்குச் சிறிது மாறியிருப்பினும் தவறாகாதென்றும் பிள்ளையவர்கள் வாதிக்கின்றார்கள். இந்திரவிழவு இன்னதேதியில் நடக்கவேண்டுமென்ற நியதியிருந்ததற்கு ஆதாரமுமில்லை. நமதுதேசவழக்கமுமதுவன்று. மேலும் இந்திரவிழவு பொதுவாக இன்னகாலத்துநடக்கவேண்டுமென்பதைக்குறித்து அடியார்க்குநல்லாரெழுதவில்லை. அவர் கூறுவதெல்லாம், கோவலன்கதைநடந்த அந்தவருஷத்தில, இன்னகாலத்தில் விழாநடந்தது என்பதே. இது "அந்தச்சித்திரைத்திங்கட் புகுதிநாள்" என உரைகாரர் எழுதிப்போவதினாலேவிளங்கும். ஒரு திதியில் நடைபெறவேண்டுமென்றேற்பட்டு, குறித்தஅவ்வருஷத்தில் அத்திதியிலன்றி வேறுதிதியில்வருமாயின் பொதுவாகஏற்பட்டதிதியைக்கூறாது, அவ்வருஷத்துள்ளதிதியையன்றோகூறுவர் உரையாளர்? அவ்வருஷத்தில்நேர்ந்த சம்பவத்தை விவரிப்பதன்றோ ஆசிரியர் கருத்து? விழாக்கள் பிள்ளையவர்கள்சொல்லும்விதத்தில நடைபெற்றவென்பதற்கு மணிமேகலையில் இந்திரவிழவும் சிலப்பதிகாரத்தில் காமனதுவிழவும் அவ்வாறேவருமென்றுசொல்லியிருப்பதாக ஆதாரங் காட்டுகின்றார்கள். கி. பி. 756-லும் 771-லும் சிலப்பதிகார மணிமேகலைச்செய்திகள் நிகழ்ந்தனவென்ற தமதுகொள்கையையே ஆதாரமாகக்கொண்டதனாலே, இசைந்தேற்பட்டதேயன்றிப் பிறிதன்று. மேற்கூறியதினின்று சித்திரை 28-க்கும அவர்கள் குறிப்பிடுங்காலம் பொருந்தவில்லை.

இனி வைகாசிமாதத்தை எடுத்துக்கொள்வோம். இம்மாதம் 28ல் நாட்கடலாடி, 29-ல் இரவு வைகறையாமத்திற் கோவலனும் கண்ணகியும் பிரயாணமானார்களென்று உரைகாரர் தெளிவாகக்கூறுகின்றார். கி.பி. 756-ல் வைகாசி 28க் குறிப்புகளெல்லாமொத்திருக்கின்றன. ஆனால் 29-க்குறிப்புகள் பொருந்தவேயில்லை. அன்றிரவு பிரயாணமானசமயமாகும். பின்நிகழ்ந்த துர்ச்சம்பவங்களுக்கெல்லாம் முன்னறிகுறியாயிருந்ததும் அக்காலம் உரைகாரர் சோதிடகணிதஞ்செய்தற்கு ஏதுவாயிருந்ததும் அது. முக்கியமான இச்சமயத்தில் உரைகாரர் கொடுக்குந்திதியும் பிள்ளையவர்கள்கொடுக்குந்திதியும் பொருந்தவில்லை. பிள்ளையவர்கள்கணனப்படி செவ்வாய்க்கிழமையன்று பௌர்ணமி

யாதலின் இரவுமுழுவதும்நிலாவுண்டு. நிலவடைந்ததற்கும் சூரியோதயமாவதற்கும் மத்தியில் இருளேயில்லை. ஆனால் நூலிலோ "வெண்மதி நீங்கக்காரிருணின்றகடைநாட்கங்குல்" என்று கொடுத்திருக்கிறது. இதற்காகச் செவ்வாய்க்கிழமையிரவென்பதைச் செவ்வாய்க்குமுந்திய அதாவது திங்கட்கிழமையிரவு என்றுகொண்டார்கள்! அவர்கள்சொலவதுபோற் கொள்ளினும் செவ்வாயுங்கேட்டையுங்கூடியது கோவலன் புறப்பட்டசமயத்ததாகாதே! அவனும் கண்ணகியும் புறப்பட்டு 4 மணி நேரத்திற்குப்பின்னரே இரண்டும் சேருகின்றன. 4 மணிநேரத்துக்குப் பின்வந்த நாசயோகம் கோவலன் கண்ணகியை ஒன்றுஞ்செய்யவல்லதன்றென்பது ஜோதிஷசாஸ்திரத்திற்பழகியாரெல்லார்க்கும் ஒப்பமுடிந்ததேயன்றோ. செவ்வாய்க்கிழமையிரவென்பது திங்கட்கிழமையிரவென்றுபொருள்படுமென்று தாங்கொண்டதைவலியுறுத்தற்கு நாட்கடலாடியஅன்றே கோவலனும் கண்ணகியும் புறப்பட்டார்களென்று நூலாதாரம் காட்டினார்கள். இது உரைகாரர் நூலுட்கூறுவனவற்றோடு முரணுகின்றாரென்றும் ஆகையால் அவருரைப்பனவற்றை யாதாரமாகக்கொள்ளுதல் கூடாதென்றும் காட்டுமேயன்றிப் பிறிதன்று. மேலும் பிள்ளையவர்கள்கணனப்படி ஒருநாளின்காலையில் 13-ம்திதியிருக்கின்றது. 14-ம்திதியும் அன்றுதொடங்கி அன்றே முடிந்துவிடுகின்றது. இது அபூர்வமே. பிள்ளையவர்கள் இவ்வாறிருக்க வேண்டுவதும் ஒருநியதியென்றும், இந்நியதிக்கு கி. பி. 756 ஒன்றே ஒத்திருக்கின்றதென்றும் கூறுகின்றார்கள். இது நூலையும் நூலோடொவ்வாதவுரையையும், தாம் முன்பே அமைத்துக்கொண்டதோர்முடிபோடு பொருத்த முயல்வதின்பயனும். இவ்விதமாகவந்தமுடிபுக்குங் கூடச் சூரியாஸ்தமனபிரத்யக்ஷகாலத்தைக்கொண்டு முற்காலத்திற் சங்கிராந்திசமயங்கணிக்கப்பட்டதென்றுங் கொள்ளவேண்டியதாயிருந்தது. கி. பி. 756-ல் ஏப்ரில் 20-ல் மத்தியசூரியோதயம் 30 நாழிகை 30 பலத்திற்குப்பின் இடபசங்கிராந்திநேர்ந்ததிலிருந்து இடபமுதற்றேதி ஒருநாட்கழித்துவந்ததென்பதைத்தவிர வேறுகாரணம் அவர்கள் காட்டவில்லை. இவ்வாறு திருத்தியும் புதுக்கியும் விளக்கியும் அமைக்கப்பட்ட ஒருகொள்கை பிழையின்றியிருக்குமோ?

கி.பி. 756 வைகாசிப் பௌர்ணிமையன்று சந்திரகிரகணமிருந்ததாகவும், ஆயின் நூலுரையாசிரியரிருவரும் அதனைக்குறித்து யாதொன்றுங்

கூறவில்லையாதலின் கவனிக்கவேண்டியதில்லையென்றும் பிள்ளையவர்கள் எழுதுகிறார்கள். கி. பி. 756 உண்மையானகாலமாயிருக்குமாயின், நூலாசிரியராவது உரையாசிரியராவது இக்கிரகணத்தைப்பற்றி ஒன்றுங்கூறாதது ஆச்சரியம். கோவலனும் கண்ணகியும் புறப்படும்போது ஏற்பட்ட துர்நிமித்தங்களையெல்லாம் ஒருசேர எடுத்துக்கூறும்போது, துர்நிமித்தங்களுள் அதிமுக்கியமான சந்திரகிரகணம் அன்றிருந்திருக்குமாயின் அதைக்கூறாததற்குக் காரணமென்ன?

இனி, இவர்களதுகாலகணனம் மூலத்துட்கூறுவனவற்றோடாயினும் ஒத்திருக்கின்றதா என்று ஆராய்கிறேன். இவர்கள் கணித்ததில் கி.பி.756 ஜூலை 23-ல மத்யசூரியாஸ்தமனசமயத்துப் பரணிகார்த்திகையும் அஷ்டமியுமிருந்தன. எனது கணனப்படி சூரியோதயத்துக்கு 38 நாழிகை 16 பலத்திற்கப்புறந்தான் பரணி தொடங்கிற்று. ● 6 திதி 41 நாழிகை 20 பலம்வரையிருந்தது. அன்று 8-ம் திதியுமில்லை. கிருத்திகையுமில்லை. அவர்களது கணனமே சரியென்றுவைத்துக்கொண்டபோதிலும், நூலிற்கண்டவறநேரடு பொருந்துமாறில்லை. ஏனெனின் மதுரையெரியுண்டது நள்ளிருளாகலின் (சிலப்-பதிகம் 41-3), அந்நள்ளிருளில் பரணியும், 8-ம்திதியும் சேர்ந்திருத்தல்வேண்டும். இன்னும், அரும்பதவுரையாசிரியர் 'அழல்சேர்குட்டம்' என்பதற்கு அதன்பொருளாகிய கிருத்திகையென்றெழுதாது 'பரணிகார்த்திகை' யென்றெழுதியதைநோக்குங்கால பதப்பொருளைவிசேஷமாகக் கவனியாது உண்மையைக்கவனித்து எழுதினாரென்றேறபடுமாகலின் நள்ளிருட்சமயத்துப் பரணியும் 8-ம்திதியும் நிச்சயமாயிருந்துதீரவேண்டும் என்று பிள்ளையவர்களே சொல்லுகிறார்கள். அவ்வாறு சேர்ந்திருக்கவில்லையென்பது பிரத்தியக்ஷம். இனி நூலிற்காணப்படுவனவற்றோடு ஒத்தேயிருந்தது என்று வைத்துக்கொள்ளினுங்கூட, கி.பி. 8-ம்நூற்றாண்டிற்றான் சிலப்பதிகாரச்செய்தி நடந்ததாகல்வேண்டுமென்று வேறுவகையால் நிச்சயிக்கப்பட்டாலன்றிப் பிள்ளையவர்கள் சொல்வது பயனில்லாததாய்முடியும். ஏனெனில் உரையைநீக்கி நூலுட்கூறப்பட்டவைகளைமட்டு மெடுத்துக்கொண்டால், அவைகளுக்குப் பொருத்தமானகாலம் 2-ம் நூற்றாண்டில்மட்டும், 11 வருஷங்கள் கிடைக்கின்றன. அவைகள் கி. பி. 100, 103, 107, 117, 130, 134, 144, 157, 171, 188, 198 ஆகவே கி. பி. 756 பொருத்தமில்லையென்பது காட்டப்பட்டது.

இனி, ஜோதிஷவிஷயத்தில் அடியார்க்குநல்லாருரை ஆதாரமாகக் கொள்ளுதற்குத் தகுதியுடைத்தன்றென்பதைக் காட்டுகின்றேன்.

காமனது விழாவைப்பற்றிச் சிலப்பதிகாரத்தில்,

"நாமநீர் வேலி,

....

விருந்தாட்டமர்ந்தோமாவிருந்தசவீரன்
தென்றிசைமருங்கிற் செழுமதித்தன்னுடு
இந்திரவிழவுகொண்டெடுக்குநாளில்" (VI. 2-6)

என்று கூறப்பட்டுளது. அடியார்க்குநல்லார் "மீனப்பங்குனித்திங்கள் 29-ல் சித்திரைநாளிலே அவ்விழாமுடிந்தபின் ... இந்திரவிழவிற்குக் கால்கொண்டுகொடியெடுக்குநாள் மேஷமாதத்து இந்தச்சித்திரைநாளைச்சொல்லியென்க. இது வசந்தகாலத்துள்ளும் சித்திரையாகலின். ஆண்டு திங்களுந்திதியுங்கூடி நிற்றலினையெனின்" என்று உரையெழுதியபோன்றார். பங்குனியில் காமவிழாநடந்தேறியதனால் அதற்கடுத்த சித்திரையில் சித்திரநக்ஷத்திரதினத்தில் இந்திரவிழாத் தொடங்குமென்று மூலத்தினின்றும் அறிகின்றோம். இந்திரவிழவு நடக்கவேண்டும் நாளை நிச்சயிப்பதில் மாதமும் நக்ஷத்திரமுந்தான் பிரதானமென்பது நூலினின்று அறியப்படுகின்றது. இம்முடிபு சிலப். V. 64-7யும் மணி I. 19-22யும் ஒத்துநோக்கினும் பெறப்படும். பங்குனித்திங்கள் 29-ல் சித்திரைநாளிலே காமனதுவிழவுமுடிந்ததென உரையிற்காணப்படுகின்றது. சித்திரை 28 சனிக்கிழமையென்றும் வைகாசி 28 திங்களென்றும் உரைகாரர் கூறுவதால் அச்சித்திரை மாதத்துக்கு 30 நாளென்றும் அதற்குமுந்திய பங்குனிக்கு 31 நாளென்றும் அறியக்கிடக்கின்றது. ஆகையால், பங்குனி 29-ல் சித்திரையானால், சோதி பங்குனி 30-லவராமல், 3 நாளைக்குப்பிறகு சித்திரைமாதம் 1-ல் வருவது எங்ஙனம்? ஒருசித்திரையிலிருந்து மறுசித்திரைக்கு 27 நாளே இடைப்படுமாதலால், இந்திரவிழவு சித்திரை 25-ல்வாராது 28-ல் வருவதெங்ஙனம்? 'பங்குனி 29' என்றதில் '29' ஐத் திதியென்றே கொள்வோமாயினும், அடியார்க்குநல்லாரே 'அது பூர்வபக்கமென்பது தோன்ற' (சிலப். X. 1-3 உரை) என்றதனால் சுக்லபக்ஷமே பூர்வபக்கமென்று கருதினாராதலால், சித்திரைநாளில் (பங்குனியில்) திதி ●14.

அங்ஙனமாயின் அதற்கடுத்தசோதிநாளில் திதி ●3 அல்லது ●1 ஆவ தெங்ஙனம்? இவ்விடம் அடியார்க்குநல்லார் ஒன்றுக்கொன்று முரண் படக்கூறுகின்றார். ஆகையால் சித்திரைப்புகுதிநாளன்று மூன்றாந்திதி என்றதில் பிழை அவர்க்கேற்புடையது. 'நாலேழ்நாளினும்' (மணி I. 8) என்றதில் விழவு 28 நாள்நடந்தது. கொடியேற்றுநாளைத்தவிர்த்து 28 நாளெனினும் வைகாசி26-ல் விழவு முடிந்திருத்தல்வேண்டும். அன்றே கொடியிறக்கி, 27-ல் நாட்சடங்காயிருத்தல்வேண்டுமே. உரைகாரர் 28-ல் என்று கூறுவதெங்ஙனம்? இன்னார் நாட்படங்கொட்டும் கோவலனது பிரயாணமும் வெவ்வேறு நாட்களில்நிகழ்ந்தன என்றுகூறுவர். ஆனால் நூலிலே இதற்குநேர்மாறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்கடலாடிய அன்று மாதவியோடு கோவலன்பிரிந்துசென்றவுடன், மாதவியே கோவலனிடத்து வசந்தமாலையைத் தூதனுப்புகின்றாள். கோவலன் வசந்தமாலையைக்கடிந்தனுப்பிவிடுகின்றான். இதனைக்கேட்டதும் 'கோவலன் இன்றிரவுவாராதுபோயினும் நாளைக்காலைவரத்தவறான்' என்று மாதவி சிலப்பதிகாரத்தில் எட்டாங்காதையில் (68-71 & 109-118; பிள்ளையவர்கள் மூன்றாங்காதை யென்றது தவறாகும்) கூறுகின்றாள். பின்னர்க்கோவலன் நேரே கண்ணகியிடத்துச்சென்று, அன்றே இரவுவிடியுமுன் தன்னோடுநகர்விட்டுப்போவதற்கு அவளை உடன் படுத்துகின்றான். ஆகையால் கடலாடலும் பிரயாணமும் ஒரேநாளில் நிகழ்ந்தன. மேலும் உரைகாரர்சொல்லுஞ்ஜோதிஷக்குறிப்புகளுக்குப் பொருத்தமானகாலம் கி. பி. 1 முதல் 1400 முடியக்கணித்ததிலும் கிடைக்கவில்லை. ஆகையால் உரைகாரர் ஜோதிஷத்தில்வல்லவரன்று. சாதாரணமாய் நாசயோகமெனவழங்கும் செவ்வாயையுஞ்சேட்டையையும் ஆதாரமாகக்கொண்டு மற்றக்குறிப்புகளையெல்லாந் தம்மாலியன்றவளவு கணித்துத்தருகின்றாரெனத்தோன்றுகிறது. அக்குறிப்புகள் கர்ணபரம்பரையாய் அவருக்குவந்தனவெனின், அவருக்குமுன்னிருந்த அரும்பதவுரையாசிரியர் அவைகளைக்கூறாததற்குக் காரணம் யாது?

இனி, பிள்ளையவர்கள் அறுதியிட்டமணிமேகலைக்காலத்தை யாராய்தல்வேண்டும். அவர்கள் பின்வரும் மூன்றுதொடர்களைத் தமது முடிபுக்கு ஆதாரமாகக்கொண்டார்கள். அவை:—

(1) "இருதிளவேனிலிலெரிகதிரிடபத்
தொருபதின்மேலுமொருமூன்றுசென்றபின்
மீனத்திடைநிலைமீனத்தகவையிற்
போதித்தலைவனொடுபொருந்தித்தோன்று
மாபுத்திரன்கையமுதசுரபியெனு
மாபெருமபாத்திரமடக்கொடிகேளா
யந்நாளிந்நாளப்பொழுதிப்பொழுது" (மணி. XI. 40-6).

(2) "இருள்பரந்துகிடந்தமலர்தலையுலகத்து
விரிகதிர்ச்செல்வன்றோன்றினனென்ன
வீரெண்ணூற்றோடீரெட்டாண்டிற்
பேரறிவாளன்றோன்று" (மணி. XII. 75-8).

(3) "ஆங்கவ்வாவயிறுயர்சணமுலப்பத
தீங்கனிநாவலோங்குமித்தீவிற்க்
கொருதானாகியுலகுதொழுதோன்றினன்
பெரியோன்பிறந்தபெற்றியைக்கேணீ
யிருதிளவேனிலிலெரிகதிரிடபத்
தொருபதின்மேலுமொருமூன்றுசென்றபின்
மீனத்திடைநிலைமீனத்தகவையிற் [19-26.)
போதித்தலைவனொடுபொருந்தியபோழ்தது" (மணி. XV.

என்பனவாம். மேற்காட்டப்பட்டவற்றால் புத்தர் 1616-வருடங்களுக்குப்பின் தோன்றுவரென்பது குறிக்கப்படுகிறதென்றும் குறிக்கப்பட்டவாறே மணிமேகலை மணிபல்லவத்திற்குச்சென்றசமயத்தில் புத்தர்தோன்றினரென்றும் அங்ஙனந்தோன்றியது இடபமாதத்து விசாகமும் பௌர்ணமியுஞ்சேர்ந்த 13-வது தேதியென்றும் நமது பிள்ளையவர்கள் அனுமித்து மணிமேகலையின்காலம் கி. பி. 771-ஆக நிச்சயித்தல்கூடுமென்று சொல்லுகிறார்.

மேற்குறிக்கப்பட்ட மூன்றுதொடர்களில் முதற்றொடரில் புத்தர் பிறந்த விசாகதினத்தில் ஆபுத்திரனது அக்ஷயபாத்திரம் மணிபல்லவத்துக் கோமுகிப்பொய்கையின்மேலிடத்துத் தோன்றுமென்றும், அங்ஙனந்தோன்றவேண்டியகாலம் நேரமும் அப்பொழுதேயென்றும் தீவதிலகை மணிமேகலைக்குச் சொல்லுகின்றாள். புலவர் பெருந்தகை

சாமிநாதையரவர்கள் மேற்குறித்த அக்ஷயபாத்திரத்தோற்றம் வருடந்தோறும் நிகழ்வதொன்றென உரையெழுதியிருக்கின்றார்கள். அவ்வுரை ஆபுத்திரன் தான் இறக்குந்தருவாயிற் கூறிய

"கோமுகியென் னுங்கொழுநீரிலஞ்சியி
ஞேரியாண்டொருநாட்டோன்றெனவிடுவோ
னுளறம்பூண்டாங்கா னமிரோம்புந
நளமொனிவான கைப்புகுவாய்" (மணி. XIV. 91-4)

என்பதற்குப் பொருத்தமுடையதாயின்றாகா. மற்றும் தீவதிலகை மேற்காட்டியவாறு மணிமேகலைக்குச் சொல்லும்வரை, மணிமேகலை நூலுள், புத்தர் மறுமுறை தோன்றுவதைப்பற்றி யொன்றுங் கூறப்படவேயில்லை. ஈண்டுக் குறிக்கப்பட்ட முதற்றொடரிலும் அவ்வாறுதோன்றுவது குறிக்கப்படுவதாகக் காணப்படவில்லை. அங்கே சொல்லியிருப்பதெல்லாம் அக்ஷயபாத்திரம் வருடந்தோறும் குறித்தசமயத்துத்தோன்றுமென்பதே. அன்றியும் தீவதிலகை புத்தர்தோன்றுவதை மணிமேகலைக்குத்தெரிவிக்குங் கருத்துடையவளாயின் முக்கியமான அவ்விஷயத்தை அவள் வெளிப்படையாய்த் தெளிவாயும் பிரசங்கமாயும் வெளியிட்டிருத்தல் வேண்டும்.

புத்தர்தோன்றுவதென்பது மணிமேகலை நூலின் 12-வது காதையினின்றுகாட்டப்பட்ட மேற்குறித்த இரண்டாவதுதொடரிற்றான் முதன்முதல் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. ஆண்டுள்ள 'தோன்றும்' என்னுஞ்சொல்லாற் புத்தரது பிறப்பு எதிர்காலநிகழ்ச்சியாகக்குறிக்கப் பட்டதன்றி அஃது இறந்தகாலச்செய்தியாகக்குறிக்கப்பட்டிலது. பிள்ளையவர்கள்சொல்லுகிறபடி மணிமேகலை மணிபல்லவஞ்சென்றிருந்தகாலத்துப் புத்தர்தோன்றியதுண்மையாயின், மணிபல்லவஞ் சென்றுமீண்ட மணிமேகலையைசந்தித்த அறவணவடிகள் புத்தரது தோற்றத்தை இறந்தகாலச்செய்தியாகவன்றோ கூறுதல்வேண்டும்.

மேலும் பிள்ளையவர்கள், 'சொல்லும்போதுகாலத்திலேனும் அதற்குச்சற்று முன்பின்னுமேனும் புத்தர் தோன்றியவராதல்வேண்டுமென்று நாம் ஊகிக்கலாம். பின்னுமோரிடத்தில் மாதவியின்றந்தை தாமோ ஒருகால் வெகுகாலத்திற்கப்புறம் புதியபுத்தரிடமிருந்து அறவுரைகேட்டல் இயலுமென்று சொல்லுகின்றான். வெகுகாலத்திற்கப்

புறமென்றுசொல்லியது ஒருவேளை இப்புதியபுத்தரும் கௌதமரைப் போலச் சம்போதியடைந்து ஆசாரியனாகுங்காலத்தை (அதாவது 36-வது வயதில்) க்குறித்ததென்றேகொள்ளுதல்வேண்டும். மாதவியின் றந்தைபோன்ற ஒரு முதியோனுக்கு 35 வருஷங்களுக்குப்பிறகு என்பது வெகுகாலந்தான். ஒருகால் மறுபிறப்பின்காலமாகவுமிருக்கலாம்'' என்று சொல்லுகின்றார்கள். இவ்வாறு கூறியன அனைத்தும் பிழையேயன்றிவேறில்லை. பிள்ளையவர்கள் தாமே சிரமமெடுத்து மணிமேகலை நூலை வாசித்திருப்பார்களாயின் மாதவியின்றந்தையைப்பற்றி யாதொன்றும் எழுதமாட்டார்கள். மணிமேகலை நூன்முழுவதினும் அங்ஙனமொருவனுண்டென்றேனுஞ்சொல்லியிருப்பதேயில்லை. ஆனால் கோவலன்றந்தையாகிய மாசாத்துவான் புத்தரிடமிருந்து அறவுரை கேட்கும் விருப்பினனாயிருந்தான் என்று நூலிற்சொல்லியிருப்பது உண்மையே. புத்தர் 1616-வருஷங்களுக்குப்பின்றோன்றுவரென்பது புதியபுத்தரது ஞானோதயகாலத்தைக் குறிப்பதாகலாமென்று அனுமானிக்கின்றார்கள். ஆனால் அவர்கள்காட்டும் வரிகளுக்குச் சிறிது பின்னேநோக்கினால் புத்தரது மறுபிறப்புத்தான் குறிக்கப்படுகிறதென்பது ஸ்பஷ்டமாகின்றது. "புத்தஞாயிறு தோன்றுங்காலை" என்பது தொடங்கி அதிசயசம்பவங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. இவைகள் மகான்களது பிறப்பையுணர்த்தும் அறிகுறிகளாய் நினைக்கப்படுவனவேயன்றித் தங்கள்தங்களுக்கமைந்த லோகோபகாரச்செயல்களை நிறைவேற்றுதற்பொருட்டு உலகத்தாரது முன்னிலையில் ஒருவர் வருதலைக் குறிப்பனவல்ல. இயேசுநாதர், கிருஷ்ணர், புத்தர் இவர்களது சரிதங்களையொப்பிடுக. மேலும்,

"அந்நாட்பிறந்தவ னருளறங்கேட்டோர்
இன்னாப்பிறவி யிகந்தோராதலின்'' (மணி. XXII. 99-100)

என்று கூறப்பட்டிருக்கின்றது. இதனுள் முதல்வரியில், 'அந்நாட் பிறந்து' என்பதனை 'கேட்போர்' என்பதனோடுகூட்டி, அவன் என்பது புத்தரைக்குறிப்பதாகக்கொண்டு, அந்நாளிலேபிறந்து புத்தரது அறவுரையைக்கேட்டோர் என்பது பொருளாகக்கொள்ளுதல் சிறிதும் ஏற்புடைத்தாகாது. 'அவன்' என்பது சுட்டுப்பெயராயிற்றே! இதனாற் சுட்டப்படும்பெயரன்றியும் தனித்தும்பிரயோகப்படுத்துதல்

கூடுமோ? 'புத்தர்' என்பதற்கும் 'அவன்' என்பதற்கும் மத்தியில் வேறு பலரையும் வேறு பலவிஷயங்களையும்பற்றிக்கூறும் பலவரிகள் வந்துள்ளனவே, அன்றியும்! அந்நாளிற் பிறவாதாராயின் புத்தரது அறவுரைகேட்டகாலையும் அவர் பிறவியிகத்தலின்றென்பதா கருத்து? அறவுரைகேட்டல் பிரதானமேயன்றி அந்நாளிற்பிறத்தலென்பது பிரதானமாகுமா? ஆதலால் 'அந்நாட்பிறந்தவன்' என்னுந்தொடரைப் பிரியாது ஒருசொன்னடையதாகக்கொண்டு புத்தரைக்குறிக்கின்றதென்றுதான் பொருள்கோடல்வேண்டும். புத்தர் இவ்வாறு மறுமுறைதோன்றுதல் வெகுகாலத்திற்குப்பின் நிகழுமென்று கருதப்பட்டமை மணிமேகலையிற் பல இடங்களிலுங்கூறப்பட்டிருக்கிறது. சொல்வோரதுகாலத்திலேனும் அதற்குசற்றுமுன்பின்பாகவேனும்நிகழ்ந்ததாகக்கருதுவது பெரிதும் பிழைபாடுடைத்தாம். பிள்ளையவர்கள் கொண்டபடி அறவணவடிகளது பிரஸ்தாபசமயத்திற்கு முன்னரே புத்தர் தோன்றியிருக்கவேண்டுமாயினும் அதிசயசம்பவங்கள் முன்னரே நிகழ்ந்தனவாக அடிகள் கூறவில்லை. மறுபிறப்புநிகழுங்காலம் எப்போதென்பதைப்பற்றி மணிமேகலையிற்சொல்லியிருப்பனவற்றைக் கீழே தருகின்றேன். அவர் பின்வருவதோர்காலத்தில் (மணி. XXI. 167-9) புத்தரதுபிறப்பிற்குமுன் தாம [illegible] பிறக்கவேண்டுவதாயிருக்குமென்று சொல்லுகின்றார். மணிமேகலையைப்பற்றியும் அவ்வாறே கூறப்பட்டிருக்கிறது (XXI 17[illegible]-9). பின்னும் மாரசாலையில,

"மேற்செய்நல்வினையின் விண்ணவர்ச்சென்றே
மவ்வினையிறுதியினடுசினம்பாய
மெய்வகையானுமெய்ந்நெறியொழியா
தும்பரிலவழியுபரிற்பல்பிறப்
பியாங்களுமிருவினை யுய்ந்துமைப்போல
நீங்கரும்பிறவிக்கடலிடைநீந்திப்
பிறந்துமிறந்துமுழல்வோம்பின்னர்
. . . .
புத்தஞாயிறுதோன்றிப்
போதிமூலம்பொருந்திவந்தருளித்
தீதறுநால்வகைவாய்மையுந்தெரிந்து
. . . .

அன்புறுமனத்தோடவனறங்கேட்டுத்
துறவியுள்ளந்தோன்றித்தொடரும்
பிறவிநீத்தபெற்றியமாகுவம்
அத்திறமாயினுமநேககாலம்
எத்திறத்தார்க்குமருகநியுஞ்செய்குவம்" (XXVI. 35-61)

என்று மணிமேகலைக்குக் கண்ணகிதெய்வமாய்நின்று உரைக்கின்றாள். இவ்வரிகளிற் கடைசியிரண்டிற்கும 'யாம்நிர்வாணத்தையடைவது பல நாளைக்குப்பின்பேயாயினு' மென்று ஸ்ரீ சாமிநாதையரவர்கள் உரை எழுதியுள்ளார்கள். பிள்ளையவர்கள் தங்களதுகொள்கைக்கு ஆதாரமாய்க்கொண்டிருக்குந்தொடருங் கூட எனதுகருத்திற்கு அநுசரணையாகவேயிருக்கின்றது. அது வருமாறு:—

'தீவினையுருப்பச்சென்றுநின்றுதையுந்
தேவரிற்றோற்றிமுற்செய்தவப்பயத்தா
லாங்கத்தீவினையின்னுந்துய்த்துப்
பூங்கொடிமுன்னவன்போதியினல்லறந
தாங்கியதவத்தாற்றுன்றவந்தாங்கிக்
காதலிதன்னொடுகபிலையம்பதியி
ளுதனல்லறங்கேட்டுவீடெய்துமேன்
றற்புதக்கிளவியறிந்தோர் கூறச்
சொற்பயனுணர்ந்தேன்றோகையாறு
மங்கலங்கவனறநெறிகேட்குவன்" (XXVIII. 138-147)

புத்தராது மறுபிறப்பைப்பற்றிப்பேசுவோரில் ஒருவராவது பரமோத்கிருஷ்டமான அதனை இறந்தகாலச்செய்தியென்று கருதியதாகவுந் தெரியவில்லை.

பிள்ளையவர்கள்காட்டிய 3-ந்தொடரில் மணிமேகலைக்கு ஆபுத்திரன்கதையையும் அவனதுமறுபிறப்பையும் அறவணவடிகள் கூறுகின்றார். புத்தரதுபிறந்தநாளன்று ஆபுத்திரனும் பற்பல அதிசயசம்பவங்கள் முற்குறிசெய்யப் பிறந்தானென்று தெரிவிக்கின்றார். சிலர் இதனைப்பற்றி ஆச்சரியங்கொண்டனர்.

"போதிமாதவன்பூமியிற்றோன்றுங்
காலமன்றியுங்கண்டனசிறப்பென" (XV. 29-30)

ஆனால் இங்ஙனந்தோன்றிய ஆபுத்திரன்வேறு, அறவணவடிகள் முன்னுறவுணர்ந்து உரைக்கின்ற புத்தர் அவதாரம்வேறு. ஒன்றற்கொன்று சம்பந்தம் இருப்பதாக அவராற்கூறப்படவில்லை. அன்றியும் இதற்குச்சிலவரிகளுக்குக்கீழே ஆபுத்திரன் புண்ணியராஜனாகப்பிறந்திருக்கிறானென்று தாங்கூறுஞ்சமயத்து, அவன் ஒரு யுவராஜாவாக இருக்கின்றானென்று அவர் தெரிவிக்கின்றார்.

"அலைரசாள்செல்வமவன்பா லுண்மையி
னிரைதார்வேந்தனாயினன்" (XV. 14-5)

ஆகையால் புண்ணியராஜன்பிறந்து குறைந்தபக்ஷம் 16-வருஷங்களாவது ஆகியிருத்தல்வேண்டும். அவன் இரண்டாவதுமுறைதிருவவதாரஞ்செய்த புத்தராகவிருப்பானானால் பேசுஞ்சமயத்திற்கு முந்தினநாளே பிறந்தவனாவன். ஏனெனில் மணிபல்லவத்துக் கொழுநீரிலஞ்சிக்குவந்துசென்றவன்றே மணிமேகலை தன் தாயினிடம்போய் ஆங்குத்தாமதியாதே உடன் அறவணவடிகளது ஆசிரமத்துக்கு ஆபுத்திரன் கதைகேட்கும்விருப்பினளாய்ப்போகின்றாள். புண்ணியராஜன்பிறந்தது கி. பி. 752 என்றும் புத்தரதுபுனரவதாரம் கி. பி. 771 என்றும் குறிப்பிடுவதனால் பிள்ளையவர்களே இம்முடிவை ஒப்புக்கொண்டவராகின்றார்கள்.

இவ்விதமாகப் பிள்ளையவர்கள் எடுத்துக்கொண்ட மூன்றுதொடர்களுள், இரண்டு ஜோதிஷக்குறிப்புகளைத் தருகின்றன. ஆனால் புத்தரதுபுனரவதாரத்தைப்பற்றி யொன்றுங்கூறவேயில்லை. ஒன்று புத்தர் மறுமுறைதோன்றுங்காலத்தைக்கூறுகின்றது. ஆனால் அதனுள் ஜோதிஷக்குறிப்புகள் காணப்படவில்லை. முதலாவதுதொடர் அமுதசுரபி வருஷந்தோறுந்தோன்றுவதைச்சொல்லுகின்றது. இரண்டாவதுதொடர் புத்தரதுபுனரவதாரத்தைக் கூறுகின்றது. மூன்றாவது தொடர் புண்ணியராஜன்பிறந்தகாலத்தைத் தெரிவிக்கின்றது. இரண்டு தொடர்களிலுள்ள ஜோதிஷக்குறிப்புக்கள் புத்தரது (வருஷந்தோறுமுள்ள) பிறந்தநாளுக்குரியன. அந்நாடோறும் அமுதசுரபி பொய்கைக்குமேலேதோன்றும். அந் நாளொன்றில் புண்ணியராஜனும் பிறந்தனன்.

உ

கடைச்சங்ககாலம்.

"செந்தமிழ்" (தொகுதி-௧௫ பகுதி-௧௧-ல்) ௫௯௮-ஆம்பக்கத்தொடர்ச்சி.

இனி இரண்டுதொடரினுங்காணப்படுகின்ற ஜோதிஷக்குறிப்புக் களையாராய்வோம். "இருது இளவேனில்" என்பது சித்திரை வைகாசி மாதங்கள். "மேஷவிருஷபௌஸௌரோவஸந்த:" • என்று போதாயனரும், "சைத்ரோவைசாகஶ்சவஸந்த:" என்று கௌடிலியரும் (அர்த்தசாஸ்திரம் p. 109) கூறுகின்றார்கள். 'எரிகதிரிடபம்' என்பது வைகாசி அல்லது இடபமாதம், 'மீனத்திடைநிலை மீனத்தகவையின்' என்பது நக்ஷத்திரங்களுள் நடுவிலுள்ள நக்ஷத்திரம். புத்தரது சரித்திரத்துட் பெரும்பாலும் வருவதும், அவர் ஜன்மநக்ஷத்திரமும் விசாகந்தான். ஆதலால் நடுநக்ஷத்திரமென்பது இவ்விசாகமே. அங்ஙனமாயின், இப்போதுவழங்குகிறபடியன்றிக் கிருத்திகாநக்ஷத்திரத்தை முதலதாகக்கொண்டு நக்ஷத்திரங்கள்தொடங்கினவென்றல்வேண்டும். தற்காலவழக்கில் முதல்நக்ஷத்திரம் அச்சுவினி. கி. பி. 500-க்கு முன்னெல்லாம் கிருத்திகாதிமுறைதான்வழக்கிலிருந்தது. கி. பி. 500-ல் மேஷாயனம் அச்சுவினியின்தொடக்கத்திலிருந்ததால் அச்சுவினியாரம்பத்தை மேஷாரம்பத்தோடுபொருத்துவதற்காகக் கிருத்திகாதிமுறையைக்கைவிட்டு அச்சுவினியாதிமுறையைக் கொண்டனர்.

இதனால் மணிமேகலை கி. பி. 500-க்குமுன்செய்யப்பட்டநூலென்பதுபோதரும். புத்தரதுகாலத்தில்வழங்கியமுறையைப்பற்றிக் கிருத்திகை யீண்டு முதல்நக்ஷத்திரமாகக்கூறப்படுகின்றதென்றும், மணிமேகலைநூலாசிரியரதுகாலத்து அவ்வழக்குவீழ்ந்து அச்சுவினிமுதலாகஎண்ணப்பட்டதென்றும் சொல்வதற்கு நூலில் ஆதாரமேயில்லை. அவ்வாறுதானிருந்ததுஎன்பதைச் சான்றுதந்துநிறுவவேண்டும் பொறுப்பு பிள்ளையவர்களைச்சேர்ந்தது.

'ஒருபத்தின்மேலும்ஒருமூன்றுசென்றபின்' என்றதன்பொருளென்னை? கிருத்திகையிலிருந்து 14-ம் நக்ஷத்திரம்விசாகமாதலின்,

இவ்வரியும் இதற்கடுத்தவரியுஞ்சேர்த்து விசாகமென்று ஸ்ரீசாமிநாதையரவர்கள்பொருள்கொண்டார்கள். மாதம், நக்ஷத்திரம், திதி இம்மூன்றுங்கொண்டு ஜன்மதினங்குறிப்பிடும்வழக்கில்லையாதலின் இப்பொருளேபொருத்தமுடையதாகஇருக்கின்றது. மேலும் புத்தர் பிறந்தநாளில் பௌர்ணிமையாயிருந்ததேயன்றி, சுக்லசதுர்த்தசியன்று. மணிமேகலை மணிபல்லவத்துக்குச்சென்றவருஷத்திலும் புத்தரதுஜன்மதினத்தின் திதி

"மதிநாள்முற்றியமங்கலத்திருநாள்" (மணி X. 83).

என்றுகூறப்படுவதனால்பௌர்ணிமையென்பதுநிச்சயமாகின்றது. 13-ஆம் தேதியென்று பிள்ளையவர்கள்பொருள்கொண்டார்கள். யாதேனும் ஓர்காலத்தைச்சுட்டுதற்கு, மாதம், திதி, நக்ஷத்திரம், இவற்றைக்குறிப்பது பண்டைவழக்கு. மாதம், தேதி, வாரம் இவற்றைக்குறிப்பது தற்காலவழக்கு. ஆசிரியர் தற்காலவழக்கையநுசரித்தவராயின் நக்ஷத்திரத்திற்குப்பதில் வாரத்தையன்றேசொல்லியிருத்தல்வேண்டும். அங்ஙனஞ்சொல்லாமையின், அவர்பண்டைவழக்கினையேயநுசரித்தவராதல்வேண்டும். ஆதலால் தேதிஇடம்பெறுதற்கு நியாயமேயில்லை. மேலும் 'ஒருபத்தின்மேலும் ஒருமூன்றுசென்றபின்' என்று கூறுவதால், 14-ம்தேதியென்றன்றோகணக்கிடுதல்வேண்டும். 13-ம் தேதிஎவ்வாறுவந்தது.

1616 வருஷங்கள்கழித்துப்புத்தர் மறுமுறைதோன்றுவரென்று நூலிற்கூறப்பட்டுள்ளது. தென்னிந்தியாவிலும்இலங்கையிலும்பர்மாவிலும் சையாமிலும் வழங்குங்கர்ணபரம்பரையில்புத்தர் கி.மு. 544-ல் உலகுநீத்ததாகச்சொல்லப்படுகின்றது தம்காலத்திற்குச் சுமார் 1200வருஷங்கட்குமுன்பு புத்தர்நிர்வாணமானதாகச் சிலபௌத்தர்கள்நம்பியிருந்தனரென்று ஹியூன்த்ஸாங் தெரிவிக்கின்றார். இது மேலேகாட்டப்பட்டகாலத்திற் கொத்தேயிருக்கின்றது. 1200-640 560 கி. மு. (WatterII28) கி.பி.642-ல்நிகழ்ந்த பல்லவநரசிம்மவர்மனுக்கும் சளுக்கியபுலாகேசிக்கும் ஏற்பட்டயுத்தத்தைப் புத்தநிர்வாணத்திற்குப்பிறகு 1184—1193-ல்ஆண்ட இலங்கைத் தாதோபதிஸ்ஸன் II காலத்தில்நடந்ததாக இலங்கைமஹாவம்சமும், பூஜாவளியும் கூறுவதால் கி.பி.642ல் புத்தநிர்வாணம்(1184to1193)-642கி.மு. 543to 552-ல்,அதாவது கி.மு.544-ல்நடந்ததாகநம்பப்பட்டது. ஆகையால்

பண்டைக்காலத்தில் புத்தர் கி.மு.489-லோ அல்லது 544-லோ உயிர் நீத்ததாகத்தமிழர்நம்பினதாகக்கருதுவதற்கிடமுண்டு. (மஹாவம்சம் அத்தியாயம் 47-செய்யுட்கள்15,18,24IRAS1913pp.527-9) பிள்ளையவர்கள் இக்காலத்தை எடுத்தாளவில்லை. இதனை எடுத்துக்கொண்டால் மணிமேகலையின்காலம் 1616–544–1073 கி. பி. அல்லது 1616 489-1128கி.பி. என்றுமுடியும். இது அவர்கள்கொள்கையோடு மாறுபடுதலின் சீனதேசகர்ணபரம்பரையில் வழங்கிவந்தகாலத்தை (கி.மு.850)எடுத்தாண்டனர். இவ்வாறு எடுததாளுதற்கு ஆதாரமின்னதென்பதுங்காட்டவில்லை. இன்னும் அக்காலத்தையும் கி.மு. 846என்றுதமதுசௌகரியத்திற்குஏற்றபடி திரித்துககொண்டார்கள். தமிழ் பௌத்தர்கள் தங்களுக்குள் வழஙகிவந்தகாலத்தைக்கைவிட்டுச் சீனதேசத்தில்வழங்கியகாலத்தைக் கைக்கொள்ளுதற்கு நியாயமென்ன? மேற்காட்டியவாற்றால் பிள்ளையவர்களதுவாதத்தொடரில் ஒவ்வொன்றும் அதிதுர்ப்பலமாயிருக்கின்றதென்பது பெறப்படும்.

கி. பி. 5-ம் நூற்றாண்டிற்குமுன் வாரதினம் வழக்கில் இருந்ததில்லையென்றும், இம்முடிந்தமுடிபு கடைச்சங்கம் 2-ம் நூற்றாண்டு என்று சொல்வோரது கொள்கையோடு முரண்படுகின்றதென்றும், ஆதலின் அக்கொள்கைமுற்றும் பிழைபாடுடைத்தென்றும் பிள்ளையவர்கள் வாதிக்கின்றார்கள். இவ்வாதம் எத்துணைவலியுடைத்தென்பதனை இனி ஆராய்தல்வேண்டும். அவர்கள் "சிலப்பதிகாரநூலில் வாரதினம் சொல்லப்பட்டிருக்கின்றது என்ற ஒரு விஷயத்தைக் கொண்டே அந்நூல் கி. பி. 5-ம நூற்றாண்டிற்குமுன் தோன்றியிருக்கமுடியாதென்றும், கி. பி. 8-அல்லது 9-ம் நூற்றாண்டுவரையும் அதன் காலத்தை எதிர்பார்க்கலாமென்றும் நாம் நிச்சயித்தல் கூடும். ஏனெனின் டாகடர் பிலீட்என்பவர் வாரதினங்களைப்பற்றி கி. பி. 5-ம் நூற்றாண்டிற்குமுன்பு இந்தியர்கட்குத்தெரியாதென்றும், 8-ம் நூற்றாண்டிற்குமுன்பு இந்தியாவில்எப்பாகத்திலும் அது பொது வழக்கில்இருந்ததில்லையென்றும் நன்றாகஸ்தாபித்திருக்கிறார்" என்று கூறுகிறார்கள். சங்ககாலத்தில் வாரதினம் வழக்கில் இருந்தது என்பதை நான்மறுக்கவில்லை. "செருநற்றுச்சென்றொங்காதலர்யாழு' மெழுநாளேமேனிபசந்து" என்றுபிள்ளையவர்கள்காட்டும்திருக்குறட் செய்யுளேயன்றி மணிமேகலையினின்றும் பலதொடர்கள் (VII-23-5,

106-8, XIII-14, XXII-72-4, XXIX-19; மேலும், சிலப். பதிகம்
50-63) அவ்விஷயத்தைவலியுறுத்துகின்றன. ஏழுநாளென்றஅள
விலே யாதொருபிரயாசமுமின்றி நினைத்தறியாமலே இனைத்தென
அறியப்படாநாட்கள்கொண்ட வோர்காலத்தைக்குறிப்பிடக்கூடும்படி
அத்துணைச்சர்வசாதாரணமாக வாரதினங்கள் வழங்கிவந்தனவென்று
தோன்றுகின்றது.

பிள்ளையவர்கள் தேவாரத்தைமட்டும்பார்த்திருப்பார்களாயின்
8-ம் நூற்றாண்டிற்குமுன் வாரதினங்கள் இந்தியாவில்வழங்கப்பட
வில்லையென்பதை ஒப்புக்கொண்டிருக்கமாட்டார்கள். ஏனெனில்
2-வதுதிருமுறையில் 'வேயுறுதோளிபங்கன்' என்னும்பதிகத்தில்
சம்பந்தமூர்த்திசுவாமிகள் "ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்
வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே ஆசறு நல்லநல்லஅவை நல்லநல்ல
அடியாரவர்க்குமிகவே" என அருளிச்செய்திருப்பது லோகப்பிரசித்
தம். சம்பந்தர்7-ம்நூற்றாண்டிலிருந்தவராதலின் வாரங்கள்அக்கா
லத்தில் சாதாரணவழக்கில் இருந்தனவென்பது நன்குணரக்கிடக்கின்
றது. ஏனெனில் நாம்காட்டியமேற்கோளிற் கிரகவரிசை பூமியி
னின்றும் கிரகங்களின்தூரத்தின்பிரகாரம் சனி,வியாழன்,செவ்வாய்,
ஞாயிறு,வெள்ளி,புதன்,திங்கள் என்ற இயல்பானமுறையையல்லாது
வாரமுறையைப்பின்பற்றிஇருக்கின்றது.

கி.பி.5-ம்நூற்றாண்டிற்குமுன் வாரங்கள் இந்தியாவில்வழக்கில்
இருந்ததில்லை என்பதற்கு டாக்டர் ப்ளீட் காரணங்களாகத்தருவன
இரண்டே. 1 'கி.பி.484க்குமுன்னுள்ளசாஸனங்களில் வாரநாட்கள்
காணப்படாமை. 2' இக்காலத்திற்குமுந்தியதென்றுஒருதலையாய்நிச்
சயிக்கப்பட்டநூல்களில் வாரநாட்களைப்பற்றி ஒன்றும்சொல்லப்
படாமை.

கி.பி.484க்குமுன்னுள்ளசிலாசாஸனங்களில் வாரங்களைப்பற்றிச்
சொல்லப்படவில்லையானால் அதினின்றுஊகிக்கக்கூடியதென்ன? காலங்
காட்டாதசிலாசாஸனங்களில் வாரநாட்கள் சொல்லப்பட்டிருக்கு
மாயின் அவைகள் கி. பி. 484-க்குப்பின்வைக்கப்படவேண்டுமென்ப
தன்றி அக்காலத்திற்குமுன் இந்தியர்கட்கு வாரநாட்களேதெரியா
தென்பது பெறப்படுமோ? சிலாலேககர்களுக்குள் இம்முறையில் சில

யிலெழுதவேண்டுமென்னும்ஒருநியமனம் இருப்பது சகஜமல்லவா? சர்வசாதாரணமாய் வாரநாட்களை ஜனங்கள்வழங்கத்தொடங்கியபின்னும் பக்ஷம்திதிநக்ஷத்திரம் இவற்றாற் காலங்குறிக்கும் பழையநியமனத்தைமாற்றி வாரத்தாற்காலங்குறிக்கும் புதுநியமனத்தை லேககர் அநுசரிப்பதற்குச் சிலநூற்றாண்டுகள்சென்றிருக்கவேண்டுமென்றுகருதுவது தவறாமா?

மத்ஸ்ய, பத்ம, விஷ்ணுபுராணங்களில் வாரத்தின்முறையிற் கிரகங்கள்வரையப்பட்டுள்ளன. (Matsya 93—10 to 20; Padma V. 78, 79, 82; Vishnu. I 12). இவைகளில் மத்ஸ்யபுராணம் கி. பி. 275—300-ல் இயற்றப்பெற்றது. (F. E. Pargiter's Purana text of the Dynasties of the Kali age M'rod. paras 48—52) வைகானஸசூத்திரத்தில் புதவாரமென்பது காணப்படுகின்றது. (Macdonell's Skt. Lit. p. 262). காளிதாசரது (கி. பி. 450) சாகுந்தளத்திலுள்ள 'வைகானஸ்பரிநிஷ்டிதா:' என்பதை ஸ்ரீநிவாசர் என்னுமுரையாளர் "வைகானஸஸூத்ரமேவவானப்ரஸ்தாச்ரமஸ்ய உக்தத்வாத்ததாச்ரமவர்த்திநாம்வைகாநஸத்வவ்யபதேச இதிபாவ:" வைகாநஸசூத்திரம்ஒன்றிலேயே துறந்தோரதுநெறிகூறப்படுதலானே வைகாநஸர்கள்என்றுஅழைக்கப்படுவார்கள் என்று விரித்து எழுதுகின்றார். இன்னும்மநுஸ்மிருதியில் (VI. 21)

"புஷ்பமூலபலைர்வாபிகேவலைர்வர்தயேத்சதா
காலபக்வை:ஸ்வயம்சீர்ணை:வைகாநஸமதேஸ்ம்ருத:"

என்று கூறப்பட்டுள்ளது. குல்லூகபட்டர்என்னும் பிரசித்திபெற்ற உரையாசிரியர் "வைகாநஸமதம். விகநஸப்ரோக்தம்ஸூத்ரம்வைகாநஸம். மதம்தத்ரஹிவாநப்ரஸ்தஸ்யதர்மஸ்யபூரண:உபதேச:" என்றெழுதுகின்றார் (M. Seshagiri Sastri's search for Sanskrit and Tamil Mss. II. p. 8). இதிலிருந்து மநுஸ்மிருதிக்குமுந்தியது வைகாநஸசூத்திரமென்றும் அந்தஸ்மிருதியில் அதுஎடுத்தாளப்பட்டிருக்கிறதென்றும் புலனாகின்றது. மநுஸ்மிருதி கி. பி. 270-ல் தோன்றியிருக்கவேண்டுமென்றுசொல்லுதற்கு நியாயங்களுள. ஆந்திரர்களுக்கு க்ஷத்திரியபதவிகூறப்படாமையேயன்றி, அவர்களை வைதேஹிகபுருஷர்களுக்கும் காராவஸ்திரீகளுக்கும் உண்டான சம்

பந்தத்தாற்றோன்றியவரென்றும், மிகத்தாழ்ந்தஜாதியினரென்றும், கிராமங்களுக்குவெளியேவசித்துவந்தார்களென்றும், காட்டுமிருகங்களைக்கொல்லுதலே அவர்களதுகுலதர்மமென்றும் அதிற்கூறப்பட்டுள்ளது. (மநுஸ்மிருதி X. 36, 48). ஆந்திரர்கள் கி. மு. 230-முதல் கி. பி. 227-வரை அரசாட்சிபுரிந்துகொண்டிருந்தார்கள். ஆதலால் கி. பி. 227-க்குப்பின்னேதான் ஆந்திரர்களுக்கு மநுஸ்மிருதியிற்கூறியிருப்பதுபொருந்தும். மேலும் மநுஸ்மிருதியில் லிச்சிவிகள் 'விராத்யர்கள்' (பஞ்சமர்) என்றழைக்கப்படுகின்றனர். (X. 22). குப்தஅரசர்கள் தங்களை லிச்சிவிவம்சத்தினராகப் பெருமையுடன் சொல்லிக்கொள்வதினால், அவர்கள் இராஜ்யாதிகாரம்பெறுதற்குமுன்புதான் லிச்சிவிகளை இவ்வாறுசொல்லுதல்கூடும். குப்தர்கள் கி. பி. 320-ல் ஆட்சிசெய்யத்தொடங்கினர். ஆதலால் தற்காலத்திலிருக்கும் மநுஸ்மிருதி சுமார் கி. பி. 270-ல் தோன்றினதாகவேண்டும். (S. V. Ketkar's History of caste in India I. 65—6). ஆகையால் அதிலேஎடுத்தாளப்பட்ட வைகாநஸஸூத்திரம் கி. பி. 200-க்குமிகமுந்தியதென்பதும், அக்காலத்துக்குமுன்னரேவாரநாட்கள் அறியப்பட்டிருந்தனவென்பதும் தெளிவாகின்றது.

மேலும்ஆரியதேவரென்ற பௌத்தநூலாசிரியர் தாமியற்றிய ஒருநூலில்(Published in I.A.S.B.1898)ராசியையும் வாரத்தையுங்குறிக்கின்றார். இவ்வாரியதேவர் நாகார்ஜுனருக்குச் சமகாலத்தவர் (I.A.O.S. XXXI 2+1). நாகார்ஜுனரின்சரித்திரத்தையும் அவர் இயற்றிய 'மஹாபிரஞாபாரமிதாசூத்திரவியாக்கியாசாஸ்திர'த்தையும் கி.பி.405-ல்குமாரஜீவர் சீனத்தில்மொழிபெயர்த்தனர். நாகார்ஜுனர் ஒருசாதவாஹனனுடன் ஒரேகாலத்திலிறந்தனரென்றும், அவருக்குப்பின்னும் ஒருசாதவாஹனனுண்டானென்றும் ஹியூன்த்ஸாங்(கி.பி.640)கூறுகின்றார்(Watters II207) சாதவாஹனனென்ற அடைமொழி கி.மு.230toகி.பி.227-ல்ஆண்ட ஆந்திரவரசருக்கே உரியது. நாகார்ஜுனருக்குப்பின்னும் ஒருசாதவாஹனனிருந்ததால் ஆந்திரரில் கடைசியான புலோமான் III (கி.பி.220-7) பட்டமெய்துவதற்குமுன்னரே அவர்இறந்திருக்கவேண்டும். அதாவது கி.பி. 220க்குமுன்னரே அவரிறந்திருக்கவேண்டும். அவர் கனிஷ்கனுக்குப்பின் காச்மீரத்தைஆண்ட அபிமன்யுவின்சமகாலத்தவர் எனக் கல்ஹ

ணர் கூறுவர். (இராஜதரங்கிணி I. 173,177) அதற்கேற்ப நாகார்ஜுனரியற்றிய நூல்களிலும் கனிஷ்கன், அவன் சமகாலத்தவரான வசுமித்திரர், அசுவகோஷர் முதலானவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. (Watters II 204) மேலும் அவர் இயற்றிய 'மஹாபிரஞாபாரமிதா சூத்திரவியாக்கியாசாஸ்திர'மென்பது கனிஷ்கன் கூட்டுவித்த புத்த சங்கத்தில் (கி.பி.100 Smith p 269) காத்தியாயனீபுத்திரரியற்றிய 'மஹாபிரஞாபாரமிதாசூத்திர'த்தின் பாஷ்யமாகும். ஆகையால் நாகார்ஜுனர் கி.பி.100க்குப்பின்னும் 220க்குமுன்னும் அதாவது 2-ம் நூற்றாண்டில் ஜீவித்திருந்தனர். அவருக்குச் சமகாலத்தவரான ஆரியதேவரும் அந்த 2-ம் நூற்றாண்டிலேயே இருந்தவராதல்வேண்டும். அவ்வாரியதேவர் வாரதினத்தைக்கூறுவதால், வாரநாட்கள் சொல்லப்பட்டிருக்கும் நூல்களெல்லாம் கி.பி. 5-ம் நூற்றாண்டிற்குப்பின் வந்தவையாதல்வேண்டுமென்னுங்கொள்கை நிலைபெறாதென்பதும், கடைச்சங்ககாலம் கி.பி 2-ம் நூற்றாண்டென்பதற்கு வாரதினமொன்றைச் சிலப்பதிகாரங்கூறுவது ஓர் தடையாகாதென்றும் நன்கு தெளியப்பட்டது.

இதுகாறுஞ்செய்த ஆராய்ச்சியானே கடைச்சங்ககாலம் கி.பி. 2-ம் நூற்றாண்டென்பது தெளியப்பட்டது. இனிச் சிலப்பதிகாரமணிமேகலைச்செய்திகள் நிகழ்ந்திருக்கக்கூடியவருஷங்கள் இன்னவெனச் சுட்டி வரையறுக்கமுயலுவோம். கண்ணகியைப்பிரதிஷ்டித்து விழவுகொண்டாடியசமயத்துக் கஜபாகு வந்திருந்தனனென்றும், அவன் கி.பி.154—187ல் ஆண்டானென்பதும் காட்டப்பட்டது. மதுரை யெரியுண்டசமயத்தைப்பற்றிச் சிலப்பதிகாரத்திலேகொடுக்கப்பட்ட ஜோதிஷக்குறிப்புகளுக்கும் பொருத்தமானவை கி.பி.2-ம் நூற்றாண்டில் 11 வருஷங்களேயென்றும், அவை கி.பி.100,103,107 117,130,134,144,157,171,188,198 என்பனவென்றும் கூறினோம். மதுரையெரியுண்டதற்கும் கண்ணகிபிரதிஷ்டைக்கும் மத்தியில் 3 வருஷங்களேசென்றன என்பது கீழேகாட்டுவேன். கி.பி.100முதல் 144முடியவுள்ளகாலமும் கி.பி. 188,198 இவ்விரண்டுவருஷங்களும் கஜபாகுவின் ஆட்சிக்காலத்திற்குப்புறம்பாகஉள்ளனவாதலின் அவைகளைநீக்கினல், கி.பி.157,171 ஆகியஇரண்டேவருஷங்கள் எஞ்சுகின்றன. இவ்விரண்டினுள் எதைக்கைக்கொள்வோமென்பதற்கு, சிலப்

பதிகாரத்திலும் மணிமேகலையிலுங்கொடுக்கப்பட்டிருக்கிற விஷயங்களைப்பரிசீலனைசெய்யவேண்டும். கோவலன் இறந்ததைக்கேட்டதும் மாதவிதானுந்துறந்து, மணிமேகலையையும் போதித்தானம்புரிகின்றாள். (சிலப்XXVII103-8) கண்ணகியைப்பிரதிஷ்டைசெய்யும்பொழுது, செங்குட்டுவன்தேவந்திகையைநோக்கி மணிமேகலை யிளையளாயிருந்துந் துறத்தற்குக்காரணம்யாதெனவினவுகின்றான் (XXX1-5). மணிமேகலை ஆடவரணைந்துபெருநலனுகரும் பீடுபெறுபருவமடைந்தபொழுது (அவ்வாறுபருவமடைந்ததின்வருணனை XXX. 10—21-ல் விரிவாய்க்கூறப்பட்டுளது), மாதவியின்நற்றாய் மாதவியிடத்து மணிமேகலையையென்செய்யப்போகின்றாயெனக்கேட்ப, (XXX. 22–3), மாதவி தனதுமகளைத்துறவுபூணச்செய்தாளென்று தேவந்திகைகூறுகின்றாள் (XXX. 24—9). சிலப்பதிகாரம் XXX. 10—21 வரிகளைநோக்கினால் கண்ணகியைப்பிரதிஷ்டைசெய்தசமயத்து மணிமேகலை 14-வயதிற்குக் குறைந்திருக்கமுடியாது என்றறியலாம். மணிமேகலைநூலிலுள்ளசெய்திகள்நிகழ்ந்தகாலத்து அவளுக்குஎன்னவயதிருக்கலாமென்றுபார்க்கவேண்டும். அந்நூல் 3-ம் காதையில் அவளைப் பருவமங்கையாயிருந்தாளென்றுகூறுதலினால், 18-வயதிற்குள்ளாகத்தானிருக்கவேண்டும். உதயகுமரனென்னும் அரசிளங்குமரன் இவளைக்காதலித்து மணிமேகலைபருவமடைந்தனளோவெனச் சுதமதியிடத்துவினவுகின்றான் (IV. 97—102). இதனால் குலத்தலைமக்களதுகண்வழிநுழைந்து கருத்தினையுருக்கும் பெண்ணலங்கனிந்தபருவத்தள்என்பதுபோதரும். இன்னும் "இளையள்வளையோள்என்றுனக்கியாவரும், விளைபொருளுரையார்" (மணி. X. 79—80) என்றுசொல்லப்படுவதும் அவளதுபருவமினைத்தெ்ன்பதைக்காட்டும். இதுகாறுங்கூறியவாற்றால் கண்ணகிபிரதிஷ்டைசமயத்து மணிமேகலைக்குவயது 14-க்குக்குறைந்திருக்கமுடியாதென்பதும் அவள்மணிபல்லவத்திற்குச்சென்றகாலத்தில் அவளுக்குவயது 18-க்குமேற்பட்டிருக்கமுடியாதென்பதும் ஊகித்தல்கூடும். ஆகவே இவ்விருசெய்திகட்கும்இடைப்பட்டகாலம் 4-வருஷங்கட்குமேற்பட்டிராதென்பது தெளியக்கிடக்கின்றது.

கண்ணகிபிரதிஷ்டைக்கு எவ்வளவுகாலத்துக்குமுன் கோவலனிறந்தானென்பதை இனிக்கவனிக்கவேண்டும். கோவலனிறந்து

சிறிதுகாலத்துக்குட் கண்ணகியும் மரணமானாள். (சிலப். பதிகம் 50—3) கண்ணகி விண்ணுலகிற்சென்ற அதிசயத்தைக்கண்ணுற்ற மலைவாணர்கள், அப்போதுமலைவளங்காணுதற்பொருட்டுவந்திருந்த செங்குட்டுவனிடத்தில் அந்த அற்புதசம்பவத்தைத்தெரிவிக்கின்றார்கள் (சிலப். XXV. 57—61). மதுரையெரியுண்டதை நேரிற்கண்டு பின் வீரபத்தினிசென்றவழியே 14-நாளகத்து (சிலப். பதிகம் 51) சேரநாட்டுக்குவந்த சீத்தலைச்சாத்தனாரும் விவரித்துக்கூறுகின்றார். (சிலப். பதிகம் 41—3). தனதுதேவியிரார்த்தித்தவண்ணம் கண்ணகியைப்பிரதிஷ்டித்தற்காக இமயத்தினின்றுங்கல்கொணருதற்பொருட்டுச் செங்குட்டுவன்வடநாட்டியாத்திரைசெல்கின்றான். மலைவளங்காண்டற்காக வஞ்சியைவிட்டுச்சென்றதற்கும் வடநாட்டியாத்திரை கழிந்துசேர்தற்கும் இடைநின்றகாலம் 'எண்ணான்குமதியம்' (சிலப். XXVII. 149) அவ்வாறு வஞ்சியுட்புகுதற்குமுன்தான்சிறைபிடித்து வந்த ஆரியவரசரை மற்றைத்தமிழரசர்க்குக் காட்டிவரும்வண்ணம் வில்லவன்கோதையையனுப்பியிருந்தான். அவ்வாறே சோழ, பாண்டியர்களிடத்துச்சென்று ஆரியவரசரைக்காட்டிச் சேரன்செங்குட்டுவனதுவெற்றித்திறத்தை வில்லவன்கோதைவியந்தபொழுது, அவர்கள் இகழ்ந்துகூறியதுகேட்டு மனம்பொறாதவனாய்த் தனதுஅரசனிடத்தில்நடந்தவற்றைச்சொல்லுதற்கு நேராகவருகின்றான். இங்ஙனம் இவன்வந்துசேருதற்கு 3 அல்லது 4-மாதங்களுக்குமேற்சென்றிராது. செங்குட்டுவனிதைக்கேட்டதும், கோபங்கொண்டெழுகின்றான். மாடலன் அவனதுகோபத்தைத்தணித்து ஆரியவரசரைச்சிறைவிடுக்கும்படிசெய்கிறான். முன்னமேஏற்படுத்திருந்தகோயிலில் இமயமலைக்கல்லாற்செய்தகண்ணகியைப் பிரதிஷ்டைசெய்கின்றான். (சிலப். XXVIII. 224—234) இவ்வாறு செங்குட்டுவன் வடநாட்டியாத்திரைசென்றிருந்த 32மாதங்களுள் கண்ணகிகோட்டம்அமைக்கப்பெற்றது. அவன்திரும்பிய3,4மாதங்களில் கண்ணகிபிரதிஷ்டையுமாயிற்று. ஆகையால் கோவலன்மரணத்திற்கும் கண்ணகிபிரதிஷ்டைக்கும் இடைநின்றகாலம் 3வருஷங்களேயென்றது பெறப்படும். மேல்வரும்XXIX-ம்காதையிற்கூறப்படுவனவற்றாலும் இதுஉறுதியடைகின்றது. அக்காதையுள்"காவற்பெண்டும் அடித்தோழியுங் கடவுட்சாத்தனுடனுறைந்த தேவந்திகையுமுடன்கூடிச் சேயிழையைக்

காண்டுமென்று மதுரைமாநகர்புகுந்து முதிராமுலைப்பூசல்கேட்டாங் கடைக்கலமிழந்துயிரிழந்த விடைக்குலமகளிடமெய்தி யையையவண் மகளோடும்வையையொருவழிகொண்டு மாமலைமீமிசையேறிக் கோமகடன்கோயில்புக்கு நங்கைக்குச்சிறப்பயர்ந்த செங்குட்டுவற்குத்திற முரைப்பார்மன்" எனக் காணப்படுகின்றது. இதிற்சொல்லியிருக்குஞ் செய்திகளுக்கு 3 வருஷங்களுக்குமேற்சென்றிராது. 32மாதங்கள் என்று நூலகத்துக்காணப்படாமற்போயினை, மிகக்குறைந்தகாலந் தான்சென்றிருக்கவேண்டுமென்று நினைக்கக்கூடியவிதத்திற்றான் செய்திகளுள்ளன. கண்ணகி பிரதிஷ்டைக்குப்பின்னால் மணிமேகலை நூலாரம்பத்திற்கூறப்பட்டசெய்திகள்வரை 4வருஷங்களுக்குமேலே சென்றிராது என்று முன்னர்க்காட்டப்பட்டது. ஆகவே கோவலன் மரணத்திலிருந்து மணிமேகலைநூலாரம்பத்திறகூறப்பட்டசெய்திகள் வரை 7வருஷங்கட்குமேற்படாதுஎன்றேற்படுகிறது.

சித்திரைமாதத்துச்சித்திரைநக்ஷத்திரத்திலே இந்திரவிழவுஇயற்றுதற்குப் புகார்நகரிலுள்ளோர் கோரிக்கைசெய்துகொண்டிருந்ததாக மணிமேகலைமுதற்காதைகூறுகின்றது. இந்திரவிழவாரம்பித்த முதல்நாளன்று மாதவியும்அவள்மகளும் நடனஞ்செய்தற்குவரவில்லை. நடனம் சாதாரணமாக மாலையில் அல்லதுமுன்னிரவில் நடைபெறும். அன்றுவாராமைபற்றி மாதவிநற்றாய்கவன்று உடனேவசந்தமாலையை மாதவியிடத்தனுப்புகிறாள் (மணிII 1-6). இவ்வாறுவசந்தமாலையை யனுப்பியது இந்திரவிழவின்2-ம்நாளாக இருத்தல்வேண்டும். இரண்டாங்காதையினும் ஏழாங்காதையினும் சொல்லப்படுஞ்செய்திகள் ஓரேநாளில்நிகழ்ந்தன. அன்றிரவிலேமணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவத்திற்குஎடுத்துச்செல்கின்றது. எட்டாங்காதையில் மறுநாளுதயத்தைப்பற்றி (அதாவதுவிழவின்3-ம்நாள்)க் கூறியிருக்கிறது. (VIII 18) அன்றேமணிமேகலை மணிபல்லவத்தின் வளங்களையெல்லாங்கண்டு கோமுகியென்னுங்பொழ்நீரிலஞ்சிக்குச் சென்று ஆபுத்திரனது அக்ஷயபாத்திரம்பெற்று (காதைIX,X&XI) அன்றிரவிலேயே தனதுதாயிடத்துத்திரும்பிவருகிறாள். அன்று விசாகநக்ஷத்திரமும்பௌர்ணிமையும்சேர்ந்ததினமென்பது மேலே கூறப்பட்டது. II-ம்காதையிலிருந்துXIகாதைமுடியவுள்ள சரித

நிகழ்ச்சியினின்றும், மணிமேகலை தன்தாயைவிட்டு ஒருநாளேபிரிந்திருந்ததாக ஏற்படுகிறது. இதற்கேற்பத்தான் 'இன்றேழ்நாளில் நகர்மருங்கே' (VII23-5) 'இன்றேழ்நாளில் இடையிருள்யாமத்து' (VII106-8) இவ்விரண்டுவரிகட்கும் 'பின்னுல் 7நாளைக்குள்' என்றாயினும் அல்லது 'கொஞ்சநாளைக்குள்' என்றாயினும் பொருள் கொள்ளுதல்வேண்டும். வாரநாட்களைப்பற்றி யான்கூறியதைநோக்கினுல், இரண்டாவதுபொருளேஏற்புடைத்தாமென்றுதோன்றுகிறது. சித்திரைவிசாகநக்ஷத்திரங்களுக்கிடையில் இரண்டேநக்ஷத்திரங்களுள்ளன. சித்திரையில்இந்திரவிழவெடுக்கப்பட்டது. விசாகத்தில் மணிமேகலைபாத்திரம்பெற்றது. இரண்டுநக்ஷத்திரங்களும் 1முதல் 3நாள்இடைப்பட்டாயினும், அல்லது28முதல் 30நாள்இடைப்பட்டாயினும்வருவனவேயன்றி ஒன்றாகவொன்று 7நாளிடைப்பட்டுவருதலேமுடியாது. இந்தச் சோதிடஉண்மையும் 'ஏழுநாள்'என்பதற்கு யான்கொண்டபொருளையே பொருத்தமுடைத்தெனக்காட்டுகின்றது. இந்திரவிழவு சித்திரைமாதத்தின்கடைசியில் நடைபெற்றதெனவைத்துக்கொள்ளினும், மணிமேகலை பிக்ஷாபாத்திரம்பெற்ற புத்தரது பிறந்தநாள் வைகாசி3-ம்தேதிக்குப்பின் இருக்கமுடியாது. இரண்டாம் நூற்றாண்டின்பிற்பகுதியில் கி.பி. 162,170,181,189,200 இந்தவருஷங்களிலேயே வைகாசிவிசாகம் முதன்மூன்றுநாள்களுக்குள்வருகின்றது. கி.பி.157அல்லது171-வதிலிருந்து ஏழுவருஷங்கட்குட்பட்ட ஒருவருஷத்தை மேற்குறித்தவருஷங்களினின்றும் தெரிந்தெடுக்க வேண்டும். கி.பி.162என்றஒருவருஷந்தான் பொருத்தமுடையதாயிருக்கிறது. இதனேடொத்துச் சிலப்பதிகாரச்செய்திநிகழ்ந்தகாலமாயேற்படுவது கி.பி.157.

சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் சிலப்பதிகாரச்செய்திநிகழ்ந்தகாலமும் மணிமேகலைச்செய்திநிகழ்ந்தகாலமும் முறையே கி.பி. 756 & 771 என்றுகணித்திருப்பது முற்றிலும்பொருந்தாதென்பதை மேலேநிரூபணஞ்செய்தேன். அவர்களதுகொள்கைப்படி சிலப்பதிகாரக்கதைநடந்து 15-வருஷங்கழிந்து மணிமேகலைக்கதை யாரம்பிக்கின்றது. ஆனுல் எனதுஆராய்ச்சியினுல் 7-வருஷங்களுக்கு மேற்படாதென்றுகாட்டினேன். ஆதலால்இக்காரணத்தாலும் அவர்கள்குறித்தகாலங்கள் பிழையாதல்தேற்றப்படும்.

எனதுமுடியில்வந்தஇரண்டுவருஷங்களும் அடியார்க்குநல்லார் உரையைநீக்கி, நூலுட்கூறப்பட்டஜோதிஷநிபந்தனைகளுக்கெல்லாம் மிகப்பொருத்தமாயிருக்கின்றன. கி. பி. 157 சித்திரைமாதம் 27-ம் தேதியில் சித்திரைநக்ஷத்திரமும் சூரியோதயத்திற்குப்பின் 27-நாழிகை 49 பலமிருந்தது. இம்மாதத்திற்கு முந்திய பங்குனிக்கடைசி நாளில் சித்திரைநக்ஷத்திரம்சூரியோதயத்திலிருந்தது. ஆகையால் அன்றுகாமவிழவுமுடிந்தது. சித்திரை 27-க்குப்பின் 28-நாள்விழா நிகழ்ந்தது. ஆகையால் அது வைகாசி 24-ல்முடிவெய்தியது. அன்று கொடியிறக்கப்பட்டது. மறுநாள்(வைகாசி 25)நாட்கடலாடுதல்நடைபெற்றது. கோவலனும் மதுரையைநோக்கிப்பிரயாணமானான். அன்று திங்கட்கிழமை, விசாகநக்ஷத்திரம், சூரியோதயத்திற்குப்பின் 42-நாழிகை 21-பலமிருந்தது; சுக்லபக்ஷத்து 14-ம்திதி சூரியோதயத்திற்கு 34-நாழிகை 8-பலத்துக்குப்பின் றொடங்கிற்று. புறப்படுங்காலத்துத்திதியதுவாகையால் சந்திராஸ்தமனத்துக்குப்பின் சிறிது நேரம் இருட்டிருந்திருக்கவேண்டும். மேலும்மரணயோகம்இருக்க வேண்டுமென்றுநூல்கூறவில்லையாயினும், மேற்கூறிய வைகாசி 25-ல் புறப்படுஞ்சமயத்துநக்ஷத்திரம்அநுஷமாயிருந்தாலும் அந்நாளில்திங்கட்கிழமையும்விசாகநக்ஷத்திரமும் சேர்ந்துவருதலால் மரணயோகமிருக்கிறது. ஆடிமாதம் 29-ம்தேதி வெள்ளிக்கிழமை, அன்றுபரணி சூரியோதயத்திற்குப்பின் 58-நாழிகை 17-பலம் வரையிருந்தது. கிருஷ்ணாஷ்டமி சூரியோதயமாய் 47-நாழிகை 38-பலத்துக்குப்பின் றொடங்கிற்று. மதுரைத்தேவிக்கும் கண்ணகிக்கும்நிகழ்ந்தசம்பாஷணத்தை நள்ளிருளில் (அந்நாள் நடுஇரவுவரை தான் இருட்டுஇருக்கும்) சாத்தனார்கேட்டார். இதற்குஒருமணிநேரத்திற்குப்பின் பரணியும்அஷ்டமியுஞ்சேர்ந்திருந்தசமயத்து(சூரியோதயத்திற்குப்பின் 47-நாழிகை 38-பலத்துக்கும், 58-நாழிகை 17-பலத்துக்கும்இடையிட்டசமயத்தில்)மதுரையெரியுண்டதென்று நாம்ஊகிக்கலாம்.

இனி மணிமேகலைக்கதையையெடுத்துக்கொண்டால் கி. பி. 162 வைகாசிமாதம் முதல் அல்லது இரண்டாந்தேதியில் மணிமேகலை மணிபல்லவத்திற்குச் சென்றிருத்தல்வேண்டும் வைகாசி 1-ல் சூரியோதயமாய் 22-நாழிகை 22-பலத்துக்குப்பின் விசாகநக்ஷத்திரமும் 21-நாழிகை 15பலத்துக்குப்பின் பௌர்ணிமையுந்தொடங்கி

மறுநாட்சாயங்காலம் சுமார் 3-மணிவரையிருந்தன. ஆகையால் இரண்டுநாளிலும் விசாகமும்பௌர்ணிமையும் ஒன்று சேர்ந்தன. ஆகவே இந்திரவிழா சித்திரைமாதக்கடைசிநாளிலாயினும் அல்லது அதற்குமுந்தியநாளிலாயினும் ஆரம்பித்திருத்தல்வேண்டும். பிள்ளையவர்கள் கி. பி. 771-ல் வைகாசி 8-ல் இந்திரவிழாத்தொடங்கிற்றென்றார்கள். அப்போது சித்திரைமாதமாகவுமில்லை. சித்திரைநக்ஷத்திரமுமில்லை. பௌர்ணிமையுமில்லை. "சித்திரைமாதக்கடைசிக்கடுத்துள்ள பௌர்ணிமைக்குப்பக்கந்தானசனிக்கிழமை'யில் இந்திரவிழவாரம்பமென்று அவர்கள்கொண்டதின்பலன் இதுவேயாம்!

கோவலன்இறந்தது கி.பி. 157-ல்அல்லது 171-ல் ஆதல்வேண்டுமென்றும் அவற்றுள் மணிமேகலைக்கதையாரம்பகாலத்தைநோக்கி கி.பி.157 தான் பொருத்தமுடையதென்பதும் மேலேபெறப்பட்டது. கி. பி. 171ஐ எடுத்துக்கொண்டால் அதனோடொத்தமணிமேகலைக்கதைக்காலமில்லாமையாலே அதுகொள்ளற்பாலதன்று. மேலும் அவ்வருஷத்துச் சித்திரைமாதத்துச்சித்திரைநக்ஷத்திரம் 22-ம்தேதியில் சூரியோதயமாய் 55-நாழிகை 16 பலம் முடிய இருந்தது. விழா 28 நாள்நடந்தமையால் வைகாசி 19-க்குள்முடிந்திருக்கவேண்டும். 20-ம் தேதியில் நாட்கடலாட்டும் பிரயாணமுமிருந்தனவாதல்வேண்டும். ஆனால்அன்றுசனிக்கிழமையாதலின் கடனீராட்டுநிகழாது. 19-ம் தேதிபுறப்பட்டார்களென்றால் அன்று 14-ம்திதியேயில்லை. 21-லோ பௌர்ணிமை53-நாழிகை 51பலததுக்குவந்துவிடுவதால், புறப்படுஞ் சமயத்து(அதாவது 58, 60-நாழிகைகளுக்கு இடைப்பட்டவைகறையிருட்டில்) திதிபௌர்ணிமையாய்விடும். ஆகையால் கி. பி. 171 பொருத்தமில்லாமை நன்குணரப்படும். இதுகாறுஞ்செய்தஆராய்ச்சியின்பயனாய்க் கோவலனிறந்தது கி. பி. 157 என்பதும், கண்ணகிக்குக்கோயிலெடுப்பித்துவிழவியற்றியது கி. பி 160 என்பதும், மணிமேகலை மணிபல்லவத்திற்குமுதன்முதலாகச்சென்றது கி. பி. 162 என்பதும் துணியப்பட்டன. இதனால் கஜபாகுவின் (I) காலத்தைப் பற்றி முந்தியநூலாகியதீபவம்சம்சொல்வதுதான்சரியென்றும், மஹாவம்சங்கொடுக்குங்காலம்பிழையென்றும் உணருதல்கூடும். கி. பி 154-முதல் 176 முடிய, கஜபாகுஇருந்தவனாவன். கண்ணகிபிரதிஷ்டைகாலத்தில் செங்குட்டுவனுக்கு 50-வயதாயிருந்ததென்று,

'நின்னல்யாண்டுடையைந்திரட்டிசென்றதற்பின்னும்'என்ற மாடலன் மொழிகளால்(சிலப். XXVIII. 129—30) உணரப்படும். ஆகையால் செங்குட்டுவனது ஜனனகாலம் 160—50=110 கி. பி. அவன் 55 வருஷம்வீற்றிருந்தானெனப்பதிற்றுப்பத்து 5-ம்பத்துக் கூறும். அவன் 20-வயதிற்பட்டமெய்தினவனாயின் அவனது இராஜ்யகாலம் 130-முதல் 185-வரைஎன்றேற்படும். சிலப்பதிகாரஇறுதிக்கட்டுரையில் நெடுஞ்செழியன் செங்குட்டுவன்காலத்தவனாகச்சொல்லப்படுகிறான். கோவலனைக்கொலைசெய்வித்தபாண்டியன் இவனேயாவன். இவனும் கி. பி. 157-ல் இறந்திருக்கவேண்டும் இவன்மகன்வெற்றிவேற்செழியன் தனதுநாட்டினும்கண்ணகியைப்பிரதிஷ்டித்து வழிபாடியற்றினான். செங்குட்டுவன்காலத்தவன்சோழன்பெருங்கிள்ளி (சிலப். உரைபெறுகட்டுரை). சிலப்பதிகாரநூலாசிரியராகியஇளங்கோவடிகள் செங்குட்டுவனதுசகோதரர். அந்நூலுள்நிகழ்ந்தனவாகக்கூறியிருப்பனவற்றை அவைகளைநேரிற்பார்த்தசாத்தனாரிடமிருந்து கேட்டுணர்ந்தார். இச்சாத்தனார்தாம் மணிமேகலையாசிரியர். இவர் நன்மாறனைப்(வெற்றிவேற்செழியனதுமறுபெயர்)புறம் 59-ல் புகழ்ந்திருக்கிறார். மணிமேகலைநூலிற்கூறப்பட்டசரிதம் சிலப்பதிகாரச்சரிதத்திற்குப்பின்நிகழ்ந்தபோதிலும் சிலப்பதிகாரத்துக்குமுந்தியநூல் மணிமேகலை. ஏனெனின், இளங்கோவடிகள் சிலப்பதிகாரமியற்றிமுடிந்தவுடன், மணிமேகலை துறவினையும் பாடுதற்குவிருப்பமுளரென்றுசாத்தனாரிடஞ்சொல்ல அதற்குச்சாத்தனார் தாம் முன்னரே அதனை இயற்றிவிட்டதாய்ச்சொல்லுதலின், ஒருவர்முன்னர்மற்றவர் அரங்கேற்றினர். (சிலப். பதிகம்-87—9, மணி. பதிகம்-95—8). சாத்தனார் கி. பி. 157-ல் மதுரையெரியுண்டதைநேரிற்பார்த்தவராகலின், அவரும்இளங்கோவடிகளும் கி. பி. 200-க்குமுன்மரணமடைந்திருக்கலாமென்றுகருதுதல் தவறாகாது.

சிலப்பதிகாரத்தில் XXI-ப்காதையில்வரி3-4ல், திருக்குறளிலிருந்து 'இன்னாசெய்யாமை'யதிகாரத்து 9-ம்செய்யுள் எடுத்தமைக்கப்பட்டிருக்கிறது. மணிமேகலையில் XXII. 59-61 ஒருகுறளை(55-வது) யேயிடைப்பெய்துவள்ளுவரையுங்குறிக்கின்றார். 'இதேக்குறளைச் சிலப்பதிகாரத்துக்கட்டுரைகாதை முடிவுரைவெண்பாவில் எடுத்தாளப்பட்டிருப்பதையும் காண்க.' ஆதலால் இளங்கோவடிகட்கும்,

சாத்தனாருக்கும்முன்னிருந்தவர் வள்ளுவரென்பதும் கி.பி.150க்குப் பின் இருந்தாரென்றல்பொருந்தாதென்பதும் பெறப்படும்.

இனிக் கடைச்சங்கந்தொடங்கியகாலத்தைச் சற்றுக்கவனிப்போம். இடைச்சங்கத்திறுதியில் பாண்டியர் தலைநகராகியகபாடபுரம் கடல்கொள்ளப்பட்டதென்றும், அதனால் அக்காலத்திருந்தமுடத்திருமாறன் மதுரையைத்தலைநகராக்கி அங்கேகடைச்சங்கம் நிறுவினனென்றும் களவியலுரைகூறுகின்றது. அவ்வுரையிற்கூறப்படுவனமுழுவதையும் அங்கீகாரஞ்செய்தற்கு ஏலாதெனினும் மேற்குறித்த கடல்கோட்செய்தியினை ஐயமின்றி யேற்றுக்கொள்ளலாமென்று தோன்றுகிறது. அதற்குச் சங்கநூலாதாரமுமிருக்கிறது. கீழேவருவனவற்றாற் பாண்டியநாட்டிற்சிறிதுபாகமாயினுங்கடலாற்கொள்ளப்பட்டதென்பதுதெளிவாகின்றது.

“மலிதிரையூர்ந்துதன்மண்கடல்வௌவலின்
மெலிவின்றிமேற்சென்றுமேவார்நாடிடம்படப்
புலியொடுவின்னீக்கிப்புகழ்பொறித்தகிளர்கெண்டை
வலியினான்வணக்கியவாடாச்சீர்த்தென்னவன்”

(கலித்தொகை-முல்லைக்கலி.)

“வடிவேலெறிந்தவான்பகைபொறாது
பஃறுளியாற்றுடன்பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடுங்கொடுங்கடல்கொள்ள” (சிலப்-காடுகாண்காதை)

கி.மு.2387-ல்இலங்கை இந்தியாவிலிருந்து கடலாற்பிரிக்கப்பட்டதென்று இலங்கைச்சரித்திரங்கள்கூறுகின்றன. சங்கநூல்களிற்கூறப்படுஞ்செய்திகள், இந்தியாவும்இலங்கையும்பிரிந்து வெகுகாலத்திற்கப்புறம்நிகழ்ந்தனவாகஅறியப்படுதலாயினும், தலைச்சங்கம்ஒன்றிருந்ததுண்மையாயின், அதன்காலங்கூடப் பாரதகாலத்தை (கி.மு.1287 Shama Sastri’s Gavam Ayamamahabharata Asramavasika-parva)ஒட்டியிருந்தமையானும்,தமிழ்நூலுரைகளிற்கூறப்படுங்கடல்கோள் இதுவன்று. புத்தருக்கு39வருஷங்கட்குப்பின்னி(ரு)ந்த(அதாவது450கி.மு)பாண்டுவாஸாவின்காலத்தில்கன்னியாகுமரியையடுத்து இலங்கையின்தென்மேற்குப்பாகத்தில் வேறொருகடல்கோள்கூறப்பட்டுள்ளது (E. Tennan’t Ceylon Vol. I & 7 fn). ஆனால்இக்கடல்கோளைப்பற்றி மஹாவம்சம்ஒன்றுங்கூறவில்லை, இதுநிகழ்ந்தது

உண்மையெனின் இவ்வளவுமுக்கியமான ஒருவிஷயத்தை
தவறுமோவென்று ஆசங்கையுண்டாகின்றது. அதுஉண்
பினும், தலைச்சங்கத்திறுதியினிகழ்ந்ததாய்க்கூறப்படும் க
கக்கருதலாம். திருநான்ஸின் என்னும்பிக்ஷுவை ஹிம்ஸித
தேவர்களுக்குக்கோபமுண்டாயிற்றென்றும், அதன்பய
கடல்கோளுண்டாயிற்றென்றும், அதுகொழும்புக்குப்பக்
யாணியென்னுமாகாண முழுவதையும் அமிழ்த்திவிட்
இது நிகழ்ந்தது தேவாநாம்பிரியதிஸ்ஸாவின் பின்வந்த உ
யோதிஸ்ஸாவின்காலத்திலென்றும் இலங்கைச்சரித்
கப்படுகின்றன, பெரியதொருமாகாணமுழுவதையும்
இக்கடல்கோள் பாண்டியநாட்டிலும்ஒருபகுதியை அமிழ்
மென்பது மிகவும்பொருத்தமே. இராஜாவளியினும் (I
மஹாவம்சத்திலும் (XXII) இக்கடல்கோள் கூறப்பட்டிரு
கையால் இதனை உண்மையென்றேகொள்ளுதல்பொருந்து
புத்தருக்கு276-வருஷங்களுககுப்பின் 286-வருஷமுடிய
யில்ஆட்சிசெய்தான். அதாவது கி.மு.213-203 உத்தியா
காலத்துநிகழ்ந்ததாகக்கடல்கோள்கூறப்பட்டமையால் கி.
சமீபத்தில்உண்டாயிருக்கலாமென்று தோன்றுகிறது.
பியத்திற்குப்பாயிரம்உரைத்த பனம்பாரனார், அந்நா
நிறைந்ததொல்காப்பியம்' என்றும், அது 'நிலந்தருதிருவிற்
வையத்து' அரங்கேற்றப்பெற்றதோர் இலக்கணமென்று
ருர். கடல்கோள்ஒன்றேதமிழ்நூலிற்கூறப்படுவதாயின,
சங்ககாலத்திறுதியில் நிலந்தருதிருவிற்பாண்டியன்காலத்
தாதல்வேண்டும். களவியலுரையும்முடத்திருமாறன்காலத்
தாகக்கூறும். ஆகலின், நிலந்தருதிருவிற்பாண்டியனும், இப்
மாறனும்ஒருவனேபோலும் (Sen Tamil III 271-83;
38; 465-74). அங்ஙனமாயின தொல்காப்பியம் கி.மு.200
திற்றோன்றியதென்றேற்படும். ஆகவே கடைச்சங்ககாலம்
முதல் கி.பி.200வரை எனப் பெறப்பட்டது.

இவ்வியாஸத்தைத் தமிழில்எழுதிமுடித்தற்கு எ
S. வையாபுரிப்பிள்ளையவர்கள்புரிந்த உதவி ஒருநாளும் ம
தன்று. இதிற் சொற்பிழைகள் அநேகம்இருத்தல் கூடும்;
எனக்குரியவையேயன்றிஎன் நண்பருக்குரியனவல்ல. குறளி
தயவுசெய்துபொறுத்தருளுமாறு செந்தமிழபிமானிகளை தமைக்
ர் வேண்டுகின்றேன். ளை (55-

கே. ஜி. சங்கரையர் குறளைச்
7டுக்தா
ட்டுமம,

உ

தேவாரசிவஸ்தலம்.

திருநெல்வாயிலரத்துறை

என்று வழங்கும்

திருவரத்துறைப்புராணம்.

இஃது

ஸ்ரீ திருவரத்துறைவாசியாகிய

சோதிடம்

கரணம்

ராமாசாரியென்பவருடைய

ரெங்கசாமிஅய்யங்காரவர்களால்

ஆராய்ச்சியுடன்

ஸ்தலாபிமானியாகிய

ஸ்ரீ சுப்பராயதேசிகரவர்கள்

பொருளுதவியைக்கொண்டு

மேற்படி ரெங்கசாமிஅய்யங்காரவர்களால்

சிதம்பரம்

ப. S. சதாசிவம்பிள்ளையினுடைய

சண்முகசுந்தரவிலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ சாதாரண வருஷம்

1911௵ மேமீ 7௳

அடையாறு
சென்னை-20

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வாயிலரத்துறை

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

பண் பியந்தைக் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௧)

ஈரவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செல்வமுமேத்தாச்சித்தர்கடொழச்செல்வதன்றால்
வாரிமாமலருந்திவருபுனனிவாமல்குகரைமே
லாருஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௨)

பிணிகலந்தபுன்சடைமேற்பிறையணிசிவனெனப்பேணிப்
பணிகலந்துசெய்யாதபாவிகடொழச்செல்வதன்றான்
மணிகலந்துபொன்னுந்திவருபுனனிவாமல்குகரைமே
லணிகலந்தநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௩)

துன்னவாடையொன்றுடுத்துத்தூயவெண்ணீற்றினராகி
யுன்னிநைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றாற்
பொன்னுமாமணியுந்திப்பொருபுனனிவாமல்குகரைமே
லன்னமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௪)

வெருகுரிஞ்சுவெங்காட்டிலாடியவிமலனென்றுள்கி
யுருகிநைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றான்
முருகுரிஞ்சுபூஞ்சோலைமொய்ம்மலர்சுமந்திழிநிவாவந்
தருகுரிஞ்சுநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௫)

உரவுநீர்ச்சடைக்கரந்தவொருவனென்றுள்குளிர்ந்தேத்திப்
பரவிநைபவர்க்கல்லாற்பரிந்துகைகூடுவதன்றாற்
குரவநீடியசோலைக்குளிர்புனனிவாமல்குகரைமே
லரவமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௬)

நீலமாமணிமிடற்றானீறணிசிவனெனப்பேணுஞ்
சீலமாந்தர்கட்கல்லாற்சென்றுகைகூடுவதன்றாற்
கோலமாமலருந்திக்குளிர்புனனிவாமல்குகரைமே
லாலுஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௭)

செழுந்தண்மால்வரைபெடுத்தசெருவலியிராவணனலற
வழுந்தவூன்றியவிரலான்போற்றியென்பார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக்குளிர்புனனிவாமல்குகரைமே
லழுந்துஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௮)

நுணங்குநூலயன்மாலுமிருவருநோக்கரியானை
வணங்கிநைபவர்க்கல்லால்வந்துகைகூடுவதன்றான்
மணங்கமழ்ந்துபொன்னுந்திவருபுனனிவாமல்குகரைமே
லணங்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௯)

சாக்கியப்படுவாருஞ்சமண்படுவார்களுமற்றும்
பாக்கியப்படகில்லாப்பாவிகடொழச்செல்வதன்றாற்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப்பொருபுனனிவாமல்குகரைமே
லார்க்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே (௧௰)

கறையினார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்த
னறையுமபூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளை
முறைமையாற்சொன்னபாடன்மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைப்பாட்டிவைபத்தும்வல்லார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

திருவரத்துறை திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கடவுளைக்கடலுள்ளெழுநஞ்சுண்ட
வுடலுளானையொப்பாரியலாதவெம்
மடலுளானையரத்துறைமேவிய
சுடருளானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௧)

கரும்பொப்பானைக்கரும்பினிற்கட்டியை
விரும்பொப்பானைவிண்ணோருமறிகிலா

வரும்பொப்பானையரத்துறைமேவிய
அரும்பொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௨)

ஏறொப்பானையெல்லாவுயிர்க்குமிறை
வேறொப்பானைவிண்ணோருமறிகிலா
வாறொப்பானையரத்துறைமேவிய
நீறொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௩)

பரப்பொப்பானைப்பகலிருணன்னிலா
விரப்பொப்பானையிளமதிசூடிய
வரப்பொப்பானையரத்துறைமேவிய
சுரப்பொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௪)

நெய்யொப்பானைநெய்யிற்சுடர்போல்வதோர்
மெய்யொப்பானைவிண்ணோருமறிகிலா
ஐயொப்பானையரத்துறைமேவிய
கையொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௫)

நிதியொப்பானைநிதியிற்கிழவனை
விதியொப்பானைவிண்ணோருமறிகிலா
நதியொப்பானையரத்துறைமேவிய
கதியொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௬)

புனலொப்பானைப்பொருந்தலர்தம்மையே
மினலொப்பானைவிண்ணோருமறிகிலா
அனலொப்பானையரத்துறைமேவிய
கனலொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௭)

பொன்னொப்பானைப்பொன்னிற்சுடர்போல்வதோர்
மின்னொப்பானைவிண்ணோருமறிகிலா
அன்னொப்பானையரத்துறைமேவிய
தன்னொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௮)

காழியானைக்கனவிடையூருமெய்
வாழியானைவல்லோருமென்றின்னவ
ராழியான்பிரமற்குமரத்துறை
யூழியானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௯)

கலையொப்பானைக்கற்றார்க்கோரமுதினை
மலையொப்பானைமணிமுடியூன்றிய
வலையொப்பானையரத்துறைமேவிய
நிலையொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கல்வாயகிலுங்கதிர்மாமணியுங்கலந்துந்திவருநிவவின்கரைமே, னெல்வாயிலரத்துறைநீடுறையுநிலவெண்மதிசூடியநின்மலனே, நல்வாயில்செய்தார்நடந்தாருடுத்தார்நரைத்தாரிறந்தாரென்றுநானிலத்திற், சொல்லாய்க்கழிகின்றதறிந்தடியேன்றொடர்ந்தேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (௧)

கறிமாமிளகும் மிகுவன்மரமு மிகவுந்திவருந்நிவவின்கரைமே, னெறிவார்குழலாரவர்காணநடஞ்செய்நெல்வாயிலரத்துறைநின்மலனே, வறிதேநிலையாதவிம்மண்ணுலகினரனாகவகுத்தனைநானிலையேன், பொறிவாயிலிவ்வைந்தினையுமவியப்பொருதுன்னடியேபுகுஞ்சூழல்சொல்லே. (௨)

புற்றாடரவமரையார்த்துகந்தாய்புனிதாபொரு வெள்விடையூர்தியினா, யெற்றேயொருகண்ணிலனின்னையல்லானெல்வாயிலரத்துறைநின்மலனே, மற்றேலொருபற்றிலனெம்பெருமான்வண்டார்குழலாண்மங்கைபங்கினனே, யற்றார்பிறவிக்கடனீந்தியேறியடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (௩)

கோடுயர்கோங்கலர்வேங்கையலர்மிகவுந்திவருந்நிவவின்கரைமே, னீடுயர்சோலைநெல்வாயிலரத்துறைநின்மலனேநினைவார்மனத்தா, யோடுபுனற்கரையாமிளமையுறங்கிவிழித்தாலொக்குமிப்பிறவி, வாடியிருந்துவருந்தல்செய்யாதடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (௪)

உலவுமுலகிற்றலைகற்பொழியவுயர்வோடிழியுநிவவின்கரைமே னிலவுமயிலாரவர்தாம்பயிலுநெல்வாயிலரத்துறைநின்மலனே

புனைந்துமயங்கிய நங்குழையப்பொருவேலோர்நமன்றமர்தாநலி
யாவலமவாநாமபங்கியயர்வதன்முன்னடியே னுய்யப்போவதொர்
சூழல்சொல்லே. (௬)

ஏலமிலவங்கமெழிற்கனகமிகவுந்திவருநிவவின்கரைமே
னீலமலர்ப்பொய்கையிலன்னமலிநெல்வாயிலரத்துறையாயொ
ருநெல், வாலூன்றவருந்தும்முடம்பிதனைமகிழாதழகாவலந்தே
னினியா, னாலனிழலிலமர்ந்தாயமராவடியேனுய்யப்போவதொர்
சூழல்சொல்லே,

சிகரம்முகத்திற்றிரளாரகிலும்மிகவுந்திவருநிவவின்கரைமே
னிகரின்மயிலாரவர்தாம்பயிலுநெல்வாயிலரத்துறைநின்மலனே
மகரக்குழைபாய்மணக்கோலமதேபிணக்கோலமதாம்பிறவியிது
தா, னகரமுதலினெழுத்தாகிநின்றபடியே னுய்யப்போவ தொ
ர்சூழல்சொல்லே. (௭)

திண்டேர்நெடுவீதியிலங்கையர்கோன்றிரடோளிருபஃதுநெ
ரித்தருளி, யொண்டாடுநெடுவயல்சூழ்புறவினெல்வாயிலரத்துறை
நின்மலனே, பண்டேமிகநான்செய்தபாக்கியத்தாற் பரஞ்சோதி
நின்னாமம்பயிலப்பெற்றே, னண்டாவமரர்க்கமரர்பெருமானடி
யேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே. (௮)

மாணாவுருவாகியொர்மண்ணளந்தான்மலர்மேலயன்றேடியுங்
காண்டரியாய், நீணீண்முடிவானவர்வந்திறைஞ்சுநெல்வாயிலரத்
துறைநின்மலனே, வாணார்நுதலார்வலைப்பட்டடியேன்பலவின்
கனியீநதுபோலவதன்முன், ஆணொடுபெண்ணுமுருவாகிநின்று
யடியேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே. (௯)

நீருருநெடுவயல்சூழ்புறவினெல்வாயிலரத்துறைநின்மலனைத்
தேரூர்நெடுவீதிநன்மாடமலிதென்னாவலர்கோனடித்தொண்டுப
ண்ணி, யாரூரனுரைத்தனநற்றமிழின்மிகுமாலையொர்பத்திவைக
ற்றுவல்லார், காரூர்களிவண்டறையானைமன்னரவராகியொர்விண்
முழுதாள்பவரே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

௧

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ அருணகிரிநாதர்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்.

திருவரத்துறை.

கறுவிமைக்கணிட்டிணிதழைத்தியற்
கவிசொலிச்சிரித்-துறவாடி
களவுவித்தையிட்டுளமுருக்கிமுற்
கருதிவைத்தவைப்-பவைசேரத்
தறுகணிற்பறித்திருகழுத்துறத்
தழுவிநெக்குநெக்-குயிர்சோர
சயனமெத்தையிற்செயலழிக்குமித்
தருணிகட்ககப்-படலாமோ
பிறவியைத்தணித்தருளுநிட்களப்
பிரமசிற்சுகக்-கடல்மூழ்கும்
பெருமுனிக்கிராப்பரவுசெப்பதிப்
ப்ரபலகொச்சையிற்-சதுர்வேதச்
சிறுவநிற்கருட்கவிதைநித்திலச்
சிவிகையைக்கொடுத்-தருளீசன்
செகதலத்தினிற்புகழ்படைத்தமெய்த்
திருவரத்துறைப்பெருமாளே

௨

திருமாந்துறை

ஆங்குடல்வளைந்துநீங்குபல்நெகிழ்ந்து
ஆய்ஞ்சுதளர்சிந்தை-தடுமாறி
ஆர்ந்துளகடன்கள்வாங்கவுமறிந்து
ஆண்டுபலசென்று-கிடையோடே
ஊங்கிருமல்வந்துவீங்குகுடல்நொந்து
வோய்ந்துணர்வழிந்து-வுயிர்போமுன்
ஓங்குமயில்வந்துசேண்பெறஇசைந்து
வூன்றியபதங்கள்-தருவாயே
வேங்கையுமுயர்ந்ததீம்புனமிருந்த

வேந்திழையினின்ப மணவாளா
வேண்டுமவர்தங்கள் பூண்டபதமிஞ்ச
வேண்டியபதங்கள்-புரிவோனே
மாங்கனியுடைந்துதேங்கவயல்வந்து
மாண்புநெல்விளைந்த வளநாடா
மாநதர்தவருட்பர்கோன்பரவிநின்ற
மாந்துறையமர்ந்த-பெருமானே

வாலிகண்டபுரத்தைத துதித்து இத்தலத்தைத் துதித்த லால் இப்புராணத்திற்கூறிய திருமாந்துறையையேயாம்.

இத்தலத்தை சிவக்ஷேத்திரவிளக்கமுதலியவற்றில் திருமாந்துறையென்றும் வழங்குகின்றது.

ஆதிசேடன்றுதி.

ஐந்துளா ணைந்துளா ணைந்துளா னெனவைந்து வாயினு மறைந்தனன், வந்துளான் வந்துளான் வந்துளா னெனவைந்துவடிவமாய்வந்தான், முந்தியேபூசனைக்குரியதே வனைமுனங்காண்பதெவ்வாறெனச், சிந்தையே யுற்றன னொருவராயவர்வரச் சேடனுமண்மிசைப் படிந்தான். (க)

திபாகமன்னனு மருணைதன்னுதனுஞ் சம்புத்
தாகமுற்றதோ ரீசனும்வாயுவின் றலத்துளோன்றனு
மேகமுற்றவராகபத்தவருடன் கூடியேயெழிலா
யாகமுற்றொருவராயினாரத்துறை லிங்கமூர்த்தியுமே.

வால்மீகன்றுதி.

வெள்ளைகொண்டிடும் கைலையும் வெண்மதியவனு
வெள்ளைகொண்டிடும் ரிஷபமும் வெள்ளுமைதானும்
வெள்ளைகொண்டதில் வேட்டநீ விடுத்திலனாகி
வெள்ளையாகிய வாற்றையும் விரும்பினையரனே.

குருநமசிவாயரருளிய பரமரகசியமாலை.

திருவாத்துறையின் முத்தினற்சமைத்த சிவிகையும் பந்தருமெதிரே, வரவருள்கொடுத்துப்புகலி காவலர்க்கு வழங்கிய

வண்மையான்மறவே, னருமறைப்பெரியோர் மாதவமுனிவ
ரடைந்திடுந் தில்லையம்பதிவாழ், மருவரைக் கயிலைக்கிறைவனை
பொன்னம்பலவனே பரமராசியனே.

ஆதிசங்கராசாரிய சுவாமிகள் ஶ்லோகம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

௨

முகவுரை.

அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்த சொரூபராகிய சிவபெருமான் ஆன்மாக்கள் வழிபட்டுய்யும்பொருட்டுத் திருவுருக்கொண்டு வீற்றிருக்கும் சிவஸ்தலங்களுள் நடுநாட்டின்கண் மிகமேன்மையுற்று விளங்குந்தலமாம். இது நிவாநதிக்கரையிலுள்ளது. திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் முதலிய மூவராலும் திருப்பதிகம் பாடப்பெற்றது. நெல்வாயில் அரத்துறையென்றும், பிரமகைவர்த்தபுராணத்தில் தேவர்களுக்குச் சொன்ன சிவஸ்தோத்திரமகிமையில் பஞ்சபூதஸம்மிச்ர சிவஸ்தலமென்றும், வடவாலக்ஷேத்திரமென்றும், ஊழிகாசியென்றும், திருவள்ளுவநாயனார் முதலியோர்களை பெற்ற கலைமகளவதாரமாகிய ஆதியென்பவரது நீசத்துவத்தையொழித்து முத்தியளித்த காரணத்தால் முத்தி க்ஷேத்திரமென்றும் கூறுந் திருநாமங்கள் வாய்க்கப்பெற்றது. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அடியார்கள் திருக்கூட்டத்தோடு இவ்வரத்துறையை நோக்கித் தெரிசிக்கவருங்கால் வழிநடந்துவந்த சிரமத்தோடு மாறன்பாடியில் வந்தமர அதனைப்பொறுத திருவரத்துறையப்பர் நெல்வாயிலிலிருக்கின்ற பிராமணர்களுக்கு "ஞானசம்பந்தனம்பாலணைகின்றான் மான முத்தின் சிவிகை மணிக்குடையான சின்னநம்பாற் கொண் டருங் கலைக்கோனவன்பாலணைந்து கொடுமென அருளிச்செய்து அவ்வாறே ஞானசம்பந்தருக்கும்

க்ரம் மகிழ்ந்தளிக்கும்மலைகொள்ளலாகுங் கொண்டேய்த்தல்செய்வாயென அநுக்கிரகித்து முத்துப்பல்லக்கும் முத்துக்குடையும் முத்துச்சின்னமும் கொடுக்கப்பெற்றது. ஆதித்துறை திருவர்லந்துறை திருமான்றுறை திருஆடுதுறை திருவதிட்டத்துறை திருக்கரத்துறை என்னும் ஆறுதுறைகளுந் தொடர்ந்திருத்தலால் சப்த துறைகளென வழங்கப்பெற்றது. ஆதிசேடன் வால்மீகர் ஆதிசங்கராசாரியர் அருணகிரிநாதர் முதலியோர் வணங்கித்துதித்து அபீஷ்டசித்திகளை யடைந்தது. சேரசோழ பாண்டியர்களால் சிவக்குறிதாபித்துப் பூசிக்கப்பெற்றது. விஸ்வாமித்திரரும் வதிட்டரும் தீர்த்தபுரீசர் முன்பாக வாதஞ்செய்து அனேக அற்புதங்காட்டியது. ஆதிசேடன்பூசித்த காரணத்தால்அரவத்துறை யெனவும் பெயர் வழங்குகின்றது.

சப்தரிஷிகளும், விஷ்ணுவும், சனிபகவானும், அங்காரகனும் பூசித்துமேன்மை யடைந்தது. இத்தகைய அனேக ஐதிகங்களோடு விளங்கிய இந்தஸ்தலத்திற்கு சுமார் 400 பாடல்களுள்ள புராணத்தை திருத்தி அச்சிடவேண்டுமென்ற நோக்கத்தோடு சிலர் வற்புறுத்தியபடியால் ஸ்ரீ ஆனந்தநாயகி சமேத ஸ்ரீவரத்துறைநாதர் திருவருட்டுணைகொண்டு ஒருவாறு பரிசோதித்து வி. அ. சுப்பரூயதேசிகர் அவர்கள் பொருளுதவியால் அச்சிடப்பட்டது. சிவபத்திமான்கள் இப்புராணத்தையன்போடும் படித்தும் திருவரத்துறையைத் தெரிசித்து அபிமானித்தும் போகமோக்ஷங்களை யெய்துமாறு திருவருளை வழுத்துகின்றோம். சுபம்.

புராணிகர்கருத்து.

பெரிதுள தாகும் பெருகிய சூதர் பேசுநூற் றலங்களாமதிலும், பெரிதுள தாகும் பேருளார்மூவர் பேர்சொலிப் பாடியதலங்கள், பெரிதுள தாகு நந்தியெம்பெருமான் பேசிடும் பெரியநற்றலங்கள், பெரிததி லுளதோ பேசவே வேறு பெரும்புவியுலக மூவிடத்தும். (௧)

சூரியவம்சத் தோனுந் தொன்முசு குந்தனென்பான்
பாரியவாரூர் தன்னிற் றியாகரைப் பதிட்டை செய்தான்
சூரியன் புதல்வ னுகுஞ் சுக்ரீவ நாமத் தோன்றல்
பேர்பெற விளக்கு வித்த வெழிலாடு துறை மற்றீதால். (௨)

ஆதலால் தலத்தின் மேன்மை யாராலுஞ்சொல்லப்போமோ
ஓதியமிருகம் புள்ளா லுண்டான தலங்க ளெல்லாம்
தீதுகண் மிகவகற்றிப் பிறவியைத் தீர்க்குமென்றூர்
ஆதவன் மகன்றலத்தா லமைபலனறிவாராரே. (௩)

பதவிக்குப் போகத்தக்க பகர்நெறி யீதென்றீசு
னுதவிய துறையிவ் வேழு முகந்தநற்புரிகளேழும்
கதவுதலாகக் கொள்ள கைலையான்கருதித் தந்தா
னிதுவென வெண்ணிக் கொண்டேயீசர் தாளடைய நன்றே. (௪)

இன்னதிக் கிச்சை கொண்டே யிருடிகளிவடம் வந்தார்
இன்னதிக் கிச்சைகொண் டேயிசைமணம் வராகன் செய்தான்
இன்னதி தன்னிலாடி யெழிற்கங்கை பலத்திரட்டி
இன்னதிக் கிடேயில்லை யெழிற்றுறை துறையோரேழும். (௫)

௨

உடையார்பாளைய ஸமஸ்தான
வித்துவானும்கம்பராமாயணப்பிரசங்கியுமாகிய
வீரசைவக் கனகசபைக் கவிராயரவர்கள்
இயற்றியது.

சீரோங்கு தெய்வச் சிவக்ஷேத்திரமதனு
ளாரோங்கு நெல்வாயரத்துறைக்குப் பாரோங்க
மன்னுபுராணமதை மாணரங்காசாரியென்பா
ருன்னி யுரைத்தாருணர்ந்து.

சம்பந்தர் நன்முத்துத் தண்டிகையைப்பெற்றுவப்பா
ரின்பம் பெருகு தமிழ்ப்பவி - னன்பாவால்
சீராரத்துறைசீர் செப்பினனல்லரங்கா
சாரியவனன்பிற்றழைந்து.

தஞ்சாவூர் கோட்டை மஹாவித்துவான்
மகா-ள-ள-ஸ்ரீ கணபதியாப்பிள்ளை யவர்கள்.
இயற்றியது.

எங்கு நிறைந்தசிவமின்னருளாற் பேருருவாத்
தங்கு மரத்துறைசீர் தாமிசைத்தான்-பொங்குதமிழ்
நல்லரங்காசாரியெனுநாமத்தோன் சோதிடத்தும்
வல்லோனும் வாயன்பின் வாய்ந்து.

சன்னசிநல்லூர் வித்துவசிரோமணியாகிய
மகா-ள-ள-ஸ்ரீ மே. சண்முகப்படையாச்சியவர்களால்
இயற்றப்பட்டது.

வலஞ்சுழிவிநாயகக்கடவுளை வாழ்த்தி
சலஞ்சூழ்புவியிற்சகலருமறிய
நிலந்தனிற்பரமனீடித்துறையு
நிலமாமதனைநேர்ந்திடவெனக்குத்
தென்புவியனைத்துந்தெளிந்தநந்தீச
முன்புளபுராணமொழிவழிகாட்டி
யின்பமாச்சொல்லெனவிறைஞ்சவான்மீக
னன்புடனந்தியகமகிழ்ந்துரைப்பா
னெல்லையிலீசனிருந்தலத்துயர்வை
நல்தாச்சொல்வேனுணறிந்தளவி
லம்புவியதனிலனந்தமாலயம்
பம்புறுமவற்றைப்பகருதற்கெளிதோ
சொல்லுதற்கவற்றைச்சோருவன்சேடன்
வல்லனேயானும்வாரிதிப்புவியிற்
றுல்லியமாகச்சொல்லொணாதாயினும்
வல்லுநர்வகுத்தவழிமுறைப்படியே
வேடனைவென்றவேடுவமுனிவரே
சொல்லுவலொன்றுசுருதிநான்முறையின்
நல்லதென்றெவருநயப்புறும்பெரிய
பிரமகைவர்த்தப்பெருநூலதனுட்

சுரர்தமக்குரைத்தசொல்சிவத்தோத்திரத்
துறைவதுகேண்மதிமறைவதுகேண்மதி
யெல்லைதீர்புகழ்பெறுமிசைமுதுகுன்றஞ்
சொல்லுமவ்வூர்க்குச்சுத்ததென்மேற்கு
நல்லதிருமுட்டநகர்க்குமேற்றிசை
வல்லநல்வசிட்டர்வாழ்துறைக்கீழ்பால்
நல்லூர்வில்வநதிக்குநேர்தெற்கு
நெல்வாயிலரத்துறைநீடுறுந்தலந்தான்
சொல்வார்சிவாநதிசுயம்பார்வடக்கிற்
பல்லாண்டாகப்பாரினன்றுறுமே
தெள்ளுவெள்ளாறுதீர்த்தமதாகு
முன்னிவந்துறுநர்க்குறுகதியளிக்கு
மறுகுதோலணிந்தவரத்துறைநாதரொ
டறிவுருவாம்பிகையானந்தநாயகி
பிரியமாயங்குப்பெயர்ந்திடாதுறைவ
ருரியவத்தலந்தானுணர்வுறப்பெரிதுந்
திருநெறித்தமிழெனுந்திருப்பெயர்புனைந்த
வரியசெய்மூவருமருளுதேவாரமும்
பெற்றதாலதனைச்சொற்றிடற்கெளிதோ
வாதிசங்கரர்தானருந்துதிசெய்தார்
காதலாற்றிருப்புகழ்கவிஞரேறுரைத்தார்
செப்பினார்குருநமசிவாயகுரவரும்
ஒப்பில்வான்மிகியொளிர்தருமனந்தனுங்
திருத்தமாப்பூசைசெய்துமங்குற்றார்
பெருத்தநற்சேரசோழநற்பாண்டியர்
பேருடனாலயப்பதிட்டையுஞ்செய்தார்
சீர்பெறுந்தருமபுரமடத்தோருஞ்
செய்தனர்மடங்கள்சேராவடுதுறைச்
செய்தவத்தோருஞ்செய்தனர்மடங்க
ளிருக்குமேயிதற்குத்திருக்கில்பேர்பத்தே
இத்துறைகிழக்கினேன்றவைம்முக்காற்
சித்தியையளிக்குந்திருக்கரந்துறையில்
வித்தகவகத்தியர்விதிப்படிபூசை

மெத்தவேசெய்துமேன்மைபெற்றோர்
சித்திராங்கதையின்றென்றிசைநாற்காத
சத்தியாய்வளர்ந்ததுசாரங்கற்றே
யிக்கதின்மேற்கே யிசையுமைமுக்காற்
றங்குவதரத்துறைத்தலந்தானது
மரியநெல்வாயிலரத்துறையென்றே
பெரியமாம்முன்னர்ப்பேசியதிதுவே
இத்தலமதனி லிறந்தோர் பிறந்தோர்
பத்தியின் வாசஞ் செய்தோர் பார்த்தோர்
சத்தியம் பட்சி சதிவிலங்கி யாவும்
மெத்தவுஞ் சாமுன் மேன்மையிற் கேட்டோர்
நித்திய மோக்ஷ நிலையுறப் பெறுவார்
மித்திலச் சிவிகை நிறைந்த பொற்சின்னம்
தத்தமாய்ப் பெற்றார் ஞானசம்பந்த
ரெழுவர் தாய்தலைமக விசைந்த இமையைப்
பழுதினைத் தொலைத்தார் பகர்கவியுகத்தே
யன்னமலர்ப் பொய்கை யவட்காயதுவே
பின்னமுநீல மலரெனும் பொய்கையில்
வன்னமா மாயன் மகிழ்தவஞ்செய்தான்
சொன்னநற்சேடனும் சொற்றவம்புரிந்தான்
நன்னயமாக நற்சனிசேயும்
தந்தோய்த்திரத்தவஞ்செய்திட்டார்
இறந்தோர்முத்தி யெய்தப்பிதிர்க்குப்
பிறந்துளதொன்று பெருவடமாலே
பற்றிதன்மேற்கே மலருமைமுக்காற்
சொற்றனர்வசிட்டத் துறையெனமுன்னோர்
திகழுதென்மேற்கிற்றிரண்டமைமுக்கால்
நிகழுநற்றலந்தானே ராடுதுறையாம்
செப்பினவதன்மேற் சேருமைமுக்காற்
றப்பிலாமான்றுறை தானதுவாகும்
இத்தலவடமே லிசையுமைமுக்கால்
அத்தலமிராகு விஞலந்துறையே
இங்கிதன்வடக்கே யிசைந்தமைமுக்கால்

அகவல்.

தங்குலஞ்சாதி சத்திகன்றறையே
இந்நூலுரையெழிலு மெழிலெழுதினிவர்
சிறுதாராப்புரைசெய்துளாரதனுள்
பொருத்தப்பெருமை யிருந்துளவென்றுச்
சித்தாந்தரானைத் தூக்கவிரித்தே
யப்பிறவினையொத்த தமிழ்மொழியதனி
லிந்தசமாகவியம்பினனுறெனி
னித்தியவாசநெல்வாயரத்துறை
தாமேறுவைணவ சமயத்தவனைப்
பரிவுறுபாரத்துவாச கோத்திர
வரங்காசாரியபிரானைப்
பெருந்தகையென்னும் பெருந்தலத்தோனே.

அகவல்முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

திருவரத்துறைப்புராணம்.

காப்பு.

திங்களங் குழவி நேருஞ் செவ்விய தந்தச் சோதி
தங்கிடுங் கரத்தான் முன்னாட் சந்தன வச்சி றுத்தோன்
புங்கவர்க் கபய மீந்த புனிதவெண் ணீற்று மேனித்
துங்கமா முகத்தோன் பாதத் துணையடி தலைமேற் கொள்வாம்.

பாயிரம்.

விநாயக வணக்கம்.

பூமேவு திசைமுகனு நெடுமாலு மகபதியும் போற்று கின்ற, ஏமேவு முதல்வனெனப் புகழ்பெறுவான் யானுமெழு தாறுமுன் யாரும், பாமேவு கருணைபொழி தருகவென வேண்டவருட் பான்மைநல்கு, மாமேவு மாமுகத்து வலஞ்சுழிப்போர் விநாயகனை வாழ்த்தி வாழ்வாம், (க)

சுப்பிரமணியவணக்கம்.

புயலேறும் புரந்தரன்றன் மருமகனென் றிடுங்காதல் பொங்கிநிற்பக், குயிலேறு மொழிமகளை மணமேற்றிக் களிசிறந்த குகப்பேரெம்மான், வெயிலேறு மெயிலேறு மரத்துறையில் மெய்யடியார் மிகவே வாழ்த்த, மயிலேறும் பெருமானை யயிலேந்துங் கோமானை வணங்கி வாழ்வாம். (உ)

பரசிவவணக்கம்

சீர்த்திமிகு மரத்துறையிற் றிருஞான சம்பந்தருசிவிகையோடு, மார்த்தவிய றிருச்சின்னங் கொடுத்தருளு மண்ணலடி யவர்தமக் குப், பூர்த்திமிகு மின்பளித்தருப் பின்னூறப்பொன் னடிநிழலைப் புரிந்த ளிச்சுருந், தீர்த்தபுரி யீசர்திரு வடிமலரை முடிமலாமேற் சேர்த்து வாழ்வாம். ௩

பராசத்திவணக்கம்.

வரத்துறைவேண் டியபேர்க்கு வண்டமிழுஞ் செந்திருவும் வாய்ப்ப வென்றுங், கரத்துறைநெல் லிக்கனியே போற்கவடக்கணி த்தே யெண்மையெலாங் களிப்பினிய, வரத்துறையின் சிரத்து றையுங் கருணைநாயகியாளா மொப்பிலாத, வரத்துறைவா ழான ந்த நாயகிதாண் மலர்முடிமே லணிந்துவாழ்வாம். (௪)

சண்டேசுரவணக்கம்.

சண்டியீ சுரத்தலைவ ரினைக்கண்டா லெனைக்கண்ட தலகை மையா மன்றி, புண்டிகா மலர்யாவு முன்னையன்றி யாக்குரிய வு ரைப்பாயென்று, சண்டிகாப்புடனேயூந் தொடையன்முதற் றர ப்பெறுதேசவினுமென்று, சண்டிகேசுவரர்திருத் தாண்மலரைச் சென்னிமிசை தரித்து வாழ்வாம். (௫)

சமயாசாரியவணக்கம்.

சாகினியி லுள்ளபல சிவதலங்கடமைச் சென்றுதிக் கண்டு பா டிய, பூசனைசெய் தவரவரைப் புசப்பநேர்தகிய பூதலத்திற புக ழே தந்த, விசவெனுஞ் சம்பந்தர் திருநாவுக கரசர்பிரா னெழி லாரூரர், யோசனைகொள் மாணிக்க வாசகரோ டிவர்தாளை யுள த்தில் வைப்பாம், (௬)

பாயிர முற்றிற்று.

உ

சிவமயம்.

புராணவரலாறு.

சொல்லு நற்கவி சுகுணமாச் சோர்வின்றித் தூய்தா
மெல்லை யிற்புகழெய்திடப் பாவல ரேத்த
வல்ல பைக்கருள் மாமுகத் தவனடி வாழ்த்தித்
தொல்லை நாளுள வடமொழி தமிழினிற் சொல்வேன். (க)

திரும டந்தைதன் காதலன் றிகழ்மல ருந்தி
மருவு நான்முகன் வாயுறை வாணியை வாழ்த்தித்
தருவு நேரிலா வீகையா னரத்துறை தனில்மே
விருவி சும்பிடை யவனியிற் புராணம திசைப்பேன். (உ)

செப்பு நற்றல மிருப்பிடந் தேர்ந்துற வெண்ணி
லொப்ப றுந்திரு முதுகுன்ற நிருதியென் றுரைப்ப
மெய்ப்பு றுந்திரு முட்டமாம் பதிக்கது மேற்குத்
துப்பு றுந்திரு வதிட்டர்தந் துறைக்கெதிர் கிழக்கு. (ங)

வேறு.

எல்லையாம் வில்வநதியெனு நல்லூ ரிதற்குத்தென் மேற்
கெனவிசைப்பர், சொல்லிவா ழும்மை யழைத்திட வந்த சுவேத
திற் குத்தரந் தலந்து, நல்லவான் மீகர் சேடனுஞ் சனிய
னுடொரு மிழைத்திடு பெருமை, நெல்லுவாய்ந் துற்ற வரத்து
றை மகிமை யாவரே நிகழ்த்திடற் பாற்றே. (ச)

வேறு.

முன்னஞ் சொன்னது பிரமகை வர்த்தமென் றுரை
தரு முதுநூலி, னன்னர் தேவருக் குரைத்தனோ ரிச்சிவதோத்
திர மயந்தன்னிற், பன்னு நூலினிற் பகர்ந்திடு சரிதத்தைப்
பலரறி தரும்வண்ண, மன்ன நற்கதை யாமென நந்திவான் மீக
ருக் கறைந்தாரால். (ரு)

வேறு.

வேண்டி னார்க்கதை வடமொழி வகையினால் விரித்தார்
மீண்டு மிக்கதைத் தமிழினாற் குலோத்துங்க வேந்தன்

றாண்டு கோலினுற் பாடினன்வைணவச் சுகுணன்
காண்டு நாடெனு மரங்கவா சாரியாங் கவிஞன். (௬)

தழையும் வெண்ணிலாத் தரளவெண் குடைநிழற் றரணி
வழியி னுலுல காண்டவன் குலோத்துங்க வள்ளல்
விழைவு கொண்டபின் னித்தல மகிமையை விரித்தான்
பழியி லாததோ ரரத்துறைப் பதியின்சீர் பரவ. (௭)

முன்ன னாகிய முதலவ னாகிய முனிவோர்
பன்னு நாவினுக் கானவ னாகியும் பருந்தீ
வன்னன் மேவிடு கயிலைவாழ் நந்தியெம் வரதன்
சொன்ன வாறுதென் மொழியினுற் சொல்லெனச் சொற்றேன் (௮)

வேறு.

அவையடக்கம்.

மழைபொழி யமுத மியாவர் மாந்திர மருவுற் றாலும்
விழைவொடு சேர்ப்ப தல்லால் விலக்குவ துண்டோ மேன்மை
கழைசுவைக் கைக்கக் சற்றோர் கண்டுரை நூலி னுக்கிய
கிழிவுள சொலினு மிந்நூ லியல்வல்லோ ரேற்ப ரன்றே, (௯)

விண்டுயர் சருட னோக விழித்ததைக் காண்ட சேவல
நின்டிற மாகச் சேருஞ் செயலிலாச் செயலைப் போலப்
பண்லடயோர் பகர்ந்த நூலைப் பகுத்தறி யாத யானு
மிண்டுசீர் புராண சொலை விளைந்தன னறிவி லேனே. (௧௦)

ஆர்மறை சேறுந் றனு மடுகினோர் பூவுற றாலும்
பார்பய நீருற் றாலும் பரிந்ததைக் கொள்வார் போலத்
தேரிலா தடியேன் சொல்லுந் தெளிவிலா தெனினு மிந்நூல
சீர்மிகச் சிறந்தோர் யாருஞ் சிறப்பெனக் கொள்வ ரன்றே. (௧௧)

வேறு.

சொல்லு மிக்கதை சுகுணம தலவெனத் துணைக்கா
தொல்லை நீக்கினுஞ் சொற்குறை மேவினு மிச்சொ
லல்ல னீக்குறு மரத்துறைச் சரிதமென் றுய்ந்தே
யெல்லை யோர்களு மிக்கதை யேற்பரே யினிதின். (௧௨)

வேறு.

சுத்தவெண் ணிலவைப் பெற்ற சுகுணப்பா லாழி தன்னை
மத்தினு லுழக்கி வானோர்க் கமுதருட் டிருமான் மான

வித்தல மிசைத்து நந்தி யெவ்வகை வருணத் தோருஞ்
சத்தியம் வீட ளித்தார் சகலமு முய்ய வென்றே. (௧௫)

நூற்பயன்.

வேறு.

கண்ணுதலி னருளமைந்தோன் காசினியி லரத்துறையூர்
கலந்து வாழ்வோ, னெண்ணுபாரத்வாச கோத்திரத்தான்காண் ஸ்ரீ
ரா னிரங்கா சாரி, பண்ணுதமிழ்ப் புராணமிதைப் பரிவுடனே
பகர்ந்துரைத்தோர் படித்தோர் கேட்டோர், வண்ணமுடனெழு
திவைத்தோர் வாங்கினோர் நீடூழி வாழ்க மாதோ. (௧௬)

புராணவரலாறுமுற்றிற்று.

ஆகச்செய்யுள் ௨௬.

தலவிசேடம்.

ஐந்நிலத்திலு மதிகமா மழகிய மருத
மைந்நிலத்தலத் ததிகமா மரத்துறைத் தலந்தா
னைந்நிலத்தெய்வத் ததிகமா மரத்துறை நாத
னைந்நிலத்தலை யனந்தன்செய் தவநிலை யங்கண். (௧)

வேறு.

இத்தலப் பெருமை பெரிதுமே யுரைத்தா ரெழிலுளா
ரூரவலூர் நம்பி, சித்தமாய்ச் செய்தார் சிறப்புட னடங்கா ருமித்
தவர் சிவனை விடுத்தோர், சத்திய நிரைத்தார் சகலரும் பதவி
சாயுச்சியஞ் சார்வனை மென்றார், மெத்தமே லுளதோ வேறுள
தலங்கள் மேவவுங் காணவு மிலையே (௨)

சாதியிற் பிரமன் மணியினில் வயிரஞ் சாத்துறு புஷ்பமேற்
சாதி, நீதியி லரச னீரினிற் கங்கை நீள்புவி நாகிலையு மொப்பாங்,
காதுமொள் புனித சங்கரன் கதைபாங் கடற்புவி யதனிலே
யுள்ள, மேதகு தலங்க ளனைத்தினு மதிகம் விளம்புவார் திரு
வரத் துறையே. (௩)

பிறப்பினால் மரண மாவதாற் சிந்தை பெறுதலாற் பார்ப்பதி
னாலும், பிறப்பிலா ஞானப் பதவியை யடைவா ரெய்திடார் பிற
வியிப் பாரிற், சிறப்பினு லுடைய புலவர்கள் சொல்லுஞ் சேர்
தல மைந்துமொன்றாகி, யெறிப்புறு கற்பின் மங்கையர் போல
வெழினிறை வெய்துமித் தலமே. (௪)

பூத மைந்தினுக் கைம்பதி புகன்றது மறிந்தாய்
பேத மன்றிவந் தவைந்துமிப் பெரும்பதி யடையும்
ஏது வென்னென வத்தலக் கடையின்முன் னெழுத்தை
யோதி யுற்றிடின் திருவரத் துறையென வுணர்வாய். (௫)

காளவத்திரி யருணையுந் திருவானைக் காவற்
றுள்பெ யர்த்திடுஞ் சிதம்பர தலமது தரவரி
மீள வீகலான் மேவிய மருததுவத் துறையே
கோளி னீற்றினார் மூன்றெழுத்தீற்றினிற் கொளுவாய் (௬)

(இ-ள்) காளவத்திரி-என்பதில்-தி-அருணை என்பதில-ரு திருவானைக்காவல்--என்பதில்-வ சிதம்பரம்-என்பதில் ர-திருவாரூருக்குச் சிறந்த பெயராகிய-மருத்துவத் துறை-என்பதில-த்-துறை-ஆகத் திருவரத்துறை எனவருதல் காண்க.(எ-ம)

நாற்றலத்தினில் நாலெழுத்தேயெடுத்
தீற்று நற்றல வீற்றினில் மூன்றெழுத்
தாற்ற வேயெடுத தாளுத லேனெனிமா
சாற்று மேழ்துறை தமமினமுன்னுனதால (௭)

வேறு

பிறக்கி னுந்தல மிறக்கி னும்வீழ் சிறக்கி னுமபெயரா கினுங் கினும், பிறக்க வும்புவி யிலலே சாண்பரம னடியில வாழ்வுபெற புனிதரென், றறப்பெ ருமபலவு நாறுரைககுமுயிர போகு முன றெருவனஞ்செவி, திறத்த ரதுறைமெய னபபு கனறிடல மெ னை மிலலையிது காணுமே (௮)

வேறு.

காது ரைததிடுங் கன்னனன் மந்திரககதியால
திதகற்றியே சிவனுரு சேர்ந்திடு யோககம
யாது மநதிரத் ததிகமா பரத்துறை யரனபோ
சாது ரைததிடின் கயிலையை யடைவதற் புதமோ (௯)

வந்து தோற்றுவான் மீகியு மாலயம் வதிந்தான்
சிந்தை நன்குடைச் சேடனும செய்தனன் தவஞ்சம
பந்த நாதனபொற் சின்னமுஞ் சிவிகையும் [illegible]டைததான
எந்த மூவருஞ் சொல்லிய பாடலு மினிதே. (௧௦)

வேறு.

இதற்குரிய பெயர்சப்த சங்கையென்பா ரிவைதாமு மெம
[illegible]னை யென்னின், மதித்திடுமு ரைநதொடுக்கங் காணூழி காசி

தலம் வடவால் க்ஷேத்ரம், துதித்திடுநற் றீர்த்தபுரந் திருநெல் வா யரத்துறைதா னாயோர் சொன்ன, விதித்துரைத்த வான் மீகர் வியந்தவிந்நா மங்களையே விரித்துச் சொல்வாம். (கக)

பேரொணிவா நதிபுரமே பேசுமர வத்துறையே பெரியோர் சொன்ன, சீருளயே ரிவைமெயன்ப திசழ்ந்திடுபே ரிவைநம்மைச் சேப்பு பன்பாற், காருவைம் புவையெல்லாங் கண்டறிய நானு ரைத்தேன் கருதும் வேத, நீருலாந் தீர்த்தபுர நிருமலன்சீர் யா ரெடுத்தே நிகழ்த்து வாரே. (கஉ)

வேறு.

பால காசியி னயிரத் ததிகம்பார் விருத்தை
சால மற்றதி னயிர மதிகமித் தலந்தான்
கால வூழியின் காசியா மரத்துறை காண்பா
யாலு டன்வலஞ் சுழிக்கண பதியிங்கு மறிவாய். (கங)

தலவிசேடமுற்றிற்று.

ஆகச்செய்யுள் ௩௪.

தீர்த்தவிசேடம்.

ஆறு பத்தி னாறுங்கோடி யவனிமீதில் தீர்த்தமாம்
பாறி லொன்று சேர்வதான கங்கையாதி நதிகளாம்
வீறுமாலின் மெய்யின் வேர்வை மேவுதீர்த்த நித்யமாம்
கூறு மாலின் றேசசுத்தி கொடுத்ததிந்த தீர்த்தமே. (க)

வேறு.

ஆய்ந்ததோ ரேனக் கடவுளிந் நதியிலனேகநா ளருந்தவம் புரிந்தே, தோய்ந்தினி திருந்த தன்மையா லவர்மெய் தூய்மை யை யுறாதா மென்பர், தீர்ந்திடப் பாவத் தொடர்ச்சியைச்செ ய்யுந் திருவுளத் திச்சையே டளிக்கும், வாய்ந்தவிந் நதிநோர்மை யகத் திலெகரூண் வானதிக் கண்ணுமவ் வாறே. (உ)

வேறு.

அன்னமல ரெனும்பொய்கை யமைந்துளதங் கதின்பெரு மை யுற்றெயா னுதால், சொன்னதுகேள் ரியைமலர்ப் பொய்கை யென வுளதொன்று சொல்லத் தோன்று, பின்னுளான் னிவாந தியா மிதன்பெருமை யாரேனும் பேசற் பாற்றோ, நன்னதியோ சுவேசுபுறும் பன்னதியுங் கறப்படைதல் நலமேயன்றோ. (௩)

ஒவ்வொரு தலத்தி லொவ்வொரு வருகமே பொலவொரு வரமுறிவியல்பா, மிவ்வரத் துறையி லினியபா றனக்குமெழி லுள வாதிசே டனுக்கு, மெவவகை யருளு மிசைசலே மேகடகு மேத்துவான் பீசுரன் முனிக்குங், கவ்வைவை யொழித்துக சுரு த்தெலா மளிக்குங் காதையைக் கழறுவ தரிதே. (௪)

ஆதலா லிங்குப் பிறந்துளோ ரிறநதோ ரபுகுடன் வாசமே செய்தோர், தீதெலா மொழியத் தானமே செய்தோர் தீர்க்க மாய் மனதிலே நினைத்தோர், சாதியா லிழிவை யுற்றவ ரெனினுஞ் சார்வகைப் பிறவியேழ் தனிலு, மாதியாம பரம னருளினுன் மோக்க மடைவது திண்ணமென் றறிநீ. (௫)

எத்தலத் தேனு மிசைமறை யோருக் கெழிற்பசு பரிகய மீந்தோர், மெத்தநல் லாடை மேவிடப் பூண்கள் மேன்மையா யீந்திடு பலன்கள், சுத்ததண் டுலமுஞ் சுவர்ணபாத் திரமுஞ் சொற்பமா யாயினு மீண்டு, பத்தியாப் பிதிருக் களித்திடி னவை கட் காயிரத் திரட்டியாம் பலனே. (௬)

அன்னசத் திரங்க ளாலய மமைத்தோ ரமைவுறச் சிகரியும் புரிந்தோர், பின்னமில் லாம லேரியுங் கண்வாய் பிறழ்விலாக் கூபஞ்சா வடியு, நன்னய வேத பாடசா லையுமே நாறுநீர்ப பந் தனற் பலன்கள், பன்னவே புரிந்தோ ருலகினி லடையும பயன் களைப் பகருவ தெவரே. (௭)

தீர்த்தவிசேட முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௬௪

மூர்த்திவிசேடம்.

முடியார்மா றெழுங்கடவுள முன்குடி னைசசென்னிகவைத் தோன் முதல்வ னுமேனன், றொடியரவங கையுடையான் றெண் டனுக்குப் பணிவுடையான் றாயோர் யாரக்குரு, மெடிதுடைத் துச் சிரளிப்பான் பல்லுயிரைப் புரந்தளிக்குஞ் சிவனே யாறுனை, றொடியணியு முமைகேள்வ னரத்துறையெம் பெருமான்சீர் சொ ல்வார் யாரே. (௧)

காலனைமுன் னுதைத்தொழித்தான்காமனையுஞ் சுட்டழித்தான் கருதுந் தக்கன், சீலநெடு மகமொழித்தான் றகர்முகத்தையுங்கொடுத்தான் சிறந்தவாழிச், சாலவரு மாலமுண்டான் சலசமுதற் பல்லுயிர்க்குந் தந்தை யானான், பாலரெனும் பன்றிதமைக் காத்தளித்தான் சிவனையல்லாற் பரமன் யாரே. (உ)

வேறு.

அளவிலா தவனு யாதியாய்நாதி யாகியே யகிலமுமவனாய், விளைவதற் குரிய வினைப்பய னெல்லாங் கெடுத்தலும் விடுத்தலு மவனாய், களைகளை பயிர்போ லுயிர்களைக் காக்குங் கருணையங் கடலென நிறைந்த, வுளபுவனங்க ளனைத்தையுங் கடந்த வொருவனை யுரைக்குமா றெவனே. (௩)

வேறு.

யாக மன்னனு மருணைதன் னுதனுஞ் சம்புப்
பாக முற்றதோ ரீசனும் வாயுவின் பதியு
மேக முற்றவா காயத் தினிறையு மொன்றாகி
யோக முற்றிடு னரத்துறைப் பெருமையா ருரைப்பார். ()

வேறு.

ஐந்துமைந்து மைந்து நான்கு மதிகமான வீசனீ
யைந்துநீக்கு மைம்முகத்தா னைந்துமூர்த்தி யாகையா
னைந்துசென்னி யானமைக்க வைந்துகாட்டி யொன்றதா
யைந்தமர்ந்த மூர்த்தியா னரத்துறையி னாதனே. (ரு)

மூர்த்திவிசேட முற்றிற்று

ஆ செய்யுள் சசு.

நாட்டுப்படலம்.

செய்தவ மனமுஞ் சிவன்றனைப் பேணுஞ் சிந்தையுஞ் செல்வமுஞ் சிறப்பா, மெய்யுள வுரையு மிடியுளார் தமக்கு மேம்பட வளித்தலு மல்லால், நெய்தலுங் கமல மலருமே நிறைந்து நெருங்கிடு வயலெலா மள்ளர், கொய்திடுஞ் சாலி யோங்குறுஞ் சோழ நாட்டின்சீர் கூறவும் படுமோ. (க)

---

* இயாகம் என்பது தலைக்குறையாய் நிற்கின்றது.

வேறு.

கலைமக ளுருவெனக் கலந்த விண்ணிடை
நிலைமைகொண் மாமுகில் படர்ந்து நீள்கட
லலைகளை மேய்ந்துய ரரியி னுகமாய்
மலையினிற் சூல்கொடு மருவி யுற்றதே. (௨)

வேறு.

ஆரத் துறைப் பதியரன் மழுவென மின்னி யன்னான்
திரத்தி னுடுறும் போதணி சிலம்பெனச் சிலம்பிப்
பெருத்த வன்றரு கொடையெனப் பேருல கிடையே
வருத்த நீங்கிடப் பெய்திடும் வளம்பெற மழையே. (௩)

வேறு.

ஆறுநன் னதிகு ளங்க ளழகிய வோடை யெங்கும்
பேறுபள் ளங்கண் மூடப் பெருவெள்ளங் கொள்ளா தாகிச்
சேறுள கழனி சேர்ந்து செழும்புன லாற்றி னூடே
காறிகழ்க் கடலைக் காணக் கங்கைபோ லேகு மன்றே. (௪)

கானக மயில்க ளாடுங் காவியில் கமலம் பூக்குந்
தேனுள வல்லி பூக்குந் தெரிந்ததி னன்ப ரன்றி
மேனாறு நறவ மாந்தி மிகுசுரம் ஞிமிறு பாடுங்
கானக மலர்க ளாலே கமழ்தலைக் கவிக்கு மன்றே. (௫)

தருகனி முதிர்ந்து பாயுந் தக்கநற் றேனும் பூவின்
பெருமணங் கமழுந் தேனும் பேருள கொம்பின் றேனுஞ்
சுரமதிற் படர்ந்தே யாறாய்ச் சொன்மடை களையு டைத்து
நிரவியே பாயு நன்செய் நீள்பைங்கூழ் தனைவ ளர்க்கும். (௬)

பேடையோ டோதி மங்கள் பேர்ந்திடாக் கழனி தன்னில்
மேடெலாஞ் சங்கி னங்கள் மிளிரொளி தரள மீனும்
வாடிலா வாளை தாவி வளர்தருந் தேங்கிற் பாய்ந்திங்
கீடிலா தடித்த லாலே யீண்டிள நீரு திர்க்கும். (௭)

தேங்கொடு கமுகு வாழை தேற்றமா பலவே கொய்யா
வோங்கிடுங் கழைந ரந்த முயர்ந்திடு பொழில்க ளெல்லாம்
பாங்குள விண்ணு டெய்திப் பண்ணவர் யாரு முண்ண
வாங்கவை கொடுப்பக் கண்ட வைந்தரு நாணு மன்றே. (௮)

செப்பிய செய்யிற் பையப் பயிர்நடுஞ் சேடி மாரின்
தப்பிலாக் கமலக் கண்கள் சலத்தினிற் றோன்றலாலே
யொப்பிலாக் கஞ்ச மென்றே யுளர்தரும் வண்டி னங்கள்
அப்புள கழனி தோறு மலைந்தலைந் தயரு மம்மா. (௯)

ஏறுகட் டேரு ழுற்கே யெழிலுள நீர்க்கால் பாய்ச்சிச்
சேறுசெய் குநருந் தெய்வந் தொழுதுநற் செந்நெல் வீசி
நாறுசெய் குநரு நாற்றை நடவுசெய் குநரும் பின்பு
மாறுசெய் களைகட் டோம்பி வளம்படுப் பார்க ளானார். (க0)

களைகடிந் தொதுங்கு கின்ற கடைசியர் முகத்தைக் கண்டு
வளைதரு மரைக ளெல்லா மதியென நாணி வாடு
நளிர்தருங் குவளை யெல்லா நல்விழி கண்டு நாணும்
வளையெலாங் களத்தைக் கண்டு வாவியினிற் புகுந்து மல்கும். (கக)

பழியுள கள்ளை மாந்திப் பணிசெயுங் கடைசி மாதர்
மொழிதடு மாறி வேர்வை முகத்தொடு முறுவ ரென்ற
விழிசிவப் பேறக் கூந்தல் மென்றுகில் விள்ளஞ் சோர
வொழிதவத் தோர்கள் போல வுடலையு மறந்து ளாரே. (கஉ)

அரும்பவி ழுநங்கன் வாளி யாற்றில ராகித் தத்தந்
திரம்புகழ் கொழுந ரோடுஞ் செவ்விதிற் புணர்ச்சி யுற்று
விரும்பினர் கருப்பம் போல வெளியுளா ராருங் காண
நிரம்பின மணிச்சூல் முற்றி நிலத்துறை சாலி யெல்லாம். (கங)

ஒத்துநற் சாலி தானு முயர்கதிர்க் காடு சாய
பித்தனார் போலே தாமும் பெரும்படி யளக்க வுன்னி
வித்தெலா முதிரக் கண்டோர் விரயிமுன் னதனைப் பற்றிச்
சத்துவம் விடாத றுத்துச் சாலநற் போர்வைப் பாரால். (கச)

கற்றைவை களைந்தெ டுத்துக் காற்றினுற் றூற்றி நெல்லைக்
கொற்றவர்க் காறி லொன்று கொடுத்துப்பின் கொள்ள வந்தோர்
மற்றைய பேருக் கீந்தும் வரன்முறை யாகப் பின்னர்
வெற்றியாய்ச் சகடத் தேற்றி வீடெய்த்து விருந்தோ டுண்பார். ()

கார்பய றெள்ளு சாமை கடலைகோ தும்பை மல்லி
சீருறு துவரை யோடு சிறந்ததோர் மொச்சை பச்சை
நேருநற் பலவே டின்ன புன்செயி னோர்கீத வெல்லாஞ்
சேருபல் பண்டி யேற்றிச் செழுநிலங் கிழியச் சேர்ப்பார். (கசு)

துறவினர் தாசர் நேசர் தொண்டினோர் புசிக்க நல்லூண்
டிறவினி தளித்தே யேற்றுந் தீனர்க டமக்கு மீந்து
முறைவிடம் பிறிது நல்கி யுயர்தவஞ் செய்தே யோயாப்
பிறவியை யொடுங்க நீக்கிப் பெருங்கதி யுய்ப்பார் யாரும். (கஎ)

நிச்சலு மீச னன்பர் நெறியுளார் வரவைக் கண்டால்
குச்சமில் குருபூ பாலர் குடித்தெய்வங் காணல் போல
வச்சமுங் கொண்டு கூசி யடிபணிந் தினிதா யேத்தி
யிச்சையா யொழுகி யுள்ள குறிப்பறிந் தேவல் செய்வார். (கஅ)

நிறைதரு கனிதேன் பாலும் விழைவொடு நெய்யின் வெள்ள
முறையுள வெள்ளி பொன்போ லூற்றிடு மடிசி றன்னைக்
குறையிலா தளித்துப் பின்பு கோருத லெல்லாந் தந்து
மறையுளார் தவத்தோர் யோகி மலரடி பணிவர் கண்டாய் (கக)

பின்னுமந் நாட்டிற் சாலை பேருள மடமுஞ் சத்ரம்
வன்னமாங் கோவிற் கூவல் வளரறச் சாலை மற்றுஞ்
சொன்னநீர்ப் பந்த லன்றிச் சோர்விலாப் பயிற்சி வித்தை
நன்னய மாகச் செய்வார் நாடொறு நாட்டா ரெல்லாம். (உ0)

நாட்டுப்படல முற்றிற்று.

ஆகு செய்யுள் கூசு.

நகரப்படலம்.

நீலம்புகழு மரத்துறையி னிவாநதியின் வடபாலி னிலவு கொன்றைச், சலம்பரவுஞ் சடைமுடியான் றீர்த்தபுரீ சருக்கருகாய்த் தனித்து வாழு, நலம்புரியுந் திரிபுரசுந் தரியாகு நாயகியின் றிருளு நால்வாய், வலம்புரிப்பேர் விநாயகன்றன் மலரடிபதத்தைத் துதிசெய்து வணங்கு வோமே. (க)

வேறு.

சீரியர் கூறுஞ் சிறந்ததீஞ் சொல்லின் றெளிவெலாந் திரண்டசே விடையா, ஞரிய கவியா னகரமு ரைத்தாங் கருந்தவ ரதிசய மடைந்தார், தேரிலா தடியேன் றெரிந்தமட் டுரைத்தேன் றிருவரத் துறைநக ரெழிலாக், கூரிய தனைத்துங் குடியுளார் வகையுங் கூறுவேன் குவலயத் தவர்க்கே. (உ)

பூமகள் முகமோ திலதமோ நிறைந்து புகழுறுங் கமலமாம் விழியோ, மாமுலை யணியு மாரமோ மணிகொண் மாலையோ வள்ளையின் குழையோ, வாமுறச் சென்னி யணிகொலோ வுயிரினுகமோவென வெம்மால், சேமமிக் குயர்ந்த நகரினுக குவமை செப்புறப் பாலதோ வம்மா. (ங)

மஞ்சுறு மாட மாளிகை நகரின் முடியதோ வானவர் நகரோ
விஞ்சையர் நகரோ வதற்குமேற் படியோ விண்ணவர்க் கேறவே
ணியதோ, கஞ்சமா மலரா னங்கரனைத்துங் கைபுனைந் தியற்றி
க்கண் டதுவோ, வெஞ்சொலான் முடியப் பாலதோ நாவீ ராயிர
னிசைப்பவஞ் சுவனேல், (௪)

வேறு.

பாந்தள் யாகத்திற் பரிஸ்ரமம் பதத்திடு வாஸ்தோ
தேர்ந்த சிப்பிய ரைவராற் றெரிந்துரை வாஸ்தோ
வார்ந்த பானுவின் வாஸ்துவோ வளர்மதி வாஸ்தோ
வேந்து குண்டல வாஸ்துவோ விந்நகர் வாஸ்தே. (௫)

கோண லானதுங் குறைவிலாக் கரும்பன்றி யிலையாம்
பாண மானதிற் கொலையிலை பாவைக ளல்லால்
மாணு ருமது வுண்பவர் வண்டலா துளதோ
காணத் தாழ்வுக தலியலாற் கழறவும் படுமோ, (௬)

வேறு.

பூமகள் வீதி யுகந்தவள் பேரான் புரந்தரன் றருவென
வீவார், நாமகள் குடிக ளுவிட் டொழியா னன்மக விலாவக
மறியார், மாமக ளங்கு மாடிவிட் டிழியாள் மனுமுறை பிறழ்ந்
திடார் மாந்தர், மீமக ளனையா மின்னனு ருருவம் வேறுபா டிலா
துமே வினவால். (௭)

வேறு.

வாழைகமு கொடுதேங்கு வாருமரு கிற்பலரை வாவெனக்
கொடிய ழைக்கும், தாழைமல ரணிகணிகை தாளமொடு நிர்த்த
னீந் தாம்புரிவர் பரத மென்றே, ஏழுசுர முங்கொண்டு குயில்கி
ள்ளை நாணியிட வெவ்விடையர் பாடு மதனை, வேழமுக னும்வ
ந்து வேடிக்கை பார்க்கவே வீதியிடை மேவி னனரோ. (௮)

வேறு

உதிக்குமுன் றுனஞ் செய்வா ருயர்சந்தி யோமத் தோடு
விதிப்படி கருமஞ் செய்வார் விட்டிடார் விரத நோன்பு
கதிக்குள பிதிர்மகங்கள் காண்டெய்வ மதிதி பூசை
நிதப்படி செய்வார் சொன்னே னீக்கிடா ரீகை தன்னை. (௯)

இலக்கணங் கணித நூற்க ளெழுத்துள விலக்க ணந்தான்
துலக்குறுஞ் சோதி டந்தான் றொல்பல நூல்கள் விஞ்சை

விலக்குறு தருக்கம் சாஸ்திரம் விதிப்படி மதனூ லெல்லாந்
துலக்குறப் பார்ப்பார் கற்பார் தோற்றமா ரறிவின் மிக்கார்

வேறு.

மந்திரி பவுரோன் சேனை மகிபதி மனுநூ லுள்ளான்
தந்திரி வணிகஞ் செய்வான் றரல்கொளல் தனத்தின் மிக்கான்
சுந்தர வுழவோ ரெல்லாம் தூப்பயிர் சுகமாய்ச் செய்வார்
விந்தைசேர் குடிகள் செய்கை விளம்பிடப் பால தன்றே. (கக)

வேறு.

மற்றுள வருணர் யாரு மரபுள மனுநூல் கொள்வார்
கற்றறி வுடையார் திங்க டருமமை கதிக்க வுள்ளா
ருற்றதின் பெருமை சொல்ல வுயர்குண மெவர்க்கு முண்டோ
வுற்றறியுங்கால்வாய்மைபொறையெண்ண முண்மையுள்ளார். (கஉ)

நகரப்படலமுற்றிற்று.

ஆ செய்யுள் எஅ.

நிவாநதிப்படலம்.

நாடுநன் னகர நன்புக ழுரைத்தாய் நதியினற் புகழையு நவில்வாய், நீடுவா ணந்தீ நீயரு ளென்ன நிறைந்தவான் மீகனை நோக்கி, வீடுதான் வேண்டி வெகுதவ மிழைப்போர் விரும்பியிந் நதியிலோர் தரந்தான், ஆடுவா ளுகி ஞன்குளா ரெவரு மவலமாம் பிறவிநோய் நாடார். (க)

தீதிலா மொழியான் றிருவருள் புரிவான் றேவனு யவனிவாழ்ந் திருப்ப, னேததற் குவமை யெய்திய வாறு மிந்நதிப் பெருமையு மெழிலுங், கோதிலா தெனக்குக் கூறுநீ யென்றுன் குறைவிலா விடைகனிந் துரைத்தான், றீதெலாம் விட்டுத் திரிகுண மொன்றுய்த் தெளிந்தவ ருரைத்தன ரீதே. (உ)

காண்டிமுன் சதுர்யு கத்தினிற் கற்றோ னருந்தவன் மதங்கனுங் கனவான், வேண்டுநன் புதல்வி யிருவரு மலர்மேல் விளங்கிழைக் கொத்தவ ரவரும், பூண்டநற் பதத்தைப் புகழுடன் றுதித்துப் போற்றினர் வராகனைப் புவிமேல், வேண்டினுன் கணவனீயெனக் கென்றார் விண்டுவும் விழைவுற விதித்தான். (ங)

அண்டொணு யோனி யதிலுறை யாம லழகிய நதியதாய் வருவாய், நன்றுநன் னதியா யிருவரும் வருவோ நன்மண மடைதலைச் செய்வாய், விண்டுநன் னதியின் வெகுபலன் றருவாய் வேட்டமுற் றவரவர் தமக்குத், தண்டுழாய் மார்பா தாவெனக் கேட்டார் தந்தனன் றரணியை யளந்தோன். (௪)

அந்தமாந் தேக மக்கினி விடுத்தா னக்கணஞ் சேரநா டடைந்தார், முந்தவே யிருக்குங் கவுதமன் சிகரிமுதுளவயோத்தியின் னகரஞ், சிந்தையா மதிலே சேர்ந்துள தவத்தோ ரெவரினுஞ் சீரழ கமைந்தான், கந்துகஸ் தனத்தாள் கௌதமன் கையில் கமண்டல சலத்தினி லெழுந்தாள். (௫)

மந்திரத் தவன்கைக் கமண்டலஞ் சேர்ந்த மங்கையும் வராகனை யெண்ணி, யந்தரத் தோரு மதிசய மடைய வழகிய நதிவடிவமைந்தாள், சிந்தையின் படியே வளர்ந்தயல் பரவி செழுமலையிடமெலா நிறைந்து, வுந்திவந் தன்னை யுலகினோர்க் கமைய வோர்நொடிப் பொழுதில்வந் துற்றாள். (௬)

வேறு.

அலைதொடி கரமணி யழகிய மணிநகை யமலையொ டழகுடையாள், வலையிலை துகிலுரை கடிகொடி நுணுகிடை விழியிருபுடைகவர்வாள், வலையெனவழி தடவிரை வளைகுழ லினள்வரிவிழிகயல் வருநகையாள், கலைகரி தனமுளகடது வடவிலை கடலினு ளுறைபவளே. (௭)

விரைபடு மகில்முதல் சந்தனம் விரிமர முதலிய மிக்கிடவோ யரைபட வளையொடு முதுசினை யரைபட வொடிபட கடிதகழாக், குரைபட விரைவினில் துயில்சிறு குடியரை குறைவிடா தடியோடே, கரைபட வெறிவதும் வருவதுங் கழறிடில் கடுவிசை யொடுவருமே. (௮)

வேறு.

ஆடுமாந்தரீ னணியிளை யலைத்துக்கொ ட்வர்த
நாடுசேலையை யீர்த்துமே நதியது வேகத்
தோடு வந்திடுஞ் சிறப்பினை யுலகுளோ ரெவரு
மீடி தர்க்கிலை யென்றிசைத் தேத்தலற் புதமோ. (௯)

வேறு.

ஆன வேந்த ரமர்ந்த மனுநெறி
தானி றைந்த தரும்புகழென்னவே

ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தான மென்னத் தமைந்தது தீர்த்தமே. (க0)

கொலையு லாவுங் கரிகள் கொடுவிலங்
கலையு மான்முத லனைத்தையு மீர்த்துமே
மலையின் மேலுள மற்றவு மண்டலால்
விலையின் மாதரை யொக்குமவ் வெள்ளமே. (கக)

வேறு.

நன்செயைப் புன்செ யாக்கி நற்றிட ரான மேட்டைத்
தன்செய லகழி யாக்கித் தனித்ததைத் தோட்ட மாக்கி
விஞ்சையால் வித்தை கற்றோர் வேடிக்கை விதமாக் காட்டி
யஞ்சன வண்ண னென்ன வவனியோர்க் கமைந்த தன்றே (கஉ)

இப்படி யறைந்த தீர்த்த மினிதுடன் பெருகக்கண்ட
தப்பிலா முனிவ ரெல்லாந் தாஞ்சிரஸ் நானஞ்செய்தா
ரொப்பிலாத் தேவர் சூழ்ந்தா ருமையர னங்கு வந்தான்
மைப்படி நதியி னூடு மனத்தினற் றிபானஞ் செய்தான். (கங)

கர்த்தன்று னவட்குச் சொல்வான் கனக்குழ லிவைமாதே
நித்திய பதமும் பெற்றாய் நீடியர் வராகன்றன்னை
யுற்றனை புருஷனாக வுனக்கொரு குறைவுண் டாமோ
முத்தியா முனது தோய மூழ்கினோர்க் கென்பால்வீடே. (கச)

அன்னையே யழகாச் சென்றே யலைகடல் புக்குநீயுந்
துன்னுதி வராகன் றன்பாற் றோகைமா மயிலேயென்று
சொன்னதோர் வரத்தாற் கங்கை சூழ்ந்தவர் சுகுண மாக
மன்னிய புனறோய் வார்தா மாற்றுவார் பிறவியூசல். (கரு)

வேறு.

இன்னதி யோர நின்றே யெவர்தவ முஞற்றி னாலு
முன்னிய பலன்க ளெல்லா முற்றுமைக சரத மென்றார்
நண்ணின ரன்று தொட்டு நன்முனி நதியின் பக்க
மின்னிடை பாகத் தோனை மேன்மையாய்ப் பூசை செய்தார். ()

வேறு.

காண்டியிங் நதிபால் கையிலையி னுறையூர் கண்டவர்க்கெளிதி
னின்முத்தி, பூண்டநற் றிருவைப் புணர்ந்துளான் றலமோ புகழுள
வேழதாம் புவியில், வேண்டினோர் தவத்தை விரும்பினோர்க் கெ
ல்லாம் வினைத்தொட ரறுமெனவுரைத்தே, யாண்டவின் னதி
யிற் கமைந்ததை யுரைப்பே னூர்வமிக் குற்றுநீ யறியே. (கஎ)

இத்நலத் தருநி லிந்நதி யுற்றா ளிவடுணை கிர்ஷ்ணையென் பவளாங், கர்த்தன்ற னுரையால் வரநதி யாகிக் கடுகியந் திவளு டன் கலந்தாள், கொந்தளாள் பெரியாள் கோதைபின் சின் னுள கூறுநற் பெயரொவை யென்னில், நித்திய சுவேதை நிவா நதி வெள்ளா றெனு மபி தானமாநிகழும். (கஅ)

விட்டுடன் போன விழைவுள துணைவி கிட்டியவந் திவளுடன் மேவப், பட்டிணை கிறியப் பெருத்தநல் லுயரம் பாரினில் சிகரி போ லாக்கந், தொட்டதாற் றுணைவி தானுமவ் வாறுப்த் தூரி தமா பேகினூர் தொடர்ந்து, கட்டதா யிங்கு காமனை யெரித்த கடவுளைக் கௌரியைத் தொழுதான். (க௯)

மலைமகள் மகிழ்ந்து மகிணன்முன் வந்து மாநதி மங்கையைப் பார்த்தா, ளிலையுவந் தடிமேல் சரணமுஞ் செய்தா ளவளுநீ வாநதி யென்றாள், கலைஞரு மதுவே பேரெனக் கொண்டார் கனங்குழை நதியடி விழுந்தாள், தலைமக ளொடு தையலைத் துதி த்தா டன்மையைத் தரணிபாற் கேளே. (உ0)

சோதியு நீயே சொற்குண நீயே சுயம்புநீ சொரூபியு நீயே
நீதியு நீயே நீதிஞா னமுநீ நேர்பர ஞானமு நீயே
யாதியு நீயே யநாதியு நீயே யகண்டபூ ரணமதா யமைந்தா
யாதினை யிசைப்பே னறிவிலாத் தமியே னடிமலர்ப் பெருமை
யா னறியேன்) (உக)

வேறு.

சுந்தரியே அரந்தரியே சுகமளிக்குங் கருணைமிகு சோதி நீயே, யந்தரியே யெனைக்காக்கு மழகுதிரு வடிபணிய வறியேன் றாயே, யுந்நாமா யெனையமைந்தா யுத்தமியே யுனக்காரொப் பார்கண் டாயே, வந்தனையே யெனைக்காக வரமளிப்பார் வே றெவரே வழங்கற் பாலார். (உஉ)

வேறு.

நித்தியா நந்தநிர்மல சொரூபி நீடுல கிரக்ஷகி நீயே
மெத்தறிவோர் சித்தமிசை மேன்மேலு முற்றவளும் விமலைநீயே
சித்தர்தொழு மடிதம்மைச் சிறப்பாக யான்பணிந்தே சென்மம் விட்டேன், கற்றவர்கள் மிக்கபுக ழானந்த நாயகியே காத்தி டாயே. (உங)

வேறு.

அந்தமாய் துதித்தே யம்பா ளடிமலர் வணங்கும் போது
சுந்தரன் றாதனுள சுயம்புவை நதியுங் கண்டா
டந்தனன் சென்னி தாட்குத் தவப்பலன் கண்டே னென்று
பந்தமாய்ப் பரமன் றன்னைப் பார்த்திவை துதிக்க லுற்றாள். ()

சங்கரா சிவனே சம்பு சதாசிவப் பொருளே சத்தாய்ப்
பொங்கரா வணிந்தோய் பூமான் கங்கொய்த புங்க மூர்த்தி
திங்களை யணிந்த சோதி திரிபுர மெரித்த தேவே
பங்கமில் லாமல் காப்பாய் பரமனே சரண மென்றாள் (உரு)

பத்திரக் கைலை விட்டுப் பாருளோ ருய்ய வெண்ணி
மித்திர மாக க்ஷேத்ர மிகமனம் விரும்பி வந்தாள
அத்திர முறையுந் தேவர்க் கரசனு மாதி சேடன்
சத்திய முனைய டைந்து சார்ந்துயர் துயரொழித்தார். (உசா)

வித்தகா காலகாலா விழைவுட னடியேனுக்கு
நித்திய மகிழ்வோ டிங்கு நீள்புவிக் கரசாய வைப்பாய
பித்தகா பேதைப் பெண்மேல் பெருகிய கருணை செய்வாய்
யத்தனு னுனைய டைந்தேனடைக்கல மடிமை யாமே. (உஎ)

என்றவ ளிறைஞ்ச வீச னிவடவ மொனா நோக்கி
முன்றிகழ் நினைவின் போலே மொழியுமப் வராக்கன் றன்னைக்
குன்றலிற் புமானு வெண்ணக் குறையதைத நீப்பான் மானு
நன்றுநின் றதியா தீர்த்த புரீசனு நாமம பொறும் (உஅ)

வேறு

அந்தி யிடத்தி லப்பிகை பானு மராயுடன் சிவகணனு குழ்ந்தார், வன்னபா முனிவர் தேவரும் வந்பார வபமது வேண்டினள் கங்கை, புண்ணிய னுகப்புனலிடை யிருந்து பொற்கொடி சமேதனு யாக்கு, மெண்ணிய பொருள்களியாவுநீ யீந்தே யருளென வீந்தன னன்றே (உகூ)

அணியராய்த் தேவர் யாரும்வந் துற்று ருவரை முனிவரும வந்தார், கணிதநன் வழியா மகமுதற் பருவங் கலந்திடுந் திதிகு டமதியிற், புனறிர னுததி பொலியுநாட போந் பூவராகப்பெருமாடான், குணமுடன் சென்றேநீள்கடற் படியிற் குறுகியேம ணைந்திடு வானே. (௩0)

காணினு நதியை யாடினு நீரைக் கையினு லெடுத்ததை யுணினு, மாணுறும பிறவி தொடர்ச்சியிட் டொழிந்து வருகுறை பனைக்கையுந் தீப்பார், வேணியோ னருளும் விசயமும் பெறுவார் வீக்துள்ளார் தங்களி னென்னைப், பேணியிந் நதியி னுய்த்திடி னன்றிப் பிணமெரி தரினுமே முத்தி. (௫௧)

என்றுதான் சொல்ல விமையவர் சென்று ரிறைமுத லாருமேகினரால், நன்றிது வென்றே நன்மலர் பொழிந்தார் நதியெலா மிந்நதிக் கொவ்வா, வன்றுதொட் டின்று வரையினு மந்த விழாவினை யன்புடன் புரிவார், கன்றுரு மகத்திற் கருதிய திருநாள் கவினுமந் நதிமுதற் கடையே. (௫௨)

பின்னுமிந் நதியிற் பெருங்கதிர் மைந்தன் பிரமனு மனைவியோடுற்றுத், தன்னுடன் சாபந் தவிர்ந்தினி திருந்தார் தலத்தினின் பெருமையைப் பேச, வென்னுரை யாமோ வியன்றமட் டுரைத்தே னீற்குமுன் னிதனையே குறித்தச், சொன்னவிந் நதியிற் சூழரன் கோயிற் சோடச தலத்தினு மிதுவே. (௫௩)

நிவாநதிப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் ௧௧௧.

திருவரத்துறைப் படலம்.

முன்ன நாடணி நகரணி நதியணி மொழிந்தேம்
பின்னு மாமுனி வரவையும் பினைந்தலம் பெற்ற
சென்னி மாதுளான் செய்கையுஞ் செப்பமாச் செய்ய
பொன்னி றத்ததா ணந்தியைப் போற்றியே புகல்வாம். (௧)

வேறு.

தண்டகா வனத்தினின்று தவஞ்செயுமுனிவான் மீகி
கொண்டகார் வண்ணன் றன்பாற் கூடிட் நதியாய் வந்த
கெண்டையாள் மகிமை கேட்டுக் கிளர்வியுப் படைந்து வந்து
பண்டுள வாற்றி னூடேசுவேதையைப் பரிவாய்க் கண்டான். ()

கொண்டநற் றவவான் மீகி குலவிய விடையைக் கண்டு
வண்டைய வறிவா னின்னைப் பார்க்கவு மரிதாக் காதல்

கொண்டதந் நதியின் காதை கொடியனுக் குரைப்பா யென்ன
விண்டுவை யடைந்த வந்த நதியின்சீர் விளம்பக் கேட்டான். ( )

வேறு.

எத்த லத்தினு மித்தலம் பெரிதிதன் றன்மை
பத்தியுற்றிடப் போதரா பலன்வகைக் கெட்டா
சித்தரானவர் சிறந்தடைந் திதிற்றவஞ் செய்தார்
அத்தனற் புகழளவிட லார்கொலோ வறிவார். (௪)

என்னசொல்லுவே னித்தல மெல்லையி லுகந்தான்
முன்னமாகிய முதல்வ னுறைந்திவண் பேரான்
பின்னனாயகன் பேசிடு மூர்த்தியாச் சிவந்த
வன்னமாகியோன் வழங்கிடும் வரம்பல வம்மா. (௫)

பண்டைநாளையிற் பவனனு மனந்தனும் பகைத்துச்
சண்டைசெய்திடத் தரங்களைச் சகலருங் காண
வண்டர்நாயகன் வாழ்ந்திடு மேருமா மலையின்
கண்டவுச்சியை மூடினன் கடுவுளோன் கனன்று. (௬)

மூடிக்கொண்டபின் மேருவின் முடிகளி லொன்றை
ஈடுமாருதி யசைத்திடின் வீரனீ யென்றான்
கூடலாவதோ வச்செய னமக்கெனக் குறித்து
நாடலாயின னாரத மாமுனி தனையே. (௭)

வேறு.

நாரத னோடி வந்து நல்லிசைக் கூட்டிப் பாடச்
சீரிய வனந்தன் கேட்டுச் சிரமசைத் தாடநின்ற
வீரிய னான சாற்று விசைகொடு மோத லாலே
பாரிய சிகர மூன்று பாரினில் வீழ்ந்த தம்மா. (௮)

இவ்விதத் தன்மை கண்ட வேந்தலா மனந்தன் சீறித்
திவ்விய விசையிற் காது திரும்பிடுஞ் சமயந் தன்னில
கௌவையில் வலியால் வென்ற களனை வெல்லத் தானுஞ்
செவ்விதா மித்தலத்திற் றிகழ்தவ நெடுநாட் செய்தான் ( )

வேறு.

ஆறுமாறு மாறுமாறு மாறுமெட்டு ‡ மேதவிர்த்
தாறுமாறு மாறினோடு மாறுமைந்து † மன்றியே

‡ குரோதம்
† மன்மதன்

யாறுமாறு மாறுபத்து மாறு * மொன்பதாகவே
யாறுசென்னி யைந்துளானை யகத்திருக்கச் செய்தனன். (கo)

வேறு.

எந்தவிட யமுங்களருமிதயமதை வசப்படுத்தி
முந்திய நல் லறிவடக்கி மூர்க்கவழி முயலாமற்
புந்தியினை யரன்பதத்திற் புகவிட்டே பொலிவுபெற
நந்தலிலா வருந்தவத்தை நாகவிறை புரிகின்றான். (கக)

வேறு.

பொறிபுலன் வழிசெலா தடக்கிப் புந்தியை
நிறைபெரும் பொருளிடை நிறுத்தி நேயமாய்க்
கறைமிடற் றண்ணலைக் கருதி யூண்டுயி
லறுதிபெற் றிருந்தன னருந்த வத்தினே. (கஉ)

வேறு.

கொண்டநற் றவத்தோனை மறைதெளிர் பாரான் கோடையை மனதிலே யெண்ணு, னண்டிய தவநதீப் புகையழற் கூடி யமரு மென்றிசைகொள்ளா தப்பால், மண்டவமரர் பயமடைந்தோடி வழுங்கின ரனிடை யிதனைப், பண்டினா னறிவே னவனெனைக் குறித்துப் பன்னெடு நாட்டவம் பயிலல். (கங)

வேறு.

என்றமரர் தமக்குரைத்தே யீசனவ னனந்தனிடமேகக் கண்டே, யொன்றியநன் மனத்தோடு துதிசெய்து நமஸ்கரித்தே யுன்னைக் காணப், பொன்றலிலா வித்தலத்திற் றவம்புரிந்தேன் புண்ணியனே பூதநாதா, வின்றெனக்கைந் தொன்றாகு மெழிலுருவைக் காட்டெனக்கென் றிசைத்தான் சேடன். (கச)

அண்டர்பிரா னவ்வுருவத் தொடுவரவே யனந்தனுந்தானன் போடேத்தி, மண்டுபுகழ்ப் பணியிறைபே வேண்டுவர மென்னெனவே மருவுநாமங், கொண்டிடவென் பெயராலே யிப்பதிதா னருள்வையெனக் கொடுத்திட் டையன், உண்டுகொலோ வரமினியென் றுரைத்திடவே யனந்தனுந்தா னுரைக்கலானான்.

வேறு.

முன்னம் வாயுவோ டென்வலி காட்டிட மேருத்
தன்னமாமுடி படத்திறற் றடுத்துறும் போது

---

* சௌமியம்

பன்னுநாரத மாமுனி வந்துபண் பாடக்
கன்ன மீந்துநற் றலையசைத் திடவது காலம். (கசு)

வாயு மீறியே மும்முடி கொண்டுபோய் மறைத்தான்
ஆய காரியந் தீதுசெய் யவனேயா னுண்ண
நீய ருளவே வேண்டுமென் றிரந்திட நிமலன்
பாய வாயுவாய் நானுமுற் றிருத்தலாற் பலிபா. (கஎ)

வேறு.

ஆயினு முனக்குண் டளவுநீ யுண்ண வளித்தன னெனவு ரைத் தையன், மாயமாய் மறைய வாயுவை யுண்ணும் வகையினை மன்னுல கத்தோர்க், கேயுமா றரவத் துறையெனும் பேருளியைந்திடும் வகரவுச் செருவ, சேயரத் துறையென் றுரைத் திடல் சான்றுந் தேர்ந்துநீ கொள்கையென்றிசைத்தான். (கஅ)

வேறு.

இந்த நற்றலப் பெருமையை யியம்புறக் கேட்டே
முந்து மிந்நதி யேழ்துறைத் தலத்தினுண் முதன்மை
யெந்தை யாதென விசைத்திடக் கேட்டுமற் றவற்றின்
விந்தை கூறுவல் வேண்டிக்கே ளென்றனன் விடையும். (கசு)

திருத்த மானதோ ராதிநற் றுறையதன் குணக்கிற்
பெருத்த தோர்திரு மாலயன் றுறையதிற் பெரிதே
வருத்தந் தீர்திரு மான்றுறை யதனிற்கீழ் மன்னு
கிரித்து றுந்திரு வாடுநற் றுறையதின் கிழக்கே. (உ0)

பண்டு ளான்றிரு வதிட்டநற் றுறையதன் பாங்கே
திண்டி றற்றிரு வரத்துறை தெய்வமாப் பதிக்கீழ்
கொண்ட நற்றிரு முடவன்றன் றுறைப்பதிக் குலவு
மண்ட லுற்றபெண் ணாகட மெனுந்தல மருங்கே. (உக)

திருக்க ரந்துறை யகத்தியன் றிருவரத் துறையிற்
செருக்கு வான்மீகி வதிட்டன்றன் றுறைவயிற் சேர்ந்தா
னருக்கன் மைந்தனு மாடுநற் றுறையினி லமர்ந்தான்
றருக்குமாற்றுறை சேர்ந்தனன் மிருகண்டு தவனே. (உஉ)

பின்னு மாலயன் றுறையினிற் பெருமைசால் ராகு
மின்னு மாதிநற் றுறையிலிந் திரன்மாண்ட வியனுந்

கன்னி பின்னுள தொகையதாய்ச் சிவதலங் கலந்தார்
பன்னு சோடசத் தலமதாம் பாரின்மாற் கைக்கே. (௨௩)

பூத மைந்தினுக் கைம்பதி புகன்றது மறிந்தாய்
பேத மன்றிவர் தவைந்துமே பெரும்பதி யடையும்
யாது காரணந் தானெனி லைந்தலப் பெயரதி னீற்றுக்
கோத யல்லெழுத் தாமவை திருவரத் துறையாம். * (௨௪)

வேறு.

பிறக்கி னுந்தல மிறக்கி னும்விழி சிறக்கி னும்பெயர் நினைக்கினும், பிறக்க வும்புவி யில்லை காண்பரம னடியில் வாழ்வுபெறு புனிதரென், றறபெரும்பலவு நாலுரைக்குமுயிர் போகுமுன்னொருவ னஞ்செவி, திறத்த றத்துறைபெ னப்புகன்று விடில்செனன மிலையிது காணுமே. (௨௫)

வேறு.

காது ரைத்திநின் கருணைதன் மந்திரக் கவினாற்
றீத கற்றிபெச் சீவனுந் திருந்திடு மோக்க
மாது மந்திரத் ததிகமா மரன்பெய ரறையிற்
காது பெற்றபேற் றினையெவர் முடியுறக் கரைவார். (௨௬)

பாலகாசியி னுயிரத் ததிகம்பார் விருத்தைச்
சாலமற்றதி னுயிர மதிகமித் தலந்தான்
காலெழூழியின் காசியா மரத்துறை காண்பா
யாலுடன்வலஞ் சுழிக்கண பதியையு மறிவாய். (௨௭)

கங்கைநற்றல முளபல குறிகளுங் காண்பா
யிங்குவநதரிச் சந்திர னிருநததே சான்றாங்
கங்குல் நீணிறக் கவுசிகன் புரமுமே கண்டாய்
பொங்குசானவி யினும்வெள்ளா றதுபெரும் புகழே. (௨௮)

வேறு.

மாதை நோக்கியே வராகனு மேல்முக மமைந்தான்
நீதியம்பிகை யழைத்தனள் நிவாநதி யென்று
கோதை நீக்கியே புனிதமே கொடுக்கும்வெள் ளாறு
மாதியானுமே தீர்த்தபு ரீசனென் றறைந்தான். (௨௯)

* இதன் விரிவுரையை ௬-ம் பக்கம் ௬-ம் செய்யுளுரையிற் காண்க.

நன்று நன்றுநீர் நவின்றது நாடுறு மறிவோ
மின்று கூறிப்பின் னிங்குநின் றிறைவனைப் பணியச்
சென்று புண்ணியப் பேறெலா மடியனேன் சேர
துன்று றும்புனல் படிந்துயர் சிவன்றனைத் தொழுது. (௩௦)

சென்று வந்துமே யணுகினன் சேரவே வேண்டி
நின்று சொல்லிய பலவகைப் பொருளையு நினைவாய்
நன்று கேட்பனு னிவிடை யருளென நவின்றான்
குன்று றுக்குண நந்தியு முத்தரங் கொடுத்தான் (௩௧)

தேடி மாமுனி தீவினை தீர்ந்ததென் றிசைத்தே
யாடி மாநதிப் புனலபடிந் தவனையே யன்பாய்ச்
சூடி மாமுடிச் சுருதியா லச்சொல்வ ளந்தா
நாடி வந்தன னுனிலத் தாலய மதனை. (௩௨)

கண்ட நன்மனு வியற்றியே கட்டட மதிலுங்
கொண்டல் வந்தடை குறிகளுங் குவிமலைத் தொப்பாய்
விண்ட மாமதிள் சிகரியா வரணமு மெனமேற்
குண்ட வாறகழ் விப்பையு நோக்கினன் குறித்தான். (௩௩)

தொண்டு செய்பவன் மூவலம் வந்துமே தொழுதான்
வண்டு றுங்குழல் வல்லியும் வந்துமுன் வணங்கிக்
கண்ட மாதவ னம்பிகை திருவடிபலகால்
தண்ட மென்றடி பணிந்தனன் றரணியில் வீழ்ந்தே. (௩௪).

வேறு.

ஆதிசுந் தரியுநீ யனுதர ஸூக்ஷியுநீ யண்டபகி ரண்டமுநீயே
நீதிகுரு வன்னைநீ நித்தியகல் யாணிநீ நிமலவா னந்திநீயே
கோதிலா புராணிநீ நாரணன் சோதரி குலவுரு ரணியுநீயே
யேதிலார்க் குதவுநீ யெவரையுங் காப்பைநீ யேழைபங் காளிநீயே
வேதியர்கள் பூசிக்க வீற்றிருக் கின்றநீ மெய்யடிய ருளமாகுநீ, மேதினியி லுன்னைவிட வேறொருவ ருண்டோவெ னம்புவார் ஜெக தீஸ்வரீ, நீதிலா சத்தி நிவ்வியகுண பூஷணீ திருவடியிற் சேர்ப்பவளுநீ, சோதியாய் நின்றிடு மரத்துறையில் வாழ்கின்ற சுத்த வானந்தவுமையே. (௩௫)

அந்தரி பராம்பரி நிரந்தரி துரந்தரி யமலிபிர ணவரூபியே
தந்திரி கிருபாகரி சுமங்கலி மதங்கிநீ தத்வமசியானவளுநீ

சுந்தரி புராதரி தயாபரி திவாகரி சுராசுரர் வணங்கு நிமலி
விந்தைதமிகு சூலிமிகு நீலிவிழி சேலியே வேண்டினே னருள்பா
லியே. (௩௭)

வேறு.

விண்டு பின்னவ னேனைகளும் விமலனைக் கண்டு
கொண்டவைந் தெழுந் துள்முறக் கைசிரங்கூப்பி
பண்டை நான்மறை பாடிய பரமனைப் பகர்ந்து
தொண்டி ழைத்தவ னோதினான் பலதரஞ் சூழ்ந்து. (௩௮)

வேறு.

நாகம தடுத்தனை நாகம தெடுத்தனை நாகமது வேபூணினாய்,
நாகம்நீ ருற்றனை யாகமுமை வைத்தனை நன்றாக மத்திலுற்றாய்
நாகநா டியவனை நாய்க்கடைய னறிவனோ நாகமலரணிபாதனே
நாகனால் வழிபட்ட நன்னாக னுக்கருள்செய் நாதனே யருள் புரி
வையே. (௩௯)

வேறு.

செய்ய வேண்டிய யாவையுஞ் செய்துபின் சேர்ந்தோ
னுய்ய வேண்டிய துறுதிகொண் டோகையா னுடனே
துய்ய தான்யுகத் தொகையுளான் விடையனைத் தொழுதுக்
கையு வாயுமெய்க் கரணமு முரிமையாய்க் கலந்தான் (௪௰)

திருவாத்துறைப் படலமுற்றிற்று.

ஆக செய்யுள் ௧௫௧.

நீலமலர்ப் பொய்கைப் படலம்.

பண்டை நாடிகழ் பௌண்டரிக வாசுதே வன்றான்
ஆண்டொ னாதவன் யாருக்கும் வலியனா மரசன்
கொண்டல் வண்ணனாங் கண்ணனைக் குறைசெய நினைத்துச்
சண்டை செய்தனன் சராசந்த னோடவன் சார்ந்து. (௧)

எட்டி ரண்டுட னெட்டுமே முறைமுறை யெதிர்ந்து
விட்டி டாதமர் விளைத்திட மேவுமா விளைத்துக்
கெட்ட லைந்துபின் கிளர்வட மதுரையை விட்டுக்
கட்டம் நீங்கியே துவாரகை யணுகினன் கண்ணன். (௨)

விட்டி டாமற்போய் வெருவிதம் போரினை விளைத்தான்
துட்ட னுல்மனக் கிலேசத்தாற் சோர்ந்துமே யவன்றன்
கொட்டம் நீக்கிடக் குறித்துவந் தித்தலங் குறுகி
நிட்டை யார்தவம் புரிந்தன னீண்டமா ருனும். (ரு)

அந்த ரத்தினும் வானினு மம்புவி யதினுங்
கந்த ரம்மெனக் கதுவிய தவப்புகை கடுகி
நொந்து மால்கொள வானவர் நோன்புறு முனிவர்
வந்த ரத்துறை நாதனைச் சூழ்ந்தனர் வணங்க. (௬)

பெத்த நொந்தன மேலினிச் சகிக்கிலோ மேலோய்
நித்த வின்னலை நீக்குவாய் நெடியமா றவத்தைக்
கர்த்த னேயென கையையன் கருணையோ டெழுந்தே
அத்த வத்தினை யொழித்திட மாயன்முன் னணைந்தான். (௭)

ஏற்றின் மேல்வந்த விறையினைக் கண்டன னிறைஞ்சி
யாற்றி லேன்றுய ரையனே யவனைக்கொல் லெனவே
போற்றி னுன்வர மீந்திடு புராரியு மகிழ்ந்தே
வேற்றி லானைத்தான் வென்றிடத் தந்தனன் விமலன். (௮)

வேறு.

நேர்த்தியா யென்ன நெடுங்கணு லருவி நிலத்திடை வீழ்ந்திட விறைஞ்சிக், காதலை யையா கனகனைத் தொலைக்க கடுநர சிங்கமாம் போது, பார்த்திவ மூர்த்தி சரபமாய் வந்து பழைய வென்பலதனைநீ கவர்ந்து, கீர்த்தியைக் கொண்டா யதுமுத லெனக்குங் கெழுவலி குறைந்ததை யருளே. (௯)

தோத்திரஞ் செய்த தூயமா லவனைத் துலங்குறக் கைகளாற் றாக்கி, நேத்திர சலத்தைத் தன்கையாற் றுடைத்தே நீள்வலி யருளினு னீச, சூத்திர மடக்கி யழகனை யணைத்தே யாசையா மவைகளை யளித்து, நேத்திர நீரா னிறைவிட நீலப பொய்கையின் றலகினி னிலவும். (அ)

வேறு.

நீலமே கத்தன் கட்புன னிலத்தினில் விழலால்
நீல மாமலர்ப் பொய்கையென் றறைந்தன னிமலன்
நீல கண்டனு நேர்த்தியா நெடும்பெயர் வகுத்தான்
நீலை யுற்றமால் மாதவா வென்றுமே பேர் விழைந்தார். (௯)

கண்ட தேவரும் புனல்படிந் தாடினார் கருதிக்
கொண்டல் வண்ணனுங் கொற்றவன் வலியினைக் கவர்ந்தோன்
பண்டு போலவே பெற்றதன் பலமதைக் காட்டி
விண்ட பேரிது நீலமா மலர்ப்பொய்கை மேவி. (௧௦)

ஆடினாரதை மதித்துளோ ராசையி னயின்றோர்
தேடி னோரதைத் தீண்டினோர் தேவராய் வாழ்வார்
சூடி னேன்மதி சொன்னதிவ் வரமெனச் சொல்வார்
கூடி டும்பல னளவினைக் கூறுவ தெவரே. (௧௧)

வேறு

கைப்பெ றும்வளத் திகபர முழுதுறக் களிப்பார்
தர்ப்பணஞ்செய்து விதிமுறை தானங்கள் புரிந்து
முற்ப டும்படி பிதிர்தனக் குவப்பமுன் னீந்து
யிப்படிக் கைந்தோ டெட்டையுஞ் சொல்லினோ ரெவரு

அப்புனல் தனிலெதா டினோ ரயன்மா லாவர்
தப்பிலா முனிவோ ரெல்லாம் வரந்தருந் தரத்த ராவ
ரொப்பிலாப் பொய்கை தீர்த்த முன்னின பேருக்கெல்லா
மொப்பருந் திருவும் பெற்றே யொருநர கெய்தி டாரே. (௧௩)

தேனலர் பொழிற லங்கள் செய்பூசை விரதமோமந்
தானமுந் தருமசந்தி தபமிவை முதலா வுள்ள
வானநற் பலன்கள் கோடி யதிகம்வந் தடைத லாகு
மேனைய பலனின் றாயா மிப்புகழ் நீலப் பொய்கை. (௧௪)

விரும்பியிப் பொய்கை மூழ்கில் வினைவளர் பிறவிநீங்குந்
தெரிந்துகொள் கும்பந்தன்னி லாதித்தன் சேரும்போது
வருந்திடும் பிதிர்பொ ருட்டே மருவிப் பிண்டந் தானம்
புரிந்திடு வோர்கட் கெல்லாம் புரியினற் பலமனந்தம். (௧௫)

இத்தலநதியி னிசைவட பாலி லிருந்திடும் வடவால விருக்கம்
மெத்தவவ் விடத்தில் மேவினான் மாலு வெள்விடை யூர்தியி னரு
ளால், சுத்தமா மயனுஞ் சேர்ந்தினி துறைந்தே நின்றிட வவ்வி
டந் தனிலே, செத்தவர் தமக்குஞ் சீருளார் தனக்குஞ் செய்பல
னனந்தமாய்க்கூடும். (௧௬)

ஒவ்வொரு தலத்தி லோரொரு வர்க்கோர் வரமுல கெய்தி டலாலே, யிவ்வரத் துறையி லினியமா வயற்கு மெழிலுள வாதி சேடனுக்கு, மெவ்வன நதிக்கு மிசைகலைமகட்கு மிருக்குவான் மீகநன் முனிக்கும், கவ்வையை யொழித்துக் கருதியமுடித்தார் கழறவோ வித்தலப் பெருமை. (கஎ)

ஆதலா லிங்குப் பிறந்துளோ ரிறந்தோ ரழகுடன் வாசமே செய்தோர், தீதலா லொழியத் தானமே செய்தோர் தீர்க்கமாய் மனதிலே நினைத்தோர், சாதியா லிழிவை யுற்றவ ரெனினுஞ் சார்வகைப் பிறவியேழ் தனிலு, மாதியாம் பரம னருளினால் மோக்கமடைவது திண்ணமென் றறியே. (கஅ)

நீலமலர்ப்பொய்கைப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் கசுகூ

வடவால விருக்ஷப்படலம்.

கெயையொடு பிரயாகை காசி கேடிலா சனார்த்த நந்தா
னயன்றலைக் கபால க்ஷேத்திர மறையுமிவ் விடத்திற் பல்லாண்
டுயர்தரு மறமெண் ணான்கோ டுளபுண்ணி யங்கள் செய்தோர்
பயனப வர்க்க மாதிபலனெலா மெய்த றிண்ணம். (க)

ஆதலாலிங்காலின் கீழன்புட னொருகால் யாரு
மேதேனு மொன்று செய்வோர்க் கெய்திடுபலன் றான்பல்ல
ஆதியான் பங்கயத்தா னரிமுதற் றேவரெல்லா
நீதியா யங்கடைந்தே யருள்செய்வர் நியதியோடும். (உ)

தந்தையே யம்மான் றாயார் தங்கிடு மரபோரைந்தாந்
தொந்தமில் குரவராதி சொற்றிடு வோர் கட்கெல்லாம்
புந்தியில் நினைந்தே பிண்டம் புண்ணியத்தோடு செய்ய
நந்தலிற் பலன்களெல்லா நணுகிடுந் திண்ணந்தானே. (௩)

அனந்தன் செய்தவத்தைக் காண வுடைந்திடு மமரரெல்லா
லனந்தமாஞ் சிவகோடிக் கருடரும் வடவா றன்னி
லனந்தன்றன் புண்ணியத்தா லரனடி பூசைசெய்தே
லனந்தன் செய்தவம்போ லம்மாவமர்ந்தன ரென்பமாதோ. (ச)

வந்ததோர் தீர்த்த தேவர் முனிவர்கள் வானோ ரெல்லாஞ்
சிந்தனைசெய்து நின்றார் சீதர னயன் சேர்சித்தர்
விந்தையாய்ப் பலவாய்வந்த விபத்தெலாம் தீரக்கண்டே
புந்தியில் மகிழ்ந்தங்குற்றார் பூதலம் சிரேஷ்டமென்றே. (ரு)

வடவாலவிருக்ஷப்படலமுற்றிற்று.

ஆ செய்யுள் கஎச.

அன்னமலர்ப் பொய்கைப்படலம்.

தூங்கானை மாடமதி லுறைவணிக மரபுளான் றாய்கலிக் கம்பனென்பான், வாங்காமல் வருபரம வடியார்க ளுக்கனம் வழங்கிவரு நாளி லேதான், தீங்குசெய் திடுமனைவிசெய்யகைத் துணித்து பின்றேர்ந்த நல்லடியாருட, னோங்குறு மாத்துறை யினுற்றதன் பெருமைகளி லோங் கன்ன மலர் பொய்கையே. (க)

வேறு.

இந்த வோதிம மலரெனும் பொய்கையி னியமுன்
முந்து நாளையிற் கலைமகள் சாபத்தை முற்றுந்
தொந்தத் மானதைத் தொலைத்துற தோன்றிய பொய்கை
வந்த வாறிது கேட்கவென் றுரைத்தனன் வள்ளல். (உ)

மின்னு பூவுறை பிரமன்றான் மனையிட மொருகால்
தன் னிசைப்படுந் தரணியி லுயிர்களுக் கெல்லாஞ்
சென்னி மாமுகம் வேறதாய்ச் செய்குவ னென்றான்
என்னி சைக் குர லங்ஙன மில்லையோ வென்றான். (ங)

அக்கணத் தினி லயன்சினந் தரிவையை நோக்கித்
தக்க நீசரில் நாரியாய்த் தோன்றெனச் சபித்தான்
மிக்க வையநீ பனவனுய்ப் பிறந்தெனை மேவத்
தக்க நல்வரங் கொடுத்தரு ளென்னவே தந்தான். (ச)

சண்டங் கூறிய யிருவரும் பாரினிற் சார்ந்து
பண்டு சொற்படி பரிவுடன் கூடியே படியிற்
கண்டு மேயிடைக் காடரோ டதிகமான் கபிலர்
விண்ட வள்ளுவ ரவ்வையோ டெழுவ ரீன் றனரே. (ரு)

செப்பு மக்களைச் சேர்ந்தொவ் வோர் தினத்தினிற் செனிக்க
வொப்புஞ் சாபத்தை யொழித்திடப் பதுமனு முன்னி
கற்பு வாணியோ டெய்தியித் தலந்தனிற் கணவன்
றப்பி னிட்டையைப் பார்த்தன ளாதியாந் தையல். (௬)

இந்தச் சாபத்தை யொழித்திட வெனக்கரு ளென்ன
முந்தி யித்தட மூழ்கிநீ முதல்வனைக் கருதிச்
சிந்தை யுற்றிடச் செழுங்கறை மிடற்றவன் சேர்ந்து
வந்து னக்கருள் வழங்குவன் வல்லியென் றுரைத்தான். (௭)

கந்த மாமல ரோன் சொல்லு முன்றடங் கண்டே
யெந்த மாதவ மெத்தவத் தினுமரி தென்றே
விந்தை யிற்றவ மியற்றினன் விமலனும் வியந்தே
புந்தி கொண்டதிப் போதுநீ புகலெனப் புகன்றான். (அ)

எங்க ளுபகி நவின்றிடு மென்புலை நீக்கி
யங்க ளுவெனக் குரைத் தவச் சாபத்தைப் போக்கி
யெங்க ளுபக னுடன்மகிழ் வெய்தி வாழ்ந் திருப்பப்
புங்க வாவருள் வாயென வாணிபோற் றினளே. (௯)

மலரு ளோனுமவ் வரமெனக் கருளென வணங்கச்
சிலைவி லாளனுஞ் செப்பின விளைந்து நன் சிறப்பாய்க்
கலைவி னுபக வாணிய காவலை யொழிந்தே
யலையுந் தண்புன லாடலாற் சுத்தமே யானீர். (௧0)

செய்த பாவமுற் செனனத்திற் சேருந் தீவினையோ
டெய்தும் பீடையு மெழில்மனக் குறையும் விட்டேகி
நொய்தில் மாநிதி சுதன்மனை விரும்பிடு நோன்மை
யெய்து மித்தட மூழ்குவோர்க் கென்றன னிறையும். (௧௧)

அன்ன வாமென வரிமுத லமரர்க ளார்த்தார்
சொன்ன மாமலர் மாரியுஞ் சொரிந்தனர் மறைய
வன்ன மாமலர்ப் பொய்கை யின்பெருமையைச் செப்பி
பின்ன ரேகினன் பிராட்டியோ டயன்றன துலகம். (௧௨)

சொன்ன தன்றியுஞ் சூழ்தட மற்றுமொன் றுளதா
லன்ன திற்பெறும் பெருமையை யறைந்திடற் பாற்றே

மன்னு தீவினை பாற்றிட மாலுக்குப் பயந்த
தென்னு நீலமா மலர்ப் பொய்கை யென்பதொன் றிலங்கும்.(௧௩

அன்னமலர்ப்பொய்கைப் படலமுற்றிற்று.

ஆ செய்யுள் ௧அ௭.

சனி சேய் சாபம் நீங்குபடலம்.

காரிதா னிங்கே யுறைந்ததைச் சொல்வேன் காசினிக் கரச னே கேளாய், பாரினு னிராசி யீராறுமே சொந்தம் பானுமாம தி தனக்கென்பார், பாரினில் குருசேய் வெள்ளி சுழன்மேதை பணிந்திவர் வீடளியென்னச், சூரியன் மதிதான் தனித்தனி யொருவீடளித்தனர் துணிவுட னவர்க்கே. (௧)

வேறு.

பின்பு ராகு கேது வந்து பேசிவீ டிரப்பவே
யன்பு சானு முங்க ளுக்கு மாறு நாங்க ளாகையால்
முன்பு நில்லிர் போமெ னத்தா முடவன் சேய்தன் வேண்டவே
யன்பொ டொவ்வோர் வீட ளிப்ப வலரி தானுஞ் சீறியே. (௨)

வேறு.

ஆறுமே யில்லை யென்னவவ்வரா மெமக்கு மாறுச்
சேருத லறிந்த சேயே திண்மைசேர் சனியே நீங்கள்
நேரவீ டளித்ததென்னோ நீதியென் றறிந்தீர் கொல்லோ
பாரினி லும்மைப்போலப் பார்த்திலேன் தன்மவான்றான். (௩)

வேறு.

என்று சேயை நோக்கியே யீனயாலே நொந்துநீ
நன்றவே ளுரடைகுவாய் ஞானமற்ற சனியனே
உன்றன் கைகால் விரல்கடா மொழுகசீயு நொந்துமே
நின்று நீயுமலையென நினைந்து வாடினார்களே. (௪)

வேறு.

ஆகையா லிதனைத் தீர்க்க வயனிடம் வேண்டிச் சென்று
ஏகுநீ ளின்னலென்றே யென்னவே சிலநாள் சென்றால்
போகுநா ளதனைக் கண்டே புராரியைப் பூசைசெய்வாய்
ஆகமும் பண்டு போலே யழகுள்ள தாகுமென்றான். (௫)

அப்படிச் சொல்லக் கேட்ட வாதித்தன் மைந்தனென்பான்
தப்பிலாத் தலங்கள் நண்ணித் தவத்தினற் றீர்தலின்றி
யிப்புவி யெங்குஞ் சுற்றி யிங்குவர் துறைவதானுன்
செப்பினன் பட்ட தெல்லாஞ் சிறந்திடு மீசன்பாலே. (௬)

பரிந்துசன் கரண நான்கும் பண்புறு புலனை ரைந்துந்
தெரிந்தொரு வசப்படுத்தித் தியானிக்கச் சிவனேர்வந்து
புரிந்தவர் தவமுனைப்போற் பூதலத் தெங்குமில்லை
வருந்திட வேண்டா மென்று வரமவற் கருளினனே. (௭)

தந்தை சொற் சரதந் தன்னைத் தவிர்த்தவா தவத்தினாலே
யெந்தநா ளினுமி லங்கு மெழிற்பல னெளிதி னெய்திப்
பந்தமா னதும கற்றிப் பாரெலா மறியும் வண்ணஞ்
சிந்தையானது தெளிந்தே சீரெலா மடைவை யேனும். (௮)

தாதையா லடைந்த சாபந் தவிர்த்திட லாகா தப்பா
வாதலால் ஞேயுமற்ப மொருவியே யாகநீலம்
பாதமு முடவனகப் பாரினிற் றுதிப்பா ருன்னை
மீதுட னினிமையாகு மிசைசுக மினிதுண் டாமே. (௯)

இத்தனை பலனுந் தந்தே னுன்பிதா தபன னிட்ட
சத்திய விரதம் பொய்யா சதுர்யுகந் தவஞ்செய் தாலும்
வித்தையாள் கௌரி யாலும் விலக்கிட மாட்டா ளென்றே
மெத்திய தாதைபானீ மேவென வரன் மறைந்தான். (௧௦)

தொல்லைநா டொட்டே யிந்தத் தலத்துறு சுன்ஞேன் றன்னை
யெல்லையா ரேத்தித் தங்க ளிடரழிந் தெழிலை யுற்றார்
சொல்ல நான் வலனே சொன்ன சொற்படிப் பூசை செய்யில்
சொல்லிய பலன்கள் யாவுஞ் சோர்வறப் பெறுவா ரம்மா. (௧௧)

ஈதிவ ணிற்க முன்ன மிரவிதன் சாப முற்ற
மீதுள குருதி யோன்றன் மெய்தனிற் கயரோ யுற்றே
யேதுநான் செய்வே னென்றே யெண்ணு ந வெண்ணிச்செவ்வாய்
தீதினல் மயங்கி யொன்றுந் தெளிவிலா தலைவதானுன். (௧௨)

பித்தனய் மயங்கி நெஞ்சம் பிதற்றிடும் படியாய் நின்று
னெத்தின வுலகைக் காப்பே னென்பிணி தீர்ப்பா ருண்டோ

சித்தனே சிவனே யென்றுஞ் சேயுமைக் கரனே யென்றும்
முத்தனே வரனே யென்றும் முதல்வனைப் போற்றி செய்தே.( )

இப்படித் தலங்கடோறு மினிதிருந் தனேக நாட்கள்
டப்பிலா தவங்கள் செய்து தன்பிணி தணிபா தாக
விற்பிடி மேருக்கையான் விளங்கரத் துறையினண்ணி
மெய்ப்படிந் தவரை நோக்கி மேவினன் றவம் பண்ணுடாம்.(௧௪)

சிந்தை யைந்தொன்றுஞ் சேர்ந்து செழும்பொறி யீசன்பாலே
யுந்தினன் முகத்தால் நோக்கி யோர்கையை யூன்றி மண்மேல்
சிந்தையாய் மட்டியிட்டு வேண்டினன் சிவனெம் மானைக்
கந்தனைப் பயந்த கொன்றைக் கடவுளு மங்குவந்தார். (௧௫)

நொந்தனை யென்னை பேதா னேற்றனோன் பதனு லென்று
அந்தனை வென்ற வையன் செகத்துறை யாவருக்கும்
பந்தனை நீக்கு மெங்கோன் பார்த்துச்செவ் வாயை யன்பால்
சுந்தரப் புமானேயென்று சோதியான் றுலங்கச் சொன்னான்' ( )

பெற்றனை சாபந் தன்னைப் பேசிர விபினு லஃதைச்
சற்றுநாள் கழிந்த பின்னர் சாருமிந் நதியி லாடி
யுற்றிடுஞ் சாபநீங்க வுனக்குள்ள குறைகடேரும்
நற்றவப் பலனுண்டாகு நண்ணுவை பழமை போலே. (௧௭)

கர்த்தனு ரருளாற் செவ்வாய் கடுகவே சுவேதை யாடிப்
பத்திர மலர்க ளாதிப்பலவுமே கரத்திற் பெற்றுச்
சித்தனு பவனுஞ் சேர்ந்து செப்பிய வழிமே காதி
முத்தனைப் பூசித் துற்றே முதன்மையாய் விளங்கினனே. (௧௮)

சனிசெய்சாபநீங்குபடலமுற்றிற்று.

ஆக செய்யுள் ௨௦௫.

உபதேசப்படலம்.

இத்தல மமர்ந்த செய்கை யிதில்வரம் பெற்ற தெல்லாஞ்
சுத்தமாய்க் கேட்டு நின்ற சுருதிவான் மீக னென்பான்
புத்தனைப் புவன மூன்றும் பாலனஞ் செய்யு நந்தி
யுத்தம பாதம் போற்றி யுரைத்திடு காதை சொல்வாம். (௧)

வேறு.

ஆனன நான்கினா னரும்ப டைப்பினிற்
றானென முன்வருந் தக்க வேந்தனைப்
பானுவின் குலத்தினிற் பண்பு தோன்றவே
வானலர் பூவென வந்து தித்தனன். (௨)

அவன்பெயர் யாதெனி னற்பு தத்திரி
புவனவேந் தென்னவே போற்ற லாயினான்
சிவனிடத் தன்புகொ டேறு வேந்தனைப்
புவனியில் யாவரும் புகலல் மேயினார். (௩)

வேறு.

தருமமேயுரு வாகிய சாந்தனாங்
கருமமன்னவன் காசினி யாத்திரை
வருமணி கத்தொடு வாழ்த்தெ டுக்கவே
வருவ னாயினன் வாதைகள் மாற்றவே. (௪)

தீங்கிலா வேந்தனுந் திருவரத் துறையுற
நீங்கிட வினையது நிமலன் பாதமே
தாங்குவான் மீகனாந் தவத்தன் றன்னையே
வீங்கிடும் புயமனன் வெளியிற் கண்டனன். (௫)

இப்படி யன்புட னிறைவன் பார்த்துழித்
தப்பிலா முனிவரன் றரணி மன்னவ
கற்புட னிவண்வருங் கருத்தென் கூறென
ஒப்பிலா முனிவவெற் குன்னரு ளீயென. (௬)

அய்யனே வரசனே வறைந்த வாசக
தொய்யல தெனினுநா னொடியிற் செய்குவேன்
பொய்யிலை யிதுநிசம் பொருந்தக் கேண்மதி
வெய்யவன் குலத்துளாய் விகற்ப மின்றியே. (௭)

என்றிட விறைவனு மெழுந்து போற்றியே
பண்டைநாள் வயதுளாய் பகரு நின்மொழிக்
கொண்டிடக் காத்தனன் கொடியற் கன்புடன்
தொண்டனா னாதலின் றொழும்ப னாகுவன். (௮)

நன்றுநீ யுரைத்தது நல்ல தாகையா
லின்றுனக் கருளுவே னினிய வாசகந்

சென்றுநீ ராடியே சிவனை நாரியைக்
கன்றுமி லன்புடன் கண்டு வாவென. (௯)

வேறு.

அந்தமுனி யுரைத்தபடி யப்புனலிற் றோய்ந்தெழுந்தே
யவனைப் போற்றிப், பந்தமகல் முனிவோர்கள் பலருடனே யுப
தேசம் பகர்வான் மீக, விந்தையுரைப் படிமுறையே சமித்து
நெய்தீ முதலாக வேண்டும் யாவும், வந்தனையிற் கொணர்ந்திட
வே பேற்றதின்பின் னனுஞைரக்ஷை வகையிற்செய்தே. (௧௦)

செய்முறையுங் கைமுறையுஞ் சிறிதேனும் பிசகாமற் சுர
மேறாம, லவ்வகையே மனுப்பகர்ந்தே யொழுங்குடன் குண
மாதியுளத்திற் கொண்டே, யையமறா வாரமல கமகிழ்ந்தே
யவிப்பாக மளித்தே யார்க்குந், தெய்வமுனி யரசனுக்குங்
கொடுத்திட்டே யுபதேசஞ் சிறப்பச் செய்தான். (௧௧)

சித்தமதி லாங்கார மகற்றியபின் சேர்ந்தொருமை யாகும்
வண்ணாந், சித்திபெறு மைவிடாஞ் சேராமற் சிவனருளே
சேரு ஞான, முத்திபந்த முனியன்று னுபதேச மொழிந்தி
டவே முழு நாமோர்ந்து, வித்தமொடு நாசுமணி வெண்பசுவே
புவிமுதல வேட்டோர்க் கீந்தே. (௧௨)

இப்புவியா வரசனவன் முனிவர்களுக் கிறையான வெழில்
வான் மீகன், செப்பமல ரடியி றைஞ்சி யென்பரிசு செய்வதினி
செப்பு வாயென், றற்புடனே வேண்டிடவே யரசனைப்பார்த்
தருமுனிவ னமலன் பாதந், தப்பிலாத் திருவினதான் மும்மல
மும் புறங்கொடுக்கத் தனிபறைப் (௧௩)

வேறு.

தேசிக னுரையைக்கேட்ட தெளிவுள வரசன்றானு
யாசிலா தேசி கற்கு மனதுடன் குருதாக்ஷிணைக்கை
யேசிலா தீபா விட்டா லெனக்கொரு பலனுண்டாமோ
வாசவன் வணங்க வாழும் வனசத்தாள் முனிவ யென்றான். ()

விண்டவ னுரைக்கக்கேட்ட வான்மீக முனிபா மேலோன்
கண்டிகை யாரத்தாய்நீ கருதிய வண்ணா மரிகத்

தொண்டனை யாரு மன்பாற் றொகையிலா நிதியைப் போட்டுக்
கண்டவிவ் வால யத்தைக் கட்டியே முடிப்பையென்றான். (கரு)

அங்கதை யுரைக்கக் கேட்ட வரசனு மகம கிழ்ந்தே
யிங்குள வால யத்தை யெழில்பெறச் செய்யுங் கொத்தர்
பங்குள சிற்பமாரைப் பலரைக் கொண் டரிதாய்ச் செய்வித்
திங்குள விருடி தன்னைத் தெரிசித்தே யெடுத்துச் சொன்னான்.

ஆக்கினைப் படியே யந்த வாலய மதில்கடோபி
சீக்கிர முடித்துச் செய்தேன் றெரிநதிடு மண்ட பங்கள்
காக்குநல் லாகமத்தின் கருத்துள படியே கற்றோர்
வாக்குறை வழாது நிற்க வகையுடன் வகுப்பித் தேனே. (கஎ)

இன்னுநான் புரியும் வேலை யின்னதென் றருள்வா யையா
சொன்னதோர் தலத்தின் வண்மை சொல்லவும் வேண்டுமென்ன
வன்னவர்க் காசை யோடு மரத்துறை தலத்தின் றன்மை
முன்னநா னந்தி சொன்ன முறையெலா மொழிய லுற்றான். ()

பின்னுமே யுரைக்கக் கேட்பாய் பெரும்பதி யிதனில் வைகுந்
தன்னுள நதியுந் தாருந் தருஞான வரவத் தோனு
மென்னுளத் தினுமே தெய்வமெவருவந் திறைஞ்ச லாகு
முன்னவ னனவீச னுறைதல மேன்மை முற்றும். (கக)

அத்தல மனேகத் துள்ளு மணிபெறு மாயி ரதெட்
டத்தலத் ததினு மேன்மை யறுபத்து நான்கேயாகுஞ்
சுத்தமா மதனி னைந்து சுருக்கிடின் முதன்மை யையா [மேலோர்
முத்தியைக் கொடுக்குமென்று மொழிந்தனர் மறைநூல் வல்

வேறு.

என்றெடுத் தியம்பியேழ் துறைத்தல மிந்நதிக்
கன்றுள வென்னலா லவற்றை யன்புட
னின்றுனக் கெடுத்துநா னிசைப்பன் கேளெனச்
சென்றதை புணர்ந்திடு நந்தி செப்புவான். (உக)

உபதேசப்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் உஉ௬.

திருவதிட்டத்துறைப்படலம்.

கடையுகத்தின் கதையிதென வதிசயித்துக் காவலன்றான்
கழறக் கேட்டே, யிடையிலுள சதுர்யுகங்க ளீரேழு கடந்த
தென் விறைமாழாந்து, புடையிலுள தலப்பெருமை புகலுமெ
னப் பொன்னடியைப் போற்றிநிற்க, மடைதிறந்த வெள்ளமெ
ன மாமுனிவன் புகலலுற்றான் மன்ன னுக்கே- (௧)

இப்பதியின் மேற்குளது வதிட்டகுடி யெனறிசைப்பா
ரெவரும் பாரில், செப்புதல மதற்குவமை செகதலத்தி னிலை
யென்பார் சீராய்க்கேட்டுத், தப்புடைக்கும் வேங்கைவனத் தர
ணிபனுப் பின்னகரந் தன்னைக்கண்டான், ஒப்பிகந்த வசிட்டமு
னியுறைந்திருக்கு மதிசயத்தை யுரைக்கக் கேளாய். (௨)

வேறு.

